விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 01 ஞாயிற்றுக்கிழமை (14.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

## ஜனாதிபதி கோட்டா - இந்திய பிரதமர் மோடி தொலைபேசியில் விசேட கலந்துரையாடல்

### ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு ஆராயப்பட்டதாக தகவல்


கோப்புப்படம்

(புதுடில்லி)
ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்தியப் 15

## பிக்கப் மோதி படுகாயமடைந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
பிக்கப் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 15

## வவுனியாவில் ஹெரோயினுடன் இருவர் கைது

(வவுனியா)
வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவிற்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் நேற்று பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர். 15

# அதிகாரப் பகிர்வுடன் தமிழர்களுக்கு தீர்வு

## இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை கூட்டமைப்புடனான சந்திப்பில் கோபால் பாக்லே

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் மகத்தான தீர்வு என்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க)





## மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துங்கள்

05ஆம் பக்கம் பார்க்க

### நிலாவெளியில் காணாமல்போன
## குப்பிழான் இளைஞனின் சடலம் கரையொதுங்கியது



(யாழ்ப்பாணம்)
திருகோணமலை நிலாவெளிக் கடலில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கிக் காணாமல்போன மற்றைய இளைஞனின் 15



## விக்னேஸ்வரன், கஜேந்திரகுமாரை தனித்தனியாக சந்தித்த இந்தியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர் 15



## தென்னாபிரிக்காவில் பரவும் கொரோனா இலங்கையில் பரவும் அபாயம்

### மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
தென்னாபிரிக்காவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்டதை அடுத்து ஏற்படக்கூடிய நிலை 15

### பொலிஸார்போல் பாசாங்கு செய்து
## மீன் வியாபாரியிடம் பணம் கொள்ளை
### வல்லிபுரத்தில் சம்பவம்

(கரணவாய்)
பொலிஸார்போல் பாசாங்கு செய்து மீன் வியாபாரியின் 14 ஆயிரம் 15

## இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை

### தி.மு.க தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(சென்னை)
தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தி.மு.க தனது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது.
இந்த நிலையில் 15

## கொரோனாவால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றால் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் நேற்று உயிரி 15

## வடக்கில் 7 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். 15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சோ(f)பா கிளீனிங்

கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை கிளீன் செய்து புதியதாக மாற்ற அழையுங்கள். (6156)

**077 224 2787**

## PERSONAL CLASS

**Personal Classes ( Gr : 9 - 11 )**

Science, Ict, English, Eng. Litreature
பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். (6155)

**077 444 3859**

( யாழ். பிரதான வீதி அருகாமை )

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 41 வயது, திருமணமாகாத, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
( சீதனம் எதிர்பார்ப்பில்லை ) (6163)

( Viber, WhatsApp )


**077 905 8615**

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, மூளாய் வீதி, உடுக்கியவளை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. (6081)

**077 819 1314**


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் வீரசிங்கம்

**பிறப்பு : 19.09.1944**
**இறப்பு : 13.03.2021**

யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை, தம்புவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வீரசிங்கம் நேற்று (13.03.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும் பவளம், பாலசிங்கம், இரத்தினசிங்கம் (லண்டன்), நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6160)

தம்புவத்தை, ஏழாலை. 076 983 9038 தகவல்:- குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

பொருட்களை எடுத்துச் சென்று விநியோகிக்கும் வாகனத்திற்கு உதவியாளர்கள் தேவை.

AD வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி தேவை. (40 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

**கோண்டாவில், திருநெல்வேலி, உரும்பிராய், ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி பகுதிகளிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.** (6153)

**☎-077 009 0189**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலவீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (6152)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# NEW SCIENCE HALL

Kannathiddy Road , Jaffna

## நேரடியான வகுப்பு (Direct Class)

## 2023 A/L CHEMISTRY

(2021 இல் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரியது )

# K.MYURRAN

**Monday - Thrusday** காலை 7.30 a.m – 9.30 a.m

Unit - 01 அணுக்கட்டமைப்பு (6151)

ஆரம்பம் 15.03.2021 காலை 7.30 a.m

இறுதிப்பரீட்சையை மையப்படுத்திய தெளிவான , இலகுவான கற்பித்தல். பாடசாலை தவணைப் பரீட்சைக்கு உரிய வகையில் பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படும். Model Exams & Discussions . New Syllabus இற்கு அமைவான கடந்த கால வினாக்கள் பூரண விளக்கங்களுடன் கற்பிக்கப்படும். அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அரசின் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு 076 566 3006
074 0324 986


## மணிவிழா வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமான
உயர்திரு.

### செல்வரட்ணம் சந்திரராஜா

அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்கள்.



கண்ணியம் கடமை பேணும்
கவின் தலைமை நீரே...
ஒழுக்கத்தில் கடமை பேணி
வழுவில்லா பண்பாளனாகி
வள்ளுவன் குறளை ஒத்தாய்
வழுவிலாச் சேவையிலே...
பாங்குடன் மறவோம் – நினது
பழுதிலாச் சேவையை...

Best Wishes

பணிசெய்தீர்...
சங்கீத சபையினுக்கோர் தலைமகனாய்
துணிவுதனைத் துணைகொண்டு
நிர்வாகம் நிலைநாட்டி – என்றும்
அன்புதனை அணிகலனாய் கொண்டீர்.
என்றும் உமது சேவை தொடர
மணிவிழா நாளில் நின்று வாழ்த்துவோம்
வாழி வாழி....

வாழ்த்துவோர்
வடஇலங்கை சங்கீத சபை
உத்தியோகத்தர்கள்

(C-1687)

# அதிகாரப் பகிர்வில் உறுதி:தமிழ் நாட்டுடனான போக்குவரத்துகளும் விரைவில்

## யாழில் கோபால் பாக்லே உறுதி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு மூலமாகத்தான் தீர்வு என்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாக இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான நேற்றைய சந்திப்பில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, நேற்று பல்வேறு தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன், ஈழத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் போக்குவரத்துச் சேவைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், இந்தியா தொடர்ந்தும் முன்னர் உள்ள நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் அது முழுமையான அதிகாரப் பகிர்வு உள்ள ஒரு விடயமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் எப்பொழுதும் மாறாத தீர்மானத்துடன் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார். அது, கொழும்பிலாக இருக்கட்டும் ஜெனிவாவிலாவது இருக்கட்டும் ஒரே நிலைப்பாடுதான் இருக்கும் என்று உறுதியளித்துள்ளார்.



இந்நிலையில், இந்திய மக்களோடு அதாவது, தமிழ் நாட்டில் உள்ள மக்களோடு இருக்கின்ற தொடர்பாடல் சம்பந்தமாக பலாலிக்கும் சென்னைக்குமான விமானப் போக்குவரத்து வெகு விரைவிலே ஆரம்பமாவதுடன் காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலமாக, தமிழ் மக்களுக்கு இடையிலே உறுதியான ஒரு தொடர்பாடலை ஏற்படுத்தி, பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாகவும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை நாம் அடைய முடியும் என்ற கருத்தை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வெளிப்படுத்தியுள்ளதாக சுமந்திரன் தெரிவித்தார். (நி-4)

## ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்தும் உறுதிப்பாட்டில் இலங்கை

(கொழும்பு)

ஜனநாயகக் கொள்கைகளை நிலை நிறுத்துவதிலான உறுதிப்பாட்டை இலங்கை கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஜெனிவா தொடர்பான புத்தக வெளியீட்டில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தூதுவர்கள் மன்றத்தினால் தொகுக்கப்பட்ட "ஜெனிவா நெருக்கடி - முன்னோக்கிச் செல்லும் வழி" என்ற புத்தகம் வெளிவிவகார அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. (நி-4)



போக்குவரத்து பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளை நூலகங்களாக மீளப் புதுப்பிக்கப்பட்டு நூலகங்கள் அற்ற பாடசாலைகளுக்கு வழங்கும் "பேருந்தில் எதிர்காலத்திற்கு" திட்டத்தின் இரண்டாம் கட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றது. அதற்கமைய 20 மாவட்டங்களில் நூலக வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு இவ்வாறு பேருந்து நூலகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## தமிழர் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை இந்தியா வலியுறுத்த வேண்டும்

### கஜேந்திரகுமார்

(கொழும்பு)

தமிழர் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதில் இந்தியா காத்திரமான பங்கை வகிக்க வேண்டும். அத்துடன், சர்வதேச விசாரணையை இந்தியா வலியுறுத்த வேண்டும் என நேற்று இடம்பெற்ற இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.



அத்துடன், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மதிக்கிறோம். ஆனால் அதன் வழியான 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தீர்வாக ஏற்க முடியாது.

தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வை தொடர்ந்தும் வலியுறு த்துவோம் எனவும் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்தார்.

இந்திய பாதுகாப்பு நலன்களுக்கு தமிழர் தேசம் ஒரு கவசமாகவே இருக்கும். நாம் இந்திய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்ல. பூகோள அரசியல் போட்டியின் பகடைகளாக இலங்கையின் வட-கிழக்கு பகுதியை இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கிறோம் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார். (நி-4)

## குழப்பத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கின்றனர்

(கொழும்பு)

பல்வேறு தரப்பினர்கள் தமது குடும்பத்தில் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவ்வாறு இந்தக் குடும்பத்துக்குள் யாராலும் குழப்பங்களை ஏற்படுத்திவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபை மன்றத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த ராஜபக்ஷ நமக்கு மட்டுமல்ல, முழு ஆசியாவிலும் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என்பதனை அனைவரும் அறிவர். அவருடைய அரசியல் அறிவை யாரும் நெருங்க முடியாது. அத்தகைய தலைவர் ஒருவர் நாட்டை வழிநடத்துவது ஒரு பெரிய பாக்கியம் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, பசில் ராஜபக்ஷ இந்த நாட்டில் ஓர் அரசை உருவாக்கிக் கொடுப்பத்தில் முன்னின்று செயற்பட்டார் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அத்தகைய இரண்டு தலைவர்களுடன் அரசை முன்னெடுத்துச் செல்வது மிகவும் எளிதானது. இதேவேளை, நான் வழங்கும் நியமனங்களில் மகிந்த ராஜபக்ஷ ஒரு போதும் அழுத்தங்களைக் கொடுத்ததில்லை. அதேபோன்று பசில் ராஜபக்ஷவும் அந்த விடயங்களில் தலையிட்டதில்லை.

இவர்களின் ஒத்துழைப்புடன் நாட்டை எந்தவாரு நெருக்கடியும் இல்லாமல் முன்னோக்கிக் கொண்டு செல்வோம் என்று தைரியமாகக் கூறுகின்றேன்" என ஜனாதிபதி தெரிவித்தார். (நி-4)

AL - 2023
Bio & Maths
English & Tamil Medium
Zoom ஊடாக
ஆரம்பம் : 14.03.2021 ஞாயிறு
PHYSICS
S.R.Jeyakumar B.Sc, PGDE
S.Srikanagasabai M.Sc, PGDE
CHEMISTRY
V.Parameshwaran B.Sc, PGDE
S.V.Selvaranjan B.Sc, PGDE
COM.MATHS
S.Premnath B.Sc
V.Rajaratnam B.Sc, PGDE
BIOLOGY
V.Umashanger B.Sc, PGDE
R.Mahima B.Sc, PGDE
ICT
R.Mathisugan B.Sc.
Wed : 2.30 pm -.4.30 pm
அறிமுக வகுப்பு:14.03.2021 Sunday 9.30am - 11.00am
கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
NOBLE ACADEMY
No.6C, Ramakrishna Terrace Col-06
011 236 3831/011 236 0848
Whatsapp : 076 758 0659 (Messege Only) (6134)

IMMEDIATE VACANCINS
1. Lecturer for
• Civil Engineering / Quantity Surveying (NVQ 5/6)
2. Teachers For A/L Technology Stream
• ICT Technician (NVQ 4)
• Graphic Designing (NVQ 4)
3. Teachers For A/L Classes
• E-Tech (Civil only) , ICT, SFT,
*An Experienced retired Government Lecturer / Teacher or a Graduate with Teaching Experience.*
4. MARKETING Executive (Education)
Previous Experience Will be the an added Qualification
Managing Director
APSS INTERNATIONAL
No, 189,K.K.S Road, Chunnakam, Jaffna.
E-mail :- apssengineering@yahoo.com
Contact No :- 021 2244 666 (6154)


# கூறுவிலை கோரல்
## திகதி நீடித்தல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் மதுசார உற்பத்தியை மேற்கொள்வதற்காக புதிய நவீன முறையிலான தொடர் வடிசாலை கட்டடத்தை ஏனைய வசதிகளுடன் நிறுவு வதற்கான கூறுவிலையினையும் தற்போது பயன்படுத்தும் பானை முறை யிலான வடிகலன் பொறித் தொகுதியை திருத்தம் செய்வதற்கான கூறுவிலை யினையும் இத் தொழிலை மேற்கொள்ளும் அனுபவம்வாய்ந்த பொறியிய லாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அலுவலக வேலை நாட்களில் எம் மோடு தொடர்பு கொண்டு கூறுவிலையை வழங்க முடியும். (021 205 0854) இக் கூறுவிலைகளை எதிர்வரும் 20.03.2021க்கு முன்னர் தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

க.துரைசிங்கம்
தலைவர்

(C-1693)

# LAND FOR SALE



## காணி விற்பனைக்குண்டு
### புன்னாலைக்கட்டுவன், அச்செழுவில்

உங்கள் இல்லத்தை அமைத்துக்கொள்ள அனைத்து வசதிகளும் கொண்ட யாழில் மிக அருகாமையில் மிகக் குறைந்த விலையில் குடியிருப்பு காணி ஒன்றினை பெற்றுக்கொள்ள உடனே முந்துங்கள்.

- மொத்தமாக 98 பரப்புகள் உள்ளன.
- உங்கள் தேவைக்கு ஏற்றாற்போல் பிரித்துத்தரப்படும்.
- அனைத்து ஆவணங்களும் தெளிவாக உள்ளன.




HEAD OFFICE
No.14, Pon Ramanathan Road,
Parameswara Junction, Thirunelvely.
Tel : 0212213777

Tel: 0772757484 / 0771048865

(6146)

# வீடு, காணி விற்பனைக்கு

1. கொக்குவில் கிழக்கு, அம்மன் வீதியில் 2¾ பரப்பு காணியுடன் வீடு.
2. நுணாவில் A9 வீதியோடு 12 பரப்புக் காணி.
3. கோப்பாய் இராச பாதை வீதியில் 7 பரப்புக் காணி.
4. யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் 3 மாடி கடை.
5. யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் 1½ பரப்புடன் கடை.

(6146)

**N.R Land Estate Agent**
இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
தொடர்பு:- 077 275 7484, 077 104 8865

# காணி விற்பனைக்கு

நொத்தாரிஸ் தோட்டம், கரணவாய் மேற்கில் அமைந்துள்ள நிலப் பரப்பு 21 விஸ்தீரணம் கொண்டதும் ஈரப்பலா மரங்களும் 100 தென்னம்பிள்ளைகளும் எக் காலமும் நீர் வற்றாத வெட்டுக் கிணறும் வேறு கிணற்றில் 4 அடி வழி வாய்க்காலும் ஒரு நாள் தண்ணீர் பங்கும் நான்கு பக்கமும் கொங்கிறீட் தூண் நிறுவப் பட்டு முட்கம்பியால் அடைக்கப்பட்ட வேலியுடன்கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. நீதிமன்றால் பிரிவிடல் செய் யப்பட்ட உறுதி நான்கு இஞ்சி வாட்டப்பம் புதிதாக போடப்பட்டது. பருத்தித்துறை யாழ்ப்பாண வீதிக்கு ¼ மைல் தூரத்தில் உள்ளது.

நேரில் தொடர்பு கொள்ளவும்
வே.தம்பிப்பிள்ளை
'சிறிபதி இல்லம்'
இலகடி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
T.P - 076 332 1357

(C-1689)

# ஈர விழிகளுடன்
# ஈராண்டு



## திருமதி தங்கமலர் நவரத்தினம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27.04.1949 | 14.03.2019 |

வருடங்கள் இரண்டாகின்றது
வலியோடு நகர்கின்றது
மணித் துளிகளும் நாட்களும்
மண்ணைவிட்டு நீ போனாலும்
எம் மனதை விட்டு நீ போகவில்லை
தேற்றுவார் யாருமின்றி
திக்கற்று நிற்கின்றோம்
கனத்த இதயத்துடன்
உன் ஆசைகளும் எதிர்பார்ப்புகளும்
நிறைவேறுவதை விண்ணிலிருந்து
நீ காண்பாய் என்ற நம்பிக்கையுடன்
உனது ஆசீர்வாதத்தை வேண்டி
நகர்கின்றது ஒவ்வொரு விநாடியும்...

*ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!*

திருநெல்வேலி (C-1692) தகவல்: குடும்பத்தினர்

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)

## வருடாந்த பொதுக்கூட்டமும் 2021/2022 காலப் பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வாக்கெடுப்பும்

### 2021 / 2022 காலப் பகுதிக்கான புதிய நிர்வாக சபை தெரிவிற்கான வாக்கெடுப்பு

| | | |
|---|---|---|
| காலம் | :- | 2021.03.21 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | :- | காலை 8.00 மணி முதல் காலை 10.00 மணி வரை |
| இடம் | :- | கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர்கூடம். |

### வருடாந்த பொதுக்கூட்டம்

| | | |
|---|---|---|
| காலம் | :- | 2021.03.21 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | :- | காலை 10.30 மணி |
| தலைமை | : | திரு.ஆ.சத்தியமூர்த்தி |
| இடம் | :- | கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர்கூடம். |

*அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

விக்னேஸ்வரன் தயாபரன்
செயலாளர்
077 608 0926

(C-1690)

# மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**மாகாண சபை தேர்தல் தொடர்பில் முன்வைக் கப்பட்டுள்ள சட்ட வரைபு அல்லது அதில் உள்ள குழப்பங்களை நீக்கி அந்த தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.**



தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது சதவீத மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட விடயங்கள் கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்ட வரைபு அவர்களினாலே தோற்கடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை குழுவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# புர்காவுக்குத் தடை; கையெழுத்திட்டார் அமைச்சர்

(கொழும்பு)

முகத்தை மறைக்கும் வகையில் முஸ்லிம் பெண்கள் அணியும் புர்காவை இலங்கையில் தடை செய்வதற்கான யோசனை நாளை திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-4)

## பிரதமர் பங்களாதேஷ் பயணம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19 ஆம் திகதி பங்களாதேஷிற்கு விஜயம் செய்யவுள்ளார். பங்களாதேஷ் நாட்டின் அழைப்பை ஏற்று அங்கு செல்கின்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருப்பார். மேலும் இந்த விஜயத்தின்போது அவர் பங்களாதேஷ் நாட்டின் அரச பிரமுகர்களை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அரச சேவையில் மகப்பேற்று விடுமுறை குறைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் அரச சேவையில் புதிதாக இணைந்துகொண்ட, பல்லாயிரக்கணக்கான பெண் பணியாளர்களின் மகப்பேறு விடுமுறையை பாதியாகக் குறைப்பதற்கான, இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மீண்டும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த அபிவிருத்தி ஊழியர் நிலையம், தொழிற்சங்கங்கள் மற்றும் பெண்கள் அமைப்பு இணைந்து இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளன.

மகப்பேறு விடுமுறை குறைக்கப்படுவதற்கு எதிராக கடந்த வருடம் செப்டெம்பர் 7 ஆம் திகதி செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணை மேற்கொண்டது.



அரச சேவையில் உள்ள தாய்மார்கள் இதுவரை அனுபவித்த 12 வார மகப்பேறு விடுமுறையை, இந்த வருடம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆறு வாரங்கள் மாத்திரமே வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெண்களுக்கான 84 நாட்கள் மகப்பேறு விடுமுறையை, 42 நாட்களாகக் குறைப்பது பிறக்காத குழந்தைகளின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-4)


## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Leading Pest Control கம்பனிக்கு பணியாளர்கள் தேவை

Got pests? Get active

**Labour / Technicians**

- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்பச் சம்பளம் + EPF/ETF + சலுகைகள்
- வாகனம் செலுத்த தெரிந்திருத்தல் வேண்டும்
- **Operation Executive**
- ஆங்கில மொழி தெரிந்திருத்தல் வேண்டும்
- கணனி அறிவு

தங்களது CVயை (சுயவிபரத்தை) termite.com@gmail.com/ இல-06 புகையிரத லேன், சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (6144)

தொடர்புகளுக்கு:- 076 315 6802 / 021 492 7626

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. (இருபாலாரும்) மற்றும் வீட்டு வேலைக்கும் ஆட்கள் தேவை (C-1236)

தொடர்பு:- 077 375 3503

## சேவை

உங்களது பெறுமதியான காணி வீடு மற்றும் வியாபாரம் போன்றவற்றை விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்டங்களில் எமது சேவைகளை நீங்கள் பெற முடியும். உங்கள் நம்பிக்கைக்குரிய சேவைக்கு தொடர்பு கொள்ளவும். (4622)

GOLDEN PROPERTY MANAGEMENT CENTER

தொடர்பு கொள்ளவும்.

0754105230 / 071 0729870

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தை Station அருகில் சகல தளபாடங்களுடன் தனிவீடுகள் Separate Sanitizer Rooms With Attached Bathroom வாடகைக்குண்டு.

விஷேட வைபவங்களுக்கும் வீடுகள் 2,3,6 அறைகள் Fully Furnished நாள் வாடகைக்கு. (C-1201)

தொடர்பு: 071 066 7511

077 766 7511

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 பல்கலைக்கழக பேராசிரியர் கார்த்திகை 4 மணமகனுக்கு தகுந்த நற்குணமுள்ள மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை (1234)

தொடர்பு:- 077 784 0262

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## பணியாளர் தேவை

வெள்ளவத்தை கொழும்பு -06 இல் வசிக்கும் தமிழ் இந்து குடும்பத்தினருக்கு தங்களது இரு குழந்தைகளை தங்கி நின்று கவனிப்பதற்கு அனுபவம் வாய்ந்த தொடர்ந்து 1 வருடத்திற்கு மேல் வேலை செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை

தொடர்பு :- 077 522 2613 (C-1232)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி தோப்பு தொழிற்பேட்டை வீதிக்கு அருகாமையில் செம்பாட்டு நிலச் சூழலில் அமைந்துள்ள உறுதியுடன் கூடிய நீள்சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. 14 பரப்பு, 5.60 குளி ஆழமான கிணறு உண்டு. 3 பரப்பு திருத்தப்பட்டுள்ளது. (தரகர் தேவையில்லை) (C-1233)

தொடர்பு :- 071 836 1706

## மணமகன் தேவை

1985, யாழ். இந்து கௌரவ குடும்பம், திருவோணம், Executive, யாழ்ப்பாணம்.

பதிவு: 5249

Ensured Quality Lanka Bamblapity

www. EQ MarriageService. com

076 664 9401. (C-1231)

## மணமகன் தேவை

1993, யாழ். இந்து கௌரவ குடும்பம், ஸ்வாதி, Teacher, யாழ்ப்பாணம்.

பதிவு: 5557

Ensured Quality Lanka Bamblapity

www. EQ MarriageService. com

076 664 9401. (C-1231)

## மணமகன் தேவை

1975, யாழ். இந்து கௌரவ குடும்பம், புனர்பூசம், Bank Asst. Manager, திருகோணமலை.

பதிவு: 5484

Ensured Quality Lanka Bamblapity

www. EQ MarriageService. com

076 664 9401. (C-1231)

## மணமகன் தேவை

1979, யாழ். இந்து கௌரவ குடும்பம், அவிட்டம், Teacher, கிளிநொச்சி

பதிவு: 5541

Ensured Quality Lanka Bamblapity

www. EQ MarriageService. com

076 664 9401. (C-1231)

## மணமகன் தேவை

1986, யாழ். இந்து கௌரவ குடும்பம், உத்தரம், D.O, தென்மராட்சி.

பதிவு: 5410

Ensured Quality Lanka Bamblapity

www. EQ Marriage Service. com

076 664 9401. (C-1231)

# தற்போதைய காலப்பகுதி அபாயகரமானது சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவது அவசியம்

## அரச அதிபர் மகேசன்



(நல்லூர்)

**தற்போதைய அபாயகரமான சூழ்நிலையில் பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்துவது அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டத்தின் முடிவுகள் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட கொரோனா நிலைமை தொடர்பாக ஆராயும்விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. அதனடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வருடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்து செல்கின்றது.

எனவே பொதுமக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டிய காலகட்டமாக இந்த காலப்பகுதி காணப்படுகின்றது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோருக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்தும்சிலவேளைகளில் அலட்சியமாக செயற்பட்டதன் காரணமாக அதாவது விழாக்கள், ஆலய திருவிழாக்கள், போக்குவரத்து செயற்பாடுகளின் போது சுகாதார நடைமுறையினை பின்பற்றாததன் காரணமாகவும் இருக்கலாம். அதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரங்களில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டது.

அதனடிப்படையில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சில அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் 50 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

அதேபோல் மரண வீடுகளில் 25 பேரும் சமூக கூட்டங்களில் 150 பேர் மாத்திரமே அனுமதிப்பது எனவும் திருமண நிகழ்வில் 150 பேராக மட்டுப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஏனைய களியாட்ட நிகழ்வுகளுக்கு தடை செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் விளையாட்டு நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகளிற்கு கட்டுப்பாட்டுடன் அனுமதி வழங்குதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்விச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய வாழ்வாதார செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் வழமை போல் இடம்பெற்று வருகிறது.

குறித்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக மக்கள் இயல்பாக மேற்கொள்வதற்கு சுகாதார நடைமுறைகளை மிக்வும் இறுக்கமாக பின்பற்றி தங்களுடைய குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும்.

தற்போதைய காலப்பகுதி ஒரு அபாயகரமான காலப்பகுதி. எனவே பொதுமக்கள் பீதி அடையாமல் தமது அன்றாட செயற்பாடுகளை சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்தார். (5-4-33)

# சா/த இற்கு கீழ்ப்பட்ட வகுப்புகளுக்குத் தடை

(குப்பிழான்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் வெள்ளிக்கிழமை தோறும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்துக்கு (தரம்-11) கீழ்ப்பட்ட அனைத்து வகுப்புக்களும் முற்றாகத் தடை செய்யப்படுவதாக நல்லூர் பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆலயங்களில் அறநெறி வகுப்புக்களை நடத்தும் நோக்குடனேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தவிசாளர் ப. மயூரன்தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தவிசாளர், கடந்த மாதம் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளை அழைத்து அறநெறி வகுப்புக்களை நடத்துவதற்காக வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய வகுப்புக்களைத் தடை செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக நாங்கள் நல்லூர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு கதைத்த போது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்துக்கு கீழ்ப்பட்ட அனைத்து தனியார் வகுப்புக்களையும் வெள்ளிக்கிழமை தோறும் முழுமையாக தடை செய்வதற்கு அனுமதித்தனர்.

மேலும் இதனை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நல்லூர் பிரதேச சபை நிர்வாகம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# கூட்டுறவு சமூர்த்தி அடிப்படையிலான தீர்வு நாட்டிற்கு பொருத்தமானது

(கிளிநொச்சி)

கூட்டுறவு சமூர்த்தி அடிப்படையில் ஒரு தீர்வை அடைவதே இலங்கைக்கு பொருத்தமானது என 2015 ஆம் ஆண்டு எமது பாராளுமன்றில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் எங்களுக்கு தீர்வு வழங்க இந்தியா முயற்சிக்க வேண்டும் என பாரளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடனான சந்திப்பின் போது இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் காங்கேசன் துறை காரைக்குடிக்கு இடையிலான கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்குமாறும் இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை நாட்டில் மீளக்குடியமர்த்த வழியமைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-8)



# கலாசார அபிவிருத்தி செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இலக்கிய த்துறை சார்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு அமைவாக 2021 ஆம் ஆண்டில் நூல்களை வெளியிடவுள்ள பதிப்பாசிரியர்கள் தங்கள் நூற்பதிப்புத் தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் எதிர் வரும் 22.03.2021 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளு மாறு பிரதேச செயலாளர் திருமதி உ.யசோதா அறிவித்துள்ளார். (5-4)

# யாழ்.கொமர்ஷல் வங்கிக் கிளை நாளை முதல் புதிய கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையின் செயற்பாடுகள் நாளை 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் புதிய கட்டடத்தில் இடம் பெறும்.

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி கிளை தற்போது இயங்கும் இடத்திற்கு அருகிலுள்ள புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இக்கட்டடத்தை கொமர்ஷல் வங்கியின் தலைவரும் நீதியரசருமான க.ஸ்ரீபவன் மற்றும் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவ பணியாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான சி.றெங்கநாதன் ஆகியோர் திறந்து வைக்கவுள்ளனர். (4-5)

# நினைவுப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

அமரர்.ஜெபா கதிர்காமரின் நினைவுப் பகிர்வு இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் Y.M.C.A மண்டபத்தில் நடைபெறும். (4-5)







அச்சுவேலி சமுர்த்தி வங்கியில் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் அச்சுவேலி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் சிறிதரன் ஸ்ரீகிருஷ்ணா மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:-மகாலிங்கம்)

# 1970 இல் பிறந்து யாழ்ப்பாணத்தில் வசித்த வளர்ப்பு மகனாகிய நான் எனது உயிரியல் பெற்றோரைத் தேடுகிறேன்

**பிறந்த வருடம்: 1970**

**மகனின் தேவையான விபரங்கள்:**

1. முழுப்பெயர்:
2. பிறந்த திகதி:
3. பிறந்த மருத்துவமனை அல்லது இடம்:

**பெற்றோரின் தேவையான விபரங்கள்:**

1. பிறந்த ஆண்டு:
2. பெயர்:

பழைய படங்கள் (முக அங்கீகாரப் புகைப்படங்களை ஒப்பிட இது உதவும்)

தயவுசெய்து மின்னஞ்சல் வழியாகத் தொடர்பு கொள்ளவும்.

**makan1970@yahoo.com**

நான் எல்லா மின்னஞ்சல்களுக்கும் பதிலளிப்பேன்

எனது உயிரியல் பெற்றோரின் தேடலில் நான் யாரையும் மனம் வருத்தியிருந்தால் தயவு செய்து என்னை மன்னிக்கவும்.

மிக்க நன்றி
உங்கள் மகன்

(6145)


## கட்டுநாயக்கவில் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 43 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் புதிதாக 69 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டுத் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# மாடி வீடு வாடகைக்கு

அரச மற்றும் தனியார் அலுவலகம், மெடிக்கல் கிளினிக், Higher education, Project office போன்றவற்றிக்கு பொருத்தமான புதிதாக கட்டப்பட்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.

சாவகச்சேரி Ladies College இற்கு அருகாமையில் Ground floor/First floor மாபிள் பதிக்கப்பட்ட 3000 சதுர அடி விசாலமுள்ள வீடு, 2 விசாலமான வரவேற்பறை, 6 அறைகள், 3 நவீன குளியலறைகள், 2 அடுப்புகள் பொருத்தப்பட்ட சமையலறைகள் உண்டு. தனியான பாதை, வாகன தரிப்பிட வசதிகள் உண்டு.

தொடர்பு:- 077 350 7694.
Whatsapp +44 740 170 8819

(6141)

# SPOKEN E
# SELF LEARNING

அன்றாடம் பயன்படக் கூடிய ஆங்கில உரையாடல்கள் வீடியோ காணொளி வடிவில் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
50க்கும் அதிகமான சந்தர்ப்பங்கள்.
30 மணி நேர காணொளிகள்.
ஆங்கில சொல்லறிமுகம்.
8 GB புதிய Pen Drive இல் பதிவேற்றம்.
Desktop, Laptop மற்றும் Flat TV யில் பயன்படுத்தலாம்.
மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்தி ஆங்கில பேச்சாற்றலை விருத்தி செய்யலாம்.
விலை 1900/- (புதிய Pen Drive + Delivery)

**Call : 075 601 1709**

(6141)

# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த சூரி.செவ்.3, கிரகபாவம் 32 அரச பொறியியலாளராக தொழில் புரியும் மணமகனுக்கு (நீர்ப்பாசன திணைக் களம்) தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம்.

(6126)

தொடர்பு:-
பெற்றோர் - 077 025 5934, 077 348 6008

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 18 3/4 செவ், சூரி 11 இல்
தகைமை/தொழில்: A/L, வாகன வியாபாரி (வாகனம் 2 சொந்தமாக உள்ளது)
எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண், உள் நாடு மட்டும்
தொ.இ: B/11590

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: செவ் 12 சூரி 2 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND,BA, கணனி பயிலுனர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: B/11593

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 3 சூரி 2 இல் உயரம்: 6.01
தகைமை/தொழில்: பட்டதாரி B.A, Work-பட்டதாரிப்பயிலுனர் (அரச)
எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில்
தொ.இ: B/11595

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 7 சூரி 6 இல் உயரம்: 5.8
தகைமை/தொழில்: A/L, கணனி திருத்துனர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு
தொ.இ: B/11596

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 56 செவ் 8 சூரி 11 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: A/L நிரந்தர தொழில், தீவுப் பகுதி, வவுனியா ஏற்கப்படும் வெளி நாடு ஆயின் கனடா மட்டும்
தொ.இ: G/2072

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 7,6 செவ், சூரி 4 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Doctor
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் வைத்தியர், பொறியிலாளர், அவுஸ்திரேலியா, கனடா
தொ.இ: G/2080

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 41 3/4 செவ் 10 சூரி 8 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: உள்நாடு ஆயின் அரச தொழில், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: G/2145

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 25 செவ் 6 சூரி 5 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: CIMA 3rd Level
எதிர்பார்ப்பு: மணமகள் திருமணப்பதிவுடன் விவாகரத்து பெற்றுள்ளார்
தொ.இ: G/2147

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணிவிழா வாழ்த்து

திருமதி.
## சேற்றூட் கிருபைவரம் அன்ரனி பெர்னாண்டோ
(கத்தோலிக்க பாட ஆசிரியை)




எமது பாடசாலையில் 8 வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி பரந்த உள்ளமும் பண்பொரு பாசமும் சேவை மனப்பாங்குமுள்ள உத்தம நல்லாசிரியை திருமதி.சேற்றூட் கிருபைவரம் அன்ரனி பெர்னாண்டோ அவர்கள் மணிவிழா அகவையில் 2021.03.14 அன்று பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு பாடசாலைச் சமூகம் இதயம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
யா/நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்.

(6138)

# யாழ்ப்பாணம் வலயக்

## உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவ



### அருளாசிச் செய்தி

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் நீண்ட காலம் ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று இப்பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். ஓய்வுக்காலத்தில் அவர் சமூகத்துக்கும் சமயத்துக்கும் பணியாற்ற இறையருளை வேண்டுகின்றேன். புனிதமான கல்விப்பணியை நீண்ட காலமாக ஆற்றி பல மாணவர்களை உருவாக்கிய பெருமை சந்திரராஜாவை சாரும். இவர்களின் பணியின் ஊடாக நன் மாணவர்கள் பலர் உருவாகி சமூகத்தில் நல்ல பணிகளை ஆற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வது பாராட்டுக்குரியது.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்,**
நல்லை ஆதீன முதல்வர்.



### நல்லிணக்கத்தின் அடையாளம்

கல்விப்பணிப்பாளர் மதிப்புக்குரிய செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களுக்கு என் மணிவிழா வாழ்த்துக்கள் உரித்தாகுக. நல்ல நிர்வாகியாக, நல்லிணக்கத்தின் அடையாளமாக அவர் திகழ்கின்றார். ஆழமான அறிவியல் சிந்தனைகளும், எளிமையான சுபாவமும் கொண்டவர் அவர். தன்னைச் சந்திக்கவருவோரை மனங்கோணாது வரவேற்று உதவியும், ஆலோசனைகளும் வழங்குபவர். அவரது சேவை யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் என்றுமே மறக்கப்படமுடியாத இடத்தைப் பெற்றுள்ளது.

உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் மும்மொழி ஆற்றல் கொண்டவர். எல்லா இன, மதத்தவரையும் மதிப்பவர். குறிப்பாக இஸ்லாமிய மார்க்கத்தை நன்கு அறிந்தவர். அவர் பணிபுரிந்த இடங்களிலெல்லாம் இஸ்லாமிய மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டில் வாஞ்சையுடன் செயற்பட்டவர். பதுளையில் அவர் அதிபராகப் பணிபுரிந்த கல்லூரியில் இஸ்லாமிய மாணவர்கள் தம் மார்க்க தனித்துவத்தையும், மரபுகளையும் பேண சுதந்திரம் அளித்தவர். யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம் கல்லூரிகளான ஒஸ்மானியா கல்லூரி, கதீஜா பெண்கள் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு முன்னின்று உழைத்ததுடன், இக்கல்லூரிகளுக்கு பலமுறை விஜயம் செய்து ஊக்கமளித்துமுள்ளார்.

வலயத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்கு என்னையும், இஸ்லாம் மார்க்கத் தலைவர்களையும் அழைத்து கௌரவித்துள்ளார். அவரது சொல்லும், செயலும் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பிரதிபலிப்பதைக் கண்ணுற்றுள்ளேன். அந்தவகையில் கல்விப் பணிப்பாளர் அவர்களின் சேவைக்கு இத்தருணத்தில் நன்றி கூறுவதுடன், அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**அல்ஹாஜ் மௌலவி M.M.A. அசீஸ் (ஹசிமி) பேஷ் இமாம்.**



### சவால்களை எதிர்கொண்டவர்

தனது 60 ஆவது அகவையை பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களின் அரச சேவையை பாராட்டுவதுடன் சேவைநயப்பு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1993 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கடமையேற்று தேசிய பாடசாலையான பதுளை மத்திய கல்லூரியில் பதில் அதிபராகவும் அதிபராகவும் கடமையாற்றி 2013 ஆம் ஆண்டு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக வடமாகாண கல்வி வலயத்தில் பணியேற்று 2019.05.19 ஆம் திகதியிலிருந்து ஓய்வுக்காலம்வரை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச்செல்கின்றார். தனது சேவைக் காலத்தில் அதிபராக தேசியப்பாடசாலையிலும், பிரதிக் கல்விப் பணிப்பாளராக நிரல்கல்வி அமைச்சிலும் வலயக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம், யாழ்ப்பாணம் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக வடமாகாணத்திலும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது பணிக்காலத்தில் பல சவால்களுக்கும் மத்தியில் தனது பணியை ஆற்றியுள்ளார். அந்தவகையில் வடமாகாண கல்விச் சேவைக்கு தனது பங்களிப்பைச் செய்துள்ளமையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவர் ஆற்றிய அரச சேவையினை பாராட்டுவதுடன் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்.**
செயலாளர், கல்வி அமைச்சு,
வடமாகாணம்.



### யாழ்.ஆயரின் ஆசிச் செய்தி

திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றமை பாராட்டத்தக்கது.

இவர் ஆன்மிகத்தில் நன்கு வேரூன்றி, பன்முக ஆளுமை கொண்டு, பணிகளை நேர்த்தியாகச் செய்து முடிக்கும் பண்புகள் கொண்டவர். இவர் பாரபட்சம் பார்க்காமல் எல்லோரோடும் நன்கு பழகி, வேலை செய்து, மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் கூடுதலான அக்கறை கொண்டு, பாடசாலை அதிபர்களோடு நன்கு திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ளக் கூடியவர். இவரின் இத்தகைய ஆளுமைகளுக்கும், பண்புகளுக்கும் எனது பாராட்டுக்களையும், இவர் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிகள் அனைத்துக்கும் நன்றிகளையும் கூறிக் கொள்கின்றேன்.

இவருடைய அறிவும், அனுபவமும் தொடர்ந்து கல்வித் துறைக்கும், சமுதாயத்துக்கும் கிடைக்கவும், இவர் என்றும் மகிழ்வாகவும், வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ ஆசித்து இறையாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

**பேரருட் திரு**
**கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்,**
யாழ்.ஆயர்.



### சேவை நயப்புரை

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக பெரும் பணியாற்றி பணி ஓய்வு பெறும் உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களது சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு*

நாம் செய்யத்தக்க கடமை இது என்று சான்றாண்மையை மேற்கொண்டு வாழ்பவர்க்கு நல்ல குணங்கள் எல்லாம் இயல்பாக இருக்கும் எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய அத்தகைய நற்குணங்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்டுள்ள உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களது பதவிக் காலத்தில் ஆற்றிய பணிகள் அனைவரும் அறிந்ததே. நிச்சயமாக அவரது பணி ஓய்வு என்பது யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தில் தாக்கம் செலுத்தும் என்பதும் அனைவரும் அறிந்ததே.

கல்வித் துறையில் பல்வேறு பதவி நிலைகளை வகித்து சிறப்பான சேவையாற்றிய செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் அதற்கும் மேலதிகமாக வட இலங்கைச் சங்கீத சபையின் தலைவராகவும் இருந்து அரும் பணியாற்றியுள்ளார். இவரது காலப்பகுதியில் வட இலங்கைச் சங்கீத சபையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளமை கண்கூடு.

உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் நல்முடன் பல்லாண்டுகள் சமூக சேவையாற்ற இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

**ச.பாலச்சந்திரன்**
இந்தியத் துணைத்தூதுவர்.
யாழ்ப்பாணம்.



### மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்தியவர்

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் 1993 ஆம் ஆண்டில் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டவராவார். இந்நியமனத்திற்கு முன்னர் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் இ.க.நி.சேவையில் முதல் நியமனம் பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தினதும் அதிபராகக் கடமையாற்றி இப்பாடசாலையினது வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியதோடு இப்பிரதேச மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றார்.

வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் அப்பாடசாலைகளினது வளர்ச்சிக்கும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்துவதற்கும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தார்.

அதேபோன்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராகவும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தவர். இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்வதோடு தொடர்ந்தும் கல்விப் பணி, சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டுகின்றேன்.

**செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.

(C-1679)



### செல்வரட்ணம்

(B.A, M.A. in Political Science (MKU) M
LLB (OUSL), DHR (Institute of Human

**பிறந்த திகதி:** 1961.03.14
**பெற்றோர்:** அரியகுட்டி ஜேக்கப்
மாபெல் மங்கையர்
**மனைவி:** உதயகுமாரி
**பிள்ளைகள்:** விநோஜினி
ஹிசாந்த்.

### சேவை வி

**உதவிக் கல்விப் பணிப்பாளர்-** கல்

**உப அதிபர்-** பது/சரஸ்வதி

**அதிபர்-** பது/சரஸ்வதி

**பிரதிக் கல்விப் பணிப்பாளர்-** கல்

**வலயக் கல்விப் பணிப்பாளர்-** வ

**பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளர்-**

**வலயக் கல்விப் பணிப்பாளர்-** வ

**வலயக் கல்விப் பணிப்பாளர்-** யாழ்



### வ

யாழ்.வலயக் க
ராஜா அவர்களது
மாகாணத்திலுள்ள
களின் கல்வி வ
ளமை குறிப்பிட்டு
க.பொ.த.(சா/த)
வலிகாமத்திலுள்ள
முன்னேற்றத்தை

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இவரது கு
தாக்கம் காரணமாகப் பாடசாலைகள் முழுமைய
ங்கிலும் காணப்பட்டது. ஆயினும் முன்னேற்ற
மாணவர்கள் பெறும் வகையில் மாணவர்களு
லில் கல்வி அபிவிருத்தி பிரிவால் தயாரிக்கப்
பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது ஓய்வுக்கா

பிரதிக் கல்

**மலர் அமைப்பு:- ம**
**யாழ்ப்பாணக்**

# ந் கல்விப் பணிப்பாளர்

## அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்-14.03.2021



## ாம் சந்திரராஜா

(MKU) M.Phil. in Public Admin (MKU),
Human Rights), PGDE (OUSL), SLEAS-I

ஜேக்கப் செல்வரட்ணம்
ங்கையர்க்கரசி
ி

### வ விபரம்

| | |
|---|---|
| | கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல (21.06.1993-06.02.1994) |
| | ரஸ்வதி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) (07.02.1994-10.05.1994) |
| | ரஸ்வதி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) (11.05.1994-18.05.2011) |
| | கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல (19.05.2011-20.01.2013) |
| | வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் (21.01.2013-18.12.2016) |
| ாளர்- | வடமாகாண கல்வித் திணைக்களம் (19.12.2016-08.05.2017) |
| | வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் (09.05.2017-17.04.2019) |
| | யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் (18.04.2019-13.03.2021) |

### வாழ்த்துச் செய்தி


வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.சந்திர
வர்களது சேவையின் கூடுதலான காலம் ஊவா
த்திலுள்ள மலையகத் தமிழ் மொழி மூல சிறார்
ல்வி வளர்ச்சிக்கு வழிகோலுவதாக இருந்துள்
றிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும். இவர்.
(சா/த) மாணவர்கள் 'S' செயற்றிட்டம் மூலம்
த்திலுள்ள பாடசாலைகளில் குறிப்பிடத்தக்களவு
ற்றத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இவரது குறுகிய காலசேவையினுள் COVID- 19
முறைமையாகச் செயற்பட முடியாத நிலைமை நாடெ
னேற்றகரமான திட்டங்களைக் க.பொ.த.(சா/த)
வர்களுக்குரிய கையேடுகள் இவரது வழிகாட்ட
ாரிக்கப்பட்டு உரிய முறையில் விநியோகிக்கப்
ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

**தி.ஞானசுந்தரன்**
திக் கல்விப்பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்.

**ு:- மணிவிழாக் குழு**
**ாணக் கல்வி வலயம்**

### மானிப்பாய் மண்ணில் பூத்த மாமனிதன்



மானிப்பாய் மண்ணில் பூத்து அம் மண்ணுக்கே பெருமை சேர்த்த உயர் திரு செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களை அவரது 60 ஆவ்து அகவையில் வாழ்த்துவது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது ஆண்டவராம் இயேசுவுக்கு நன்றிப்பூக்களைக் காணிக்கையாக்குகிறேன். ஆசிரியர் செல்வரட்ணம் குடும்பத்தில் ஐந்தாவது மகனாகப் பிறந்த சந்திரராஜா அவர்கள் தமது இளமைக்கல்வியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் முடித்து தனது இளமாணிப்பட்டப் படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்திலும், தமது முதுமாணிப் பட்டத்தை இந்தியாவிலுள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார்.

இலங்கையிலுள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று சட்டத்துறையில் LLB பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மேலும் கல்வியியலில் Post Graduate Diploma பட்டத்தையும் பெற்றுக் கல்வி நிர்வாக சேவையில் SLEAS Grade I நிலையைப் பெற்றுத் தனக்கெனத் தனியிடத்தைக் கல்விசார் சமூகத்தில் பதித்துக்கொண்டார்.

அஞ்சா நெஞ்சத்துடன், கடமையே கண்ணாகக் கொண்டு, சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்து, இடரிலும் பணிசெய்த உத்தமர். அமைதியான நடை, தெளிவான சிந்தனை, வியக்கவைக்கும் முகாமைத்துவம் போன்ற பல்வேறு அணிகலன்களைக் கொண்டு வரலாற்றை உருவாக்கினார்.

அவரை இவ்வேளை நான் சார்ந்திருக்கும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை சார்பிலும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைஆசி அவருடனும் அவரது குடும்பத்துடனும் என்றும் நிலைத்திருப்பதாக.

**அருட்திரு.T.தேவநேசன்**
தலைவர், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை.
யாழ்ப்பாணம், இலங்கை.

### கல்விச் சமூகத்தின் முன்னோடி



2015 ஆம் ஆண்டில், நான் வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பதவியேற்றுக் கடமையாற்றிய வேளையில், உயர்திரு. செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அதிக எண்ணிக்கையான பாடசாலைகளையும் மாணவர்களையும் கொண்ட வலிகாமம் பிரதேசத்தில், வலிகாமம் வலயத்துக்குட்பட்ட அநேக பாடசாலைகள் போர்காலச் சூழலில் மிகவும் பாதிப்புகளை எதிர்கொண்டதாகவும், இடப்பெயர்வுக்குள்ளாகி வேறு பாடசாலைக் கட்டடங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் கல்விக்கான பௌதிக வளங்கள் குன்றியதுமான ஒரு சூழலில் இயங்கிக் கொண்டிருந்தன.

இவர் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகச் செயலாற்றிய காலத்தில், பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஒரு உயிரோட்டமான உற்பத்தித்திறன் மிக்க ஆக்கங்கள் உருவாகுவதற்கும், தேசிய மட்டத்திலான கல்வி, கலாசாரப் போட்டிகளில் சாதனைகள் புரியவும், குறிப்பாக 2014 ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்தில் தடகள விளையாட்டுகளில் சாதனைகளை நிலைநாட்டத்தக்க வகையில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவித்துள்ளார். ஆசிரியர்கள் மத்தியில் சேவையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து இடப்பெயர்வுகளினால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கும், வினைத்திறன்மிக்க கற்றல் மற்றும் கல்வி நிர்வாக முறைமைகள் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் பேணப்படத்தக்கதாக இவருடைய கடமைக்காலம் அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்ற காலத்திலிருந்து, இவரது கல்வி நிர்வாக சேவையானது பயனுறுதி வாய்ந்ததும், கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை யாழ்ப்பாண வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவ சமூகத்தினுள் ஒரு சீரான பொறிமுறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஏதுவாக அமைந்தன. கல்விச் சேவையில் பணியாற்றுகின்ற நிர்வாக அதிகாரிகளுக்கும், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் இவரின் செயலாற்றுகை ஒரு முன்னோடி வழிகாட்டியாக அமைந்துள்ளது.

உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களின் ஓய்வுக்கால வாழ்வானது கல்விச் சமூகத்துக்கு மேலும் பயன்மிக்கதாக அமையவும், மிகுந்த நலத்தோடும் சமாதானத்தோடும் விளங்கவும் இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**அ.பத்திநாதன்**
பிரதம செயலாளர், வடக்கு மாகாணம்.

### ஆசிச் செய்தி



யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராகத் தனது பணியினைச் சிறப்பாக ஆற்றி தனது 60 ஆவது வயதினைப் பூர்த்திசெய்யும் உயர்திரு. செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களை மிகவும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றேன். இவர் தனது கல்விப்பணியினை ஆரம்பித்த காலம் முதல் பல கஷ்ட துன்பங்களுக்கு மத்தியிலும் சமூகப் பணிகளில் உயர்ந்த பணியாகக் கருதப்படுகின்ற கல்விப்பணிக்கு தனது சேவையினை சிறப்பாக - நேர்மையுடன் ஆற்றியுள்ளார் என்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றேன். மேலும் இவர் தனது அரச சேவையிலிருந்து ஓய்வைப்பெற்ற பின்னரும் தனது கல்விப்பணியின் மூலம் பெற்றுக் கொண்ட முதிர்ச்சியையும் அறிவுப்புலமையையும் தனது சமூகத்தின் வளர்ச்சிக்கும் எமது தாய் நாட்டினுடைய கல்வி வளர்ச்சிக்கும் தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டும் என்றும், இவர் இறைவனின் அருள் பெற்று நீண்டகாலம் வாழ வேண்டும் என்றும் புத்த தர்மத்தில் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**வண.கலைமாணி மீஹாகாயந்துரை சிறி விமல தேரர்**
**விஹாராதிபதி**
ஸ்ரீ நாக விகாரை சர்வதேச பௌத்த நிலையம், யாழ்ப்பாணம்.

### சிறந்த சேவையாளர்




திருவாளர் செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களின் சேவை நயப்பு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். திருவாளர் செல்வரட்ணம் சந்திரராஜா அவர்கள் யாழ்ப்பாணக் கல்விவலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு நிலை பெற்றிருக்கின்றார். கல்வியின் பயன் சிறந்த ஒழுக்கம் என்பதற்கு அமைய சிறப்பான கல்வியினை யா/மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும் உயர் கல்வியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் உயர் பட்டப்படிப்பினை கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்று கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து உப அதிபராகவும் அதிபராகவும் பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரியிலும் சிறப்பான சேவையினை ஆற்றிய பெருமைக்குரியவர்.பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்வி அமைச்சில் பணியாற்றியதுடன் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம் கல்வி வலயத்திலும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக வடமாகாண கல்வித் திணைக்களத்திலும், வலயக் கல்விப் பணிப்பாளராக யாழ்ப்பாண கல்வி வலயத்திலும் கடமையாற்றி சிறந்த கல்விச் சேவையாளராக ஓய்வுபெறுவது சிறப்புக்குரியது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார். தோன்றலின் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவரின் வாக்குக்கமைய வாழ்ந்து கல்வி நிலையில் சிறந்து திகழும் திருவாளர் செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**க.மகேசன்**
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

### மனிதநேயப் பண்பாளர்



எமது யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதன்மைக் கல்வி வலயமாகக் திகழ வேண்டும் என்ற எங்கள் கனவுகள் மெய்ப்படக் கருமமாற்றியவர் எங்கள் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.சந்திரராஜா அவர்கள்.

அவர் கல்விப் பணியோடு மட்டுமல்லாது COVID -19 பெருந்தொற்றுக் காரணமாக முடக்கப்பட்ட மக்களின் நலனில் தன்னார்வமாகக் கருமமாற்றித் தனது சொந்த நிதியிலிருந்து தனது பாரியாரையும் அழைத்துக் கொண்டு பெருந்தொற்றையும் பொருட்படுத்தாது, களமுனைத்தரிசிப்பினூடாக மனித நேயப் பணியாற்றியமை இவரையும், இவரது வாழ்க்கைத்துணைவியாரையும் இருமனம் ஒத்த மனித நேயத் தம்பதிகளாக எமக்கு இனங்காட்டி நிற்கின்றது.

நான் ஓர் ஓவியனாக இருப்பேனாகில்: இனிமை, இளமை, பொறுமை, தலைமை போன்ற 'மை'களை எடுத்து ஒரு ராஜாவை வரையும் கால், அது சந்திரராஜாவாகப் பதிவாகவும் என்பேன்.

இவ்வாறான மா-மனிதர்களுடன் இணைந்து கருமமாற்றக் கிடைத்தமை என்றும் நினைவழியா நாட்களாக நெஞ்சில் கொலுவிருக்கும். அவரது பணி ஓய்வுகாலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றேன்.

**மா.ஞானசம்பந்தன்,**
அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# உணவு தவிர்ப்பு போராட்டம் 6 நாளாகவும் தொடர்ந்தது



(நல்லூர்)

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் 6வது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர். (5-4-33)

# உணவு தவிர்ப்பு போராட்டத்தில் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன்




(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் நீதி வேண்டிய உணவு தவிர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது ஆதரவினை வழங்கியுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தியாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 14 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நீதி வேண்டிய இப்போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல் கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இப் போராட்டத்தில் நேற்று பாராளு மன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மல நாதன் ஆகியார் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.(5-4-33)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு அன்னபூரணி அமைப்பின் அனுசரணையில் இளவாலை ஜே-155 இளைஞர் கழகம் மற்றும் யூதாதேயு இளைஞர் கழகங்களின் ஆதரவுடன் இரத்ததான முகாம் நேற்றுச் சனிக்கிழமை இளவாலை புனித யூதாதேயு ஆலய முன்றலில் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

# சைக்கிள் திருடனிடமிருந்து 21 சைக்கிள் மீட்பு

(நல்லூர்)

பருத்தித்துறையில் துவிச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அண்மையில் நடமாடிய போது சந்தேகத்தின் அடிப்படையில் அவர் கைது செய்து விசாரணை மேற்கொண்ட போதே துவிச்சக்கர வண்டிகளைத் திருடியமை தெரியவந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து 21 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (5-4-33)



சர்வதேச மகளிர் தின நிகழ்வை முன்னிட்டு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் சமுதாய சங்கிலி இளையோர் தன்னார்வக் குழுவினர் இணைந்து நடத்திய மகளிர் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் பொது மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-சுபேசன்)

# சட்டவிரோத மணல் அகழ்வு சாரதிகள் நால்வர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பெரியகுளம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரமும் ஒரு டிப்பர் வாகனமும் கைப்பற்றப்பட்டதுடன் அதன்சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸ்லிகேரத் தெரிவித்துள்ளார். (5-4-316)

# வடக்கு- கிழக்கு இணைப்பு குறித்து இந்தியா கவனமெடுக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

காணி, பொலிஸ் என அனைத்து அதிகாரங்களும் உள்ளடக்கப்பட்டதான 13 ஆவது திருத்தத்தின் அமுலாக்கம் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன் பேச்சுவார்த்தை இடம் பெற்றதாக ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த தூதுவர் நேற்று சனிக்கிழமை தமிழர் தரப்பிலுள்ள பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளை யாழில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து இந்தியா கவனத்திற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டதாகவும் மேலும் காங்கேசன் துறை துறைமுகம் மற்றும் பலாலி விமானநிலைய செயற்பாடுகள், காணி அபகரிப்புக்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் மீண்டும் கண்காணிப்படுத்தல் போன்ற விடயங்களும் இதன்போது பேசப்பட்டதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (5-4)



“நீர்ப்பாசன செழிப்பு” எனும் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் பிரகாரம் மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஊமையார் துவரம் குளம் புனரமைப்பிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்றது. (படம்- சதீஸ்)

# 3 ஆவது கொரோனா அலைக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளது

## பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் பண்டிகைக் காலங்களில் 3வது கொரோனா அலைக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

எனவே, எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு அரசாங்கம் தகுந்த கொள்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறில்லையெனில், 3ஆவது கொரோனா அலைக்கான ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வருமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகைக் காலங்களில் இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேநேரம், இயன்றவரை தங்களது பயணங்களை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# நாட்டில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு அறுவை சிகிச்சைகளுக்கும் சிக்கல் நிலை

## ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது பாரிய மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அறுவைச்சிகிச்சைகளை முன்னெடுப்பதில் கூட சிக்கல் காணப்படுகிறது.

புற்றுநோய் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இலட்சக்கணக்கில் பணத்தை செலவிட்டு மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது பாரிய மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அறுவைச்சிகிச்சைகளும் நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் உள்ளிட்ட முக்கிய நோய்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோயாளர்களுக்கு பணம் கொடுத்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது ஆட்சிக்காலத்தில் மருந்துகளுக்கான விலை குறைக்கப்பட்டது. ஆனால் தற்போது ஒரு இலட்சம் ரூபா வரை மருந்துகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாம் தீவிர நோயாளிகளுக்கு இலவசமாக மருந்தினை வழங்கினோம். தற்போது அந்தச் சலுகையும் நீக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வறுமையிலுள்ள மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தனியார் மருந்தகங்கள் உள்ளிட்டவை தத்தமது விருப்பத்திற்கு மருந்துகளின் விலையை அதிகரிப்பதற்காகவா எமது அரசாங்கத்தில் மருந்துகளின் விலை கட்டுப்பாட்டுக்கான சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டது? மருந்து தட்டுப்பாடு தீர்க்கப்படாத இந்நிலையில் வைத்தியசாலைக் கட்டட நிர்மாணப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நிதி இல்லை என்று கூறும் அரசாங்கம், சீனி இறக்குமதி வரிச் சலுகை மூலம் 15 பில்லியன் ரூபாய் மோசடியில் ஈடுபட்டுள்ளது. இது இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற பாரிய மோசடியாகும் என ராஜித தெரிவித்தார். (நி-4)

# பரீட்சைகள் ஒத்திவைப்பு தொடர்பான கல்வி அமைச்சின் முடிவே இறுதியானது

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)



புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்படலாம். கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

இந்த வருடம் இடம்பெற உள்ள 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பொதுவாக ஓகஸ்ட் மாதத்திலேயே இடம்பெறுகின்றது. அத்துடன் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை டிசம்பர் மாதத்தில் இடம்பெறுகின்றது. என்றாலும் இந்தவருடம் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் சில மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படலாம்.

அத்துடன் இதுதொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி வருகின்றோம். இதன் போது இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னரே பரீட்சைகள் இடம்பெறும் நேரசூசியை அறிவிக்க முடியும்.

குறித்த பரீட்சைகளை உரிய நேரசூசியின் பிரகாரம் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களத்துக்கு முடியுமாக இருக்கின்றபோதும், கொரோனா தொற்று நிலைமையினால் கற்றல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காதமை காரணமாக, சில மாதங்களுக்கு கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் பரீட்சைகளை நடத்துவதற்கே நினைத்திருக்கின்றோம்.

அதன் பிரகாரம் உயர்தர பரீட்சை மற்றும் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளை நவம்பர் மாதம்வரை ஒத்திவைப்பதற்கு ஆலோசித்து இருக்கின்றோம். என்றாலும் இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை கல்வி அமைச்சினாலே மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 110 | 60 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 | 300 |
| தக்காளி | 140 | 120 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 140 | 100 | 120 | 140 |
| கரட் | 160 | 200 | 200 | 240 |
| பூசணி | 70 | 80 | 80 | 120 |
| புடோல் | 120 | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 140 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 220 | 240 | 150 | 240 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 70 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 400 | --- | 800 |
| போஞ்சி | 150 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | --- | 140 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 140 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 140 | 140 |
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 150 | 130 | 60 | 100 |

# முரண்பாட்டை தோற்றுவிக்கும் கருத்துக்களை வெளியிடக் கூடாது- எச்சரிக்கின்றார் அமைச்சர்

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையினையுடையவர்கள் எவரும் அரசாங்கத்தில் கிடையாது. கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ச பொறுப்புடன் கருத்துரைக்க வேண்டும்.

முரண்பாட்டை தோற்றுவிக்கும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையினை உடையவர்களை அரசாங்கத்தில் ஒருபோதும் இணைத்துக் கொள்ளமாட்டோம் என்பது பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கையாக காணப்பட்டது.

அடிப்படைவாதிகளுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கக் கூடாது என்பதற்காகவே நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தனித்த அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள்.

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்க முடியாத அளவிற்கு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குள் இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையினையுடையவர்கள் உள்ளார்கள் என கைத்தொழில் துறை அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ள கருத்து முற்றிலும் தவறாகும்.

அடிப்படைவாதக் கொள்கையினை கொண்டவர்களை உள்ளடக்கி ஆட்சியமைக்க வில்லை.

முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கருத்துக்கள் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் என அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# இரணைதீவு இறங்கு துறையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை



(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைதீவு இறங்குதுறை புரேவி புயலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை மீள்அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இரணைதீவு பகுதியில் புதிதாக சர்வதேச நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட இறங்கு துறை அபிவிருத்தியானது பல மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த அபிவிருத்தி பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வருடம் இடம்பெற்ற புரேவி புயலின் தாக்கத்தினால் அது முழுமையாக சேதமடைந்துள்ளது. நடைபாதையும் சேதமடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

2019ஆம் ஆண்டு மீள்குடியேறிய மக்களின் பயன்பாட்டிற்காக சர்வதேச நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்ட குறித்த இறங்குதுறையானது இயற்கை அனர்த்தத்தினால் முழுமையாக இன்று அழிவடைந்து காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இறங்குதுறையை மக்களின் பயன்பாட்டிற்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.(5-4-100)

# நகரில் கழிவகற்றல் இடம் பெறவில்லை

## வர்த்தகர்கள் விசனம்

(நெளுக்குளம்)

வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் சேரும் குப்பை மற்றும் கழிவுகளை தரம்பிரித்து வழங்குமாறு நகர சபையினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கழிவகற்றல் பொறி முறைகள் எவையும் நகர சபையால் மேற் கொள்ளப்படுவதில்லை என வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் அகற்றப்படும் கழிவுகள் மற்றும் குப்பைகளை தரம் பிரித்து வைத்தால் அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நகரசபையால் அறிவிக்கப்பட்டது.

எனினும் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (5-4-299)

# பொது இடங்களில் மலசலகூட வசதிகளை ஏற்படுத்த வேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார் கட்டுச் சந்தியில் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் சபை அமர்வில் பிரேரணை முன்வைத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சபை அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ் அமர்வில் பெருமளவு மக்கள் ஒன்று கூடுகின்ற உடையார் கட்டுச் சந்திப் பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லாத நிலையில் மலசலகூடங்கள் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் மூங்கிலாறு கிராமத்தில் உள்ள பிரதேச சபையின் வீதிகளுக்கு புதிய பெயர்களை அறிமுகம் செய்தல் ஆகிய பிரேரணைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரு பிரேரணைகளும் சபையினால் நிறைவேற்றப் பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளம் நகரம் உட்பட பல இடங்களில் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. பொது இடங்களில் போதியளவு மலசல கூட வசதிகள் இல்லை என பொது மக்களினாலும் தெரிவிக்கப்படுகிறது. (5-4-350)

# குடிநீரைப் பெற்றுக் கொள்ள நீண்ட தூரம் செல்லும் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரம் அதனையண்டிய கிராமங்களில் தற்போது குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கரைதுறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி.இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நகரம் அதனையண்டிய கிராமங்களான வட்டுவாகல், செல்வபுரம், மணற்குடியிருப்பு, கள்ளப்பாடு உட்பட பல கிராமங்களில் தற்போது கிணறுகளின் நீர் மஞ்சள் நிறம் அடைந்து வருகிறது. இக்காலத்தில் இக்கிராமங்களில் வறட்சியினால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

நீர் உள்ள கிணறுகளும் மஞ்சள் அடைந்து நீர் அருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டு நன்னீர் கிணறுகளைத் தேடி நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் குடிநீர் நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்ட போதிலும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

முல்லைத்தீவு நகரத்தில் கோயில்குடியிருப்புப் பகுதியில் உள்ள குடிநீர் கிணற்றிற்கு கூடுதலான மக்கள் குடிநீர் எடுப்பதற்காக செல்கின்றனர். இது நகரத்தின் குடிநீர் நெருக்கடியினை வெளிப்படுத்துகின்றது. முல்லைத்தீவு நகரம் அதனையண்டிய கிராமங்களின் குடிநீர் நெருக்கடி விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் கேட்டுக் கொண்டார். (5-4-350)

# சிறுவர் நலமேம்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும்

(அக்கராயன்)

சிறுவர் நலமேம்பாட்டுக் குழுவினை சட்டரீதியாக பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சுவந்தினி சிவஞானராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. சிறுவர் நல மேம்பாட்டுக் குழு பதிவு செய்யப்பட்டால் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும்.

அந்நிதியினைக் கொண்டு சிறுவர் பெண்களின் வாழ்வாதார உதவிகள் செய்ய முடியும்.

எமது பிரதேச சபையில் இக்குழு பதிவு செய்யப்படவில்லை. உள்ளூராட்சித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (5-4-350)



பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இடம் பெற்றது. (படம்- சப்தசங்கரி)

# கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் காணிக் கச்சேரி சேவை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் காணிக் கச்சேரி நடைபெறவுள்ளது.

அந்தவகையில் அம்பாள் குளத்தில் நாளை மறு தினம் 16 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணி, இராமநாதபுரத்தில் 18 ஆம் திகதி வியாழக்கிழமை, அக்கராயன் குளம் மற்றும் ஆனை விழுந்தானில் வெள்ளிக்கிழமை, ஜெயந்திநகர் 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, செல்வாநகர் மற்றும் திரு வையாறு 24 ஆம் திகதி புதன் கிழமை நடை பெறவுள்ளன.

இந்நடமாடும் காணிக் கச்சேரியானது அந்தந்த கிராம பொது நோக்கு மண்ட பங்களில் காலை 9.30 மணிமுதல் நடைபெறும் என கரைச்சிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-4-254)

# சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் பாலத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு



(நெளுக்குளம்)

சுபீட்சத்தின் நோக்கு என்ற அரசின் வேலைத்திட்டத்திற்கமைய வவுனியா வடக்கு பகுதியில் அமைந்துள்ள சாண்டாகுளம், விநாசிகுளம் இடையேயான பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பாலத்திற்கான அடிக் கல்லை நாட்டி வைத்தார்.

குறித்த பாலம் சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமான தொகையில் அமைக்கப்படவுள்ளதுடன், இப் பாலத்தினூடாக அந்த பகுதியால் பயணம் செய்யும் 5 இற்கும் மேற்பட்ட கிராமமக்கள் பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் இ.தணிகாசலம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண பணிப்பாளர் குருஸ், வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் தர்மேந்திரா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான பார்த்தீபன், சுதா, பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299)

கஷ்டங்கள் மத்தியிலும் நீ சலனமின்றி அமைதியாக இருக்கக் கற்றுக்கொள். எல்லாத் தடைகளையும் வெல்வதற்கு இதுவே எளிய வழி!
– ஸ்ரீ அரவிந்த அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாழ்வதற்காகக் கஷ்டப்படுவதும் கஷ்டப்படுவதற்காக வாழ்வதும்

வாழ்க்கை என்பது சாதாரணமான விடயமன்று. மனித வாழ்வில் ஒரு மனிதன் சந்திக்கின்ற துன்பங்கள், துயரங்கள், தோல்விகள் ஏராளம்.

இருந்தும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு வாழ்க்கையை அனுபவிப்பதில்தான் மனித வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது.

இதற்காகவே மனிதர்கள் கஷ்டப்படுகின்றனர். அதாவது வாழ்க்கையை வாழ்வதற்காகக் கஷ்டப்படுவதென்பது வரலாறாகவும் சாதனையாகவும் அமையும்.

முன்பெல்லாம் அடிப்படை வசதிகள் இல்லாத காலத்தில் நம் முன்னோர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள். அவர்களின் உடல் உழைப்பு எவ்வாறாக இருந்தன என்பதை ஒரு கணம் திரும்பிப் பார்த்தால், வாழ்வுக்கான மனித தியாகங்கள் தெரியவரும்.

ஆம், உணவு உற்பத்தி முதல் அனைத்துத் தேவைகளும் மனித உழைப்பில் மாத்திரமே தங்கியிருந்தன.

இயந்திரங்கள், தகவல் தொழில்நுட்பங்கள், போக்குவரத்து வசதிகள் என எதுவும் இல்லாத காலத்தில் நம் முன்னோர்கள் செம்மையான வாழ்வை வாழ்ந்ததற்குள் இருக்கக்கூடிய கஷ்டங்கள், அர்ப்பணிப்புகள், விசுவாசங்கள், மதிப்பு மரியாதைகள் என்பன மனித மொழிகளுக்குள் அடக்கக் கூடியவை அல்ல.

ஆனால் இன்று நிலைமை வேறாகிவிட்டது. அதிலும் குறிப்பாக எம் தமிழ் மக்களின் வாழ்க்கை என்பது கஷ்டப்படுவதற்கானது என்பதுபோல் அமைந்துவிட்டது.

அந்தளவுக்கு வாழ்க்கையின் அனுபவிப்புகள் ஏதுமின்றி, உற்றார் உறவினர் என்ற பந்த பாசங்கள் இன்றி, ஏன்? உண்பதற்கும் கதைப்பதற்குமே நேரமின்றி இயந்திரங்களாக இயங்குகின்றோம்.

எத்தனையோ வசதி வாய்ப்புகள் கிடைத்தும்கூட, நம் முன்னோர்கள் வாழ்ந்த நிம்மதியான வாழ்க்கையின் எல்லைக்குக்கூட நம்மால் போக முடியவில்லை எனும்போது, எங்கள் நிலைமை எவ்வாறாக உள்ளதென்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம்.

2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற வேண்டிய சாதாரண தரப் பரீட்சை கோவிட் – 19 காரணமாக 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி கடந்த 10ஆம் திகதி முடிவுற்றது.

இந்தக் கால தாமதத்தால், சம்பந்தப்பட்ட மாணவர்கள் மிகுந்த கஷ்டங்களையும் மன நெருக்கீடுகளையும் சந்தித்தனர்.

அவர்களுக்கு இப்போது வேண்டியது ஓய்வும் மன அமைதியுமாகும்.

ஆனால் அதற்கான சந்தர்ப்பம் எதுவும் இல்லாமல்; எங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் 2021 மார்ச் 13ஆம் திகதி அதாவது நேற்றைய தினம் 2023ஆம் ஆண்டுக்கான உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்துள்ளன.

ஓ கடவுளே! சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இரண்டு நாட்கள்கூட ஓய்வு வழங்கப்படவில்லை என்றால் எங்கள் மனநிலை எப்படியாக இருக்கிறது.

ஆக, இங்குதான் நாங்கள் கஷ்டப்படுவதற்காக வாழ்கின்றோம் என்று எண்ணத் தோன்றுகிறது.

# வடக்கு காணி ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு கொண்டு சென்றது நல்ல நோக்கத்திற்கு இல்லை

### பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன்

(கொழும்பு)

வடமாகாண காணி ஆவணங்களை அனுராதபுரத்திற்கு பகலில் கொண்டு போனார்களா? இரவில் கொண்டு போனார்களா? என்பதல்ல பிரச்சினை. கொண்டுபோனார்கள் என்பதே பிரச்சினையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்மனோ கணேசன் தனது முகப் புத்தக பக்கத்தில் கூறியுள்ளதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து காணி ஆவணங்களை இரவில் கொண்டுபோனார்களா? என்பதல்ல பிரச்சினை, காணி ஆவணங்களை கொண்டு போய் விட்டார்கள் என்பதே பிரச்சினை. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களின் காணி அதிகாரங்களை அனுராதபுரத்திற்கு மாற்றும் இந்த அரசின் நிலைப்பாடு நல்ல நோக்கம் கொண்டதல்ல.

எனக்கு கிடைத்துள்ள தகவல் இதுதான். ஆவணங்கள் அனைத்தும் போய் விட்டனவா இல்லையா என்பது தெரியவில்லை. இது பற்றி பாராளுமன்றத்தில் கேட்டறியலாம் என கூறியுள்ளார். (ம-3)

# வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

கோவிட் தடுப்பூசி பெற்றுக் கொண்டு நாட்டிற்கு வரும் இலங்கையர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவை பணிப்பாளரின் தீர்மானம் நாளை அறிவிக்கப்படவுள்ளது.

கோவிட் வைரஸ் பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையத்தின் பிரதானி இராணுவத் தளபதி சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

கோவிட் தடுப்பூசி பெற்றுவரும் நபர்களை பீ.சீ.ஆர் பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் விடுவிப்பதற்காக சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப குழுவிடம் உடனடியாக கலந்துரையாடல் மேற்கொண்டு இது தொடர்பான தீர்மானம் அறிவிக்கப்படும் என சுகாதார பணிப்பாளர் தன்னிடம் கூறியதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மிகப்பெரிய சீனி வரி மோசடியில் கோட்டா அரசு ஈடுபட்டுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமது நண்பர்களை மகிழ்விப்பதற்காகவே, அரசாங்கம் மிகப்பெரிய சீனி வரி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கதிர்காமம் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனி மோசடி காரணமாக, நாட்டுக்கு 15.9 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இதற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும்.

இந்தப் பணத்தின் மூலம், கோவிட் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள சுகாதார பணியாளர்களுக்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும், எவ்வளவு பாதுகாப்பு உபகரணங்களை பெற்றுக் கொடுத்திருக்கலாம்?

தற்போது நாட்டுக்கு அவசியமான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாத அரசாங்கமே உள்ளதாக சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார். (ம-3)


# சிறைச்சாலையில் மேலும் 65 பேருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் மேலும் 65 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட அனைவரும் ஆண் கைதிகள் என்றும் இதனை அடுத்து சிறைச்சாலையில் தொற்று உறுதியானோரின் எண்ணிக்கை 5,125 ஆக உயர்ந்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## அன்பு இருந்தால் அச்சமில்லை

❖ அன்பு யாவருக்கும் நன்மை செய்யும். பொறாமை கொள்ளாது. தற்புகழ்ச்சி செய்யாது. இறுமாப்பு அடையாது. அன்புள்ளவருக்கு அச்சத்திற்கு இடமேயில்லை. ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவாராக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது.

❖ இளைஞர்களே! இளமையின் நாட்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள். மனக்கவலையை ஒழியுங்கள். உடலுக்கு ஊறுவராதபடி காத்துக் கொள்ளுங்கள்.

❖ ஞானமுள்ள மகன் தந்தையின் நற்பயிற்சியை ஏற்றுக் கொள்வான். இறுமாப்புள்ளவனோ கண்டிக்கப்படுதலைப் பொருட்படுத்த மாட்டான். தந்தையையும், தாயையும் கொடுமைப்படுத்தும் மகன் வெட்கக்கேட்டையும், இழிவையும் வருவித்துக் கொள்வான்.

❖ கடவுளே உங்களுள் செயலாற்றுகிறார். அவரே, தமது திருவுள்ளப்படி நீங்கள் செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் தருகிறார்.

❖ நீங்கள் நன்மை செய்வதில் ஞானம் உடையவர்களாயும், தீமை என்றாலே என்ன என்றே தெரியாத கபடமற்றவர்களாயும் இருக்கவேண்டும்.

❖ எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்பநாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.

## இராசிபலன்

14.03.2021
பங்குனி 01, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பிற்பகல் 5.29 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 2.34 மணிவரை
சுபநேரம் 9.21-10.51 மணிவரை
இராகுகாலம் 4.51- 6.21 மணிவரை
சந்திராஷ்டமம் : மகம்
வளவன்

**மேஷம்** – ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பேச்சைக் குறைத்து செயலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** – பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** – வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து எற்பது நல்லது, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்வார்கள்.

**கன்னி** – சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** – கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு** – சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனமகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பாசம் மிக்கவர்களின் சந்திப்புண்டு.

**மகரம்** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** – ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** – திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் நட்பு கிடைக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறவேண்டிய நாள்.

ஊக்கத்தோடு உழைத்தால் ஆக்கம் தேடி வரும்

# கைதானவர்களுக்கு புனர்வாழ்வு வெளியிடப்பட்டது வர்த்தமானி

(கொழும்பு)
கைது செய்யப்பட்டவர்களை புனர்வாழ்வளிப்பதற்கான புதிய விதிமுறைகளுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று சனிக்கிழமை வெளியாகியுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை புனர்வாழ்வளிக்கும் புதிய ஏற்பாடுகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (நி-4)

# அசாத் சாலிக்கு எதிராக பல முறைப்பாடுகள்

(கொழும்பு)
தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அசாத் சாலிக்கு எதிராக நேற்றும் சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் ஆகியோரே இவ்வாறு தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.


முஸ்லிம் சட்டம் தொடர்பில் அண்மையில் அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-4)



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐக்கிய அமெரிக்க தூதரான அலெய்னா பி டெப்லிட்ஸை கொழும்பில் உள்ள ஐக்கிய அமெரிக்க தூதரகத்தில் சந்தித்தார்.
(படம்:-சுபேசன்)

# நீர் அபிவிருத்தி திட்டத்தில் பாரிய நிதி மோசடி

(கொழும்பு)
ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தித் திட்டத்துக்காக குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும் போது இடம்பெற்ற மோசடி காரணமாக 6 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை அரசாங்கம் மேலதிகமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவில் இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்குப் புதிய குழுவொன்றை நியமித்திருப்பதாகவும் இந்த விசாரணை அறிக்கையை ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்றும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)



கொழும்பு கொம்பனித் தெருவில் அமைக்கப்பட்ட எல்டெயார் தொடர்மாடி குடியிருப்புத் திட்டத்தின் முதலாம் கட்டம் திறக்கப்பட்டது. 68 மாடிகளுடன் 230 மீற்றர் உயரமாக உள்ள எல்டெயார் டவரில் 4 விதமான 407 அதி சொகுசு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

# அப்துல் ஹலீமிற்கு கொரோனா தொற்று

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீமிற்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அதன்படி பாராளுமன்றில் கொரோனாத் தொற்று உறுதியாகிய 8 ஆவது உறுப்பினர் இவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

ஏற்கனவே தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார, பியல் நிஷாந்த மற்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, வசந்த யாப்பா பண்டார மற்றும் அருந்திக பெர்னாண்டோ ஆகியோருக்கு தொற்று உறுதியானது. (நி-4)

## இனப் படுகொலை...

நேற்றுக் காலை தி.மு.க தலைவர் ஸ்டா லின்தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

இதில் இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கும் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வை வழங்கும் பொருட்டு பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கும் மத்திய அரசை வலியுறுத்தவுள்ளதாக தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங் கள், இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயற் படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், இலங்கையின் வடக்கு-கிழக் கில் நீர்த்துப்போன அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன.

எனவே, அங்குள்ள தமிழர்களின் விருப் பத்திற்கு ஏற்றவாறு நிரந்தரமான அரசி யல் தீர்வு அமைய ஈழத் தமிழர்கள், புலம் பெயர் தமிழர்கள் இடையே ஐ.நாவின் மேற் பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தவும் மத்திய அரசை தி.மு.க வலியுறுத்தும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ம-3)


**வீடும் காணியும் விற்பனைக்கு**

துன்னாலை மத்தி, கோவிற் கடவையில் கட்டுக்கிணறு வசதியுடன் நான்கு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. **விலை 35 இலட்சம்.** (1696)

**தொடர்பு - 077 969 0990**


**மெகா பவர்**

திகதி 13/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0789
வெற்றி எழுத்து U | சுப்பர் இலக்க 10 | வெற்றி இலக்கங்கள் 11 31 51 57

**மஹஜன சம்பத**

திகதி 2021/03/13
சீட்டிழுப்பு இலக்கம் 4425
ஆங்கில எழுத்து N | வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 5 1 7 8 8
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 13.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2720
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 04 40 54 64
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 13/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1104
வெற்றி இலக்கங்கள் 6 6 8 0 2 6
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**

திகதி - 13/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 462
N 05 21 71 82
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
3 2 8 1
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

## வவுனியாவில்...

குறித்த பகுதியில் ஹெரோயின் விற் பனை இடம்பெறுவுள்ளதாக பொலிஸா ருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கை களை மேற்கொண்ட பொலிஸார் போதைப் பொருளை விற்பனை செய்யவந்த நபரையும், அதனை கொள்வனவு செய்ய வந்த ஒருவரையும் கைது செய்துள்ள னர். (ம-3,250)

## மீன் வியாபாரி...

ரூபாய் பணத்தை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் பருத்தித்துறை வல்லி புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை மணற்காட்டுப் பகுதி யில் மீனை கொள்வனவு செய்து நெல்லி யடியில் விற்பனை செய்வதற்காக வந்துள் ளார்.

இதன்போது அவரின் மோட்டார் சைக் கிளை பின்தொடர்ந்து வந்த இருவர் மீன் வியாபாரியின் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சைகை காட்டி அவரிடம் மோட்டார் சைக்கிளின் ஆவணங்களை பரிசோதிப்பதுபோல பரிசோதித்து கொண் டிருக்கும்போது அவரின் சட்டைப் பைக்குள் இருந்த 14 ஆயிரம் ரூபாய் பணத்தை பறித் தெடுத்ததுடன் மோட்டார் சைக்கிளின் ஆவணங்களையும் வீசி விட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். (ம-3,60)

## கொரோனா...

ழந்துள்ளார்.

இதனால் மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 526ஆக அதிகரித்துள் ளது. (ம-3)

## குப்பிழான்...

சடலமும் நேற்றுச் சனிக்கிழமை மாலை கரை ஒதுங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் குப்பிழான் மற்றும் வேறு இடங்களைச் சேர்ந்த ஏழு இளை ஞர்கள் இணைந்து கடந்த வியாழக் கிழமை மகா சிவராத்திரி வழிபாட்டிற் காகத் திருக்கோணேஸ்வரம் ஆலயத் திற்கு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நிலையில் வழிபாட்டின் பின்னர் நேற்று முன்தினம் மாலை நிலாவெளிக் கடலில் குளிக்கச் சென்றனர்.

இதன்போது நீரில் மூழ்கிய இளை ஞர்களில் இருவர் காணாமற்போயிருந்த நிலையில் குப்பிழான் தெற்கைச் சேர்ந்த என். கௌதமன் (வயது-21) நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

குப்பிழான் வடக்கைச் சேர்ந்த சிவச்சந் திரன் சிந்துஜன் (வயது-21) என்ற இளை ஞன் காணாமற்போயிருந்து கடலில் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று மாலை அவரது சடலமும் கரை ஒதுங்கியது. சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் குறித்த இளைஞனின் சடலமும் உற வினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-3,18)

## வடக்கில் 7 பேரு...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 485 பேரின் மாதிரிகள் நேற்று சனிக்கிழமை பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில், யாழ். மாவட்டத்தில் நான்கு பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு வரும் மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் கொரோனா தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சுகா தார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், மன்னார் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப் பட்டுள்ளதாக கேதீஸ்வரன் குறிப்பிட்டுள் ளார். (ம-3,18,33,316)

## ஜனாதிபதி...

பிரதமர் நரேந்திர மோடியும் தொலைபேசி யில் கலந்துரையாடியதாக தகவல் வெளி யாகியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற் கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

தொலைபேசி ஊடாக நேற்று சனிக் கிழமை பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாக இந்திய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அபிவிருத்திப் பணிகள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப் புக்கள் தொடர்பாக இதன்போது ஆராயப் பட்டுள்ளதாக இந்திய பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது

மேலும், கோவிட்-19 தொற்று காரணமாக எதிர் நோக்கியுள்ள சவால் கள் குறித்தும் இதன்போது கலந் துரையாடப்பட்டுள் ளது.

இதேவேளை, இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை யில், இலங்கைக்கே முக்கியத்தும் வழங்கப்படும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ள தாக பிரதமர் அலு வலகம் வெளியிட் டுள்ள அறிக்கை யில் மேலும் கூறப் பட்டுள்ளது. (ம-3)

## விக்...

கள் மற்றும் பிரதி நிதிகளுடன் இந்தி யத் தூதுவர் கோபால் பாக்லே தனித் தனியாக கலந்துரையாடி யுள்ளார்.

இதன்போது, இலங்கையின் அபிவிருத்தி மற் றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இந்தியா தொடர்ந் தும்வலியுறுத்திவரு வதாக இந்தியத் தூதுவர் தெரிவித் துள்ளார். (ம-3)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## தென்னாபிரிக்கா...

மையை தவிர்க்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை மருத் துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு இடம்பெறாவிட்டால் எதிர் காலத்தில் தொடர் பிரச்சினைகளை எதிர் நோக்க நேரிடும் என சங்கம் எச்சரித் துள்ளது. (ம-3)

## பிக்கப் மோதி...

இதில் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியைச் சேர்ந்த பீற்றர் கிறிஸ்ரோ லோகாஸ் (வயது-59) என்ற குடும்பஸ் தரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை துவிச்சக்கரவண்டியில் சென்றபோது ஏ9 வீதி கச்சேரிப் பகுதியில் பிக்கப் வாகனம் மோதியதில்படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


**வீட்டுடன் காணி தேவை**

இணுவில் கந்தசுவாமி கோவில், பரராஜசேகரப் பிள்ளையார் கோவிற் சூழலில் இரண்டு பரப்பு காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. (1696)

**தொடர்பு - 077 969 0990**


**ஷனி** (சனி)

சீட்டிழுப்பு வாரம் 060
சீட்டிழுப்பு திகதி 13.03.2021
வெற்றி இலக்கங்கள் 19 36 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,458,780/=
அபிவிருத்தி லொத்தர் சபை
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி** ADA KOTIPATHI

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1221
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 13.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 117,218,080
வெற்றி இலக்கங்கள் 33 35 65 72 ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** Shanida

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3551
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 13.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,317,089
வெற்றி இலக்கங்கள் 40 46 54 68 ஆங்கில எழுத்து Z
ரூ. 500/= பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி** அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் 28,91,796/=
திகதி : 13.03.2021
வெற்றி வாரம் : 3102
வர்ணம் : இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 02 23 44 52 சிம்மம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,871,360

**SUPER BALL** சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1395 | நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 13/03/2021 | தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 01 13 20 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 74,017,562/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

**ஸம்வர்தன வாசனாவ** அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 418 | திகதி 13.03.2021 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கங்கள் 38 63 68 | விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,995,876
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

## வீடு வாடகைக்கு

நெல்லியடி, கொடிகாமம் வீதியில் சாமியன் அரசடி சந்தியில் இருந்து கரவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் சகல நவீன வசதிகளும் கொண்ட இரு மாடி வீடு வாடகைக்கு உண்டு. (C-1668)

**தொடர்பு : 076 600 8363**

## தீபம் கல்வி நிலையம்

இல. 11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ். மாவட்டத்தில்...** தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

### A/L 2023 கலை, வர்த்தகப் பிரிவு

**வர்த்தகப் பிரிவு**

- கணக்கீடு – K. பாலகஜன் M.Com ( ACC. Spl. )
- பொருளியல் – V. ஜெகதிஸ் BA ( Hons ) Eco. Spl.
- வணிகம் – S.K பாலசபேஷ் B.Com ( HNDA )

**கலைப் பிரிவு**

- தமிழ் – இ.இ. வசீகரன் B.A
- புவியியல் – K.T. ஜெராட் B.A (Hons) Geo Spl.
- அரசியல் – R. பாலகாந்தன்
- கிறிஸ்தவ நாகரீகம் – J. சரோன் B.A (Hons) Chri. Civil Spl.
- வரலாறு – K. கலைச்சந்திரன் B.A (Hons), PGDE
- ICT – N. நிரோஜன் B.Sc in Computer Science

A/L 2021, A/L 2022 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**A/L 2023 ஆரம்பம்** – **15.03.2021** மாலை 3.00 மணி

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம் (6122)

**தொடர்பு : 077 224 7781** நிர்வாகி

## BOC TRAVELS (Pvt)Ltd.

Hospital Road, Jaffna.

BOC Travels நிறுவனமானது தற்போதைய கோவிட் - 19 பரவல் காலத்திலும் தமது பயணிகளுக்கு பாதுகாப்பான சேவையை வழங்கிவருகின்றது. (C-1638)

**021 222 4575/76, 070 384 9335, 070 395 1794**

## வேலையாட்கள் தேவை

மங்கலகரமான நிகழ்வுகளுக்கு உணவு பரிமாறுபவர்கள் மற்றும் யாழ். நகரில் இயங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் துப்பரவு தொழிலாளியாக பணிபுரியக் கூடியவர்கள் தேவை. (C-1684)

**077 076 1700, 070 696 6111**

## வேலை வாய்ப்பு

**Job! Job! Job! ... 076 770 7759**

நீங்கள் O/L and A/L பயின்றவரா?
இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. வடக்கு மாகாணம் முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை.

**நிர்வாக அதிகாரி, செயற்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், மேற்பார்வையாளர்.**

பயிற்சிக்காலம் 18,000/= தொடக்கம் 22,000/= வரை
பின் குறைந்தது 45,000/= வரை (6162)

the Inner Circle



**இல. 100/3, முட்டாசுக் கடைச் சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**Inner Circle (Pvt)Ltd.**

## CLERK தேவை (பெண்)

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்திற்கு O/L தகைமையுடன் 3km இற்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
ஆர்வமுள்ளோர் இன்று 14.03.2021 ஞாயிறு 3.00 மணிக்கு CV உடன் நேரில் வரவும். (C-1667)

**No. 19, Palaly Road, Aariyakulam**
**077 978 9456, 076 937 0456**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1634)

**077 436 6704, 077 179 1963**

## வேலை வாய்ப்பு

உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர், விற்பனையாளர் உடன் தேவை. (C-1695)

**தொடர்பு 077 725 9245**

## சொர்க்கம் திருமண சேவை

சுவிஸ்லாந்தில் வசிக்கும் 35 வயது, மிருகசீரிட நட்சத்திர, செவ்வாய் குற்றமுள்ள மணமகனுக்கு மணமகளையும் இலங்கையில் சொந்த தொழில் புரியும் 33 வயது, அனுச நட்சத்திர மணமகனுக்கு மணமகளையும் தனியார் துறையில் தொழில் புரியும் 36 வயது மணமகனுக்கு மணமகளையும் தேடுகிறோம்.

**www.sorkham.com**
**0014166661855**
**077 650 5097**
**021 222 1515** (6157)

## மணிவிழா வாழ்த்து



Best Wishes

**உயர்திரு.**
## செல்வரட்ணம் சந்திரராஜா

( வலயக் கல்விப் பணிப்பாளர் )
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்.

சேவைக் காலம் :- 28 வருடங்கள்
ஓய்வுநாள் :- 2021.03.13

தங்களின் கல்விப் பணியைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்.
(C-1685)

## வேலைவாய்ப்பு

வடமாகாணத்தில் பிரபலமாக இயங்கிவரும் என் பிளாஸ் சுப்பர் டிடயண்ட் (N Flash Super detergent) நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களிலிருந்து பின்வரும் தகுதியுடைய ஆட்கள் வேண்டப்படுகின்றனர்.

- விற்பனைப் பிரதிநிதி ( Sales Representative )
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ( Marketing Staff )
- காட்சியறை முகாமையாளர் ( Show Room Manager )

**விண்ணப்பதாரி 18 வயது தொடக்கம் 50 வயதுவரை இருத்தல் வேண்டும்.**
**( முன் அனுபவம் விரும்பத்தக்கது )**

உங்கள் விண்ணப்பங்களை இல. 607, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 22.03.2021 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கவும். (C-1691)

## விற்பனைக்கு

யாழ். முள்ளானை சிவன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீடும் 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு ( இளவாலை பிரதான வீதியிலிருந்து 400 m ) (6127)

**075 477 7063**
**077 525 9961**

## வேலை ஆள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு பைண்டிங் வேலை [ புத்தகம் கட்ட ] தெரிந்த / பழக விரும்புபவர்கள் (பெண்) தேவை . (யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.)

**077 482 1912**

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

**UK-1000/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

**எமது நேரடிக்கிளைகள்**

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1636)

**0768226240** DHL

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

**3-6 நாட்கள்** – **லண்டன் 1000/=** – **070 3305500, 077 888 9388** (C-1637)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 300

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 14.03.2021 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் முதன்மை வகித்துச் சென்ற தவத்திரு வேலன் சுவாமிகளிடம் பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்குச் சென்ற சம்பவம் தமிழ் மக்களை வேதனைப்படுத்தியுள்ளது.

சைவசமயத் தலைவர்களுக்கு இலங்கை அரசாங்கம் கொடுக்கின்ற மரியாதை எப்படியாக இருக்கிறது என்பதைத்தான் மேற்போந்த சம்பவம் சுட்டிக்காட்டுகிறது எனக் கடுப்போடு கூறினார்.

**விதானையார்:** பண்டிதர் கூறிய விடயத்தில நிறைய உண்மைகள் இருக்கத்தான் செய்யுது.

வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெறச் சென்ற பொலிஸார் பௌத்த பிக்குகளிட்ட எப்பவாவது வாக்குமூலம் எடுத்தவியளோ? அல்லது ஏனைய சமயத் தலைவர்களிட்ட வாக்குமூலம் எடுப்பினமோ?

ஆனால் வேலன் சுவாமிகளிட்ட வாக்குமூலம் எடுக்கிறதில மட்டும் அவையளுக்கு எந்தத் தடையும் இல்லை.

**சாத்திரியார்:** இலங்கையில சைவசமயத்தை கடைசிச் சமயமாகத் தானே கருதுகினம். இது அரசாங்கத்தில மட்டுமல்ல எங்கட வடக்கு, கிழக்கு மாகாணத்திலும் சைவசமய நிந்தனை இருக்கத்தான் செய்யுது.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** கிளிநொச்சியிலுள்ள வள்ளுவர் கோட்டத்தில வள்ளுவர் சிலை ஒன்றை நிர்மாணித்தவியளாம். அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வள்ளுவர் சிலைக்கு திருநீற்றுக்குறி வைப்பதற்கு அனுமதிக்க முடியாதென வடக்கு மாகாண பிரதம செயலகம் அறிவித்திருக்குதாம்.

**கங்காணி:** அட! சங்கதி அப்படியோ? அப்ப முன்பெல்லாம் பாடப் புத்தகத்தில வெளிவந்த வள்ளுவரின் உருவப் படத்தில திருநீற்றுக்குறி வைத்திருந்ததெல்லாம் பிழைதானே.

**சிறாப்பர்:** நீங்க இருந்து பாருங்க. இனி இங்கு சைவசமய நடைமுறைகள் இல்லாமல் போகும்.

அதற்குரிய ஏற்பாடுகள் அத்தனையும் செய்யப்பட்டு விட்டன.


அதற்குரிய ஏற்பாடு... க்க, வேலன் சுவாமிகளிட்ட வாக்குமூலம் எடுக்கப் போன பொலிஸார் பற்றிச் சொல்லுங்களன்.

**விதானையார்:** இப்ப நேரம் இல்ல. முன்கூட்டியே நேரத்தை அறிவித்துப் போட்டு வாங்க எண்டு பொலிஸாருக்கு வேலன் சுவாமிகள் சொல்லிப் போட்டார்.

**கங்காணி:** அதுதான் சரி. துறவிக்கு வேந்தன் துரும்பல்லோ. பௌத்த பிக்குகளைக் கண்டால் ஐம்புலன்களையும் அடக்கி நிற்கிற பொலிஸார் சைவசமயத் துறவிகளிட்ட எண்டால், கேட்டுக்கொண்டு தங்கட கடமையை மறந்து நின்ற பொலிஸார், எந்த முன்னறிவித்தலும் இல்லாமல் வேலன் சுவாமிகளின்ர ஆச்சிரமத்திற்குள் நுழைஞ்சது மாபெரும் பிழை. இதற்காக சம்பந்தப்பட்டவர்கள் சைவமக்களிட்ட மன்னிப்புக் கோர வேணும். இவ்வாறு கூறியதும் அதனை ஒரு தீர்மானமாக ஆலடி மாநாடு நிறைவேற்றியது.

(தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது).

அமைதியைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.



## சைவத் துறவற சபையை இங்கு ஆரம்பிக்க வேண்டும்

**விதானையார்:** இஞ்சே சிறாப்பர் கத்தோலிக்க சமயத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வரவேணும் எண்டு மன்னார் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகம் அறிக்கை விடும் போது நீங்களேன் குத்தி முறியிறியள்.

**வாத்தியார்:** அதுதானே! திருக்கேதீச்சரநாதன் பாலாவித் தீர்த்தமும் வேண்டாம். சிவராத்திரியும் வேண்டாம் எண்டு இருந்திட்டார்.

**பண்டிதர்:** சரி...சரி... இதுகள் ஒருபுறம் இருகேள்வி இல்லாமல் போவினமாக்கும்.

**பண்டிதர்:** எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் திடீரெனச் சென்று வேலன் சுவாமிகளின் ஆன்மிகப் பணிகளுக்கு இடையூறு செய்த பொலிஸாரின் செயலை ஆலடி மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திருகோணமலை கிண்ணியாவில, முல்லைத்தீவு செம்மலையில எல்லாம் பௌத்த பிக்குகள் சண்டித்தனம் செய்தபோது கையைக் கண்டிக்கொ

**வாத்தியார்:** முன்னறிவித்தல் இல்லாமல் வேலன் சுவாமிகளிட்ட வாக்கு மூலம் எடுப்பதற்குப் பொலிஸார் சென்றது பிழைதான். ஆனால் இந்தப் பிழையை பொலிஸார் பௌத்த பிக்குகளிடம் மட்டுமல்ல கத்தோலிக்க மதத் தலைவர்களிட்டயும் செய்ய மாட்டினம் எனும் போது எங்கட சைவசமயத்தில எங்கயோ ஒரு தவறு இருக்குது என்பதுதான் என்ர கருத்து.

**வாத்தியார்:** சாத்திரியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. எங்கட சைவசமயத்தில ஒற்றைப் பிரமச்சரிய நடைமுறைதான் மரபாக இருக்குது.

அதாவது தனித்து ஒருவர் ஒற்றைத் துறவியாக இருந்து சைவப் பணி, தமிழ்ப் பணி செய்யிறது என்ற நிலைமை தான் இங்க இருக்கிறதைக் காணலாம்.

உதாரணத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தவத்திருவேலன் சுவாமிகள் என அனைவரும் ஒற்றைத் துறவு பூண்டு பெரும் பணி செய்தனர், செய்கின்றனர்.

ஆனால் எங்களிட்ட ஒரு துறவற சபை இல்லாததுதான் பெரும் குறையாக இருக்குது.

**மூப்பர்:** வாத்தியார் எதையும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்க.

**வாத்தியார்:** மூப்பர் அண்ணே! உங்களின்ர கத்தோலிக்க் மதத்தில துறவற சபை பலமாக இருக்குது. அதுபோல பௌத்தத்தில பௌத்த துறவிகளுக்குக் குறைவே இல்லை.

ஆனால் எங்கட இந்தியாவில இருக்கிற இராமகிருஷ்ண மிஷன், காஞ்சி காமகோடி பீடம் போன்ற துறவறத்துக்கான பீடங்கள் எங்கட ஈழமண்ணில இல்லாததுதான் பெரும் குறை.

**பண்டிதர்:** உண்மைதான். எங்களிட்டயும் ஆயிரம் துறவிகள் இருந்தால் அதுவும் பலம் தானே!

**சிறாப்பர்:** அப்ப ஒரு துறவற சபையை உருவாக்க வேணும் எண்டு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம். இப்படி சிறாப்பர் கூறியதும் திடீரென எழுந்த வாத்தியார்; இந்தப் பணியை தவத்திரு வேலன் சுவாமிகள் பொறுப்பெடுத்து சைவத்துறவிகளை உருவாக்க வேண்டும். இது சைவசமயத்தைக் காப்பாற்றுவதற்கு அவசியம் என்றுகூற, அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருக்கிறது என்பதை உணர்த்துவது போல கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# கவலைக்கிடமாகும் தமிழர் நிலை

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை 46ஆவது கூட்டத்தொடரின் ஆர வாரங்கள் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளன. பிரித்தானியா தலைமையில் ஆறு நாடுகள் கூட்டுச்சேர்ந்து இலங்கை தொடர்பாக முன்வைத்த பிரேரணை பலத்த வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியுள்ளது.

டொனமூர் அரசியல் யாப்பு போல பிரேரணையோடு தொடர்புடைய இலங்கை அரச தரப்பையும் தமிழ்த்தரப்பையும் பிரேரணை திருப்திப்படுத்தியதாக இருக்கவில்லை. உறுப்பு நாடுகளின் அபிப்பிராயங்களின் பின்னர் பிரேரணையில் மாற்றங்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தமிழ் மக்களுக்கு சார்பாக எதுவும் வரப்போவதில்லை. முன்னைய பிரேரணைகளின் விவாதத்தின் பின்னரே பிரேரணையின் உள்ளடக்கம் நீர்த்துப் போவது வழக்கம். இந்தத் தடவை பிரேரணையே நீர்த்துப் போன நிலையில் தான் வெளி வந்திருக்கின்றது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் அதற்குச் சார்பான நாடுகளும் பிரேரணையை ஆதரித்து கருத்து தெரிவித்துள்ளன. மனித உரிமை அமைப்புக்கள் பிரேரணை தொடர்பாக பெரிய திருப்தியைக் கொண்டிராது விட்டாலும் பிரேரணையை வரவேற்கின்றன. இலங்கை அரசாங்கம் பிரேரணையை முழுமையாகவே நிராகரித்துள்ளது. அதனை தோற்கடிப்பதற்காக அங்கத்துவ நாடுகள் மத்தியில் பிரசாரங்களையும் முடுக்கிவிட்டுள்ளது.

இலங்கையின் மிக நெருங்கிய நட்பு நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் நேரடியாகவே களத்தில் இறங்கியுள்ளன. பாகிஸ்தான் அதிக முனைப்புடன் செயற்படுகின்றது என்று கூறலாம். குறிப்பாக முஸ்லிம் நாடுகளை வளைத்துப் போடுவதற்கு அது பாரிய முயற்சிகளைச் செய்துவருகின்றது. முஸ்லிம் நாடுகளை திருப்திப்படுத்துவதற்காக முஸ்லிம்களின் ஜனாஸா அடக்கத்திற்கும் அனுமதி வழங்கியுள்ளது. இன்னோர் பக்கத்தில் தமிழ் முஸ்லிம் முரண்பாட்டை தேற்றுவிப்பதற்காக கிளிநொச்சி இரணைதீவில் அடக்கம் செய்யும் யோசனையையும் முன்வைத்துள்ளது.

ஜெனிவா பிரேரனை தொடர்பில் உலகமே பனிப்போர் காலம் போல இரண்டாகப் பிளவடைந்துள்ளது. அமெரிக்கா, மேற்குலகம் சார்பான அணி பிரேரணையை ஆதரிக்க சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் அணி பிரேரணையை எதிர்க்கின்றது. சிரியப் போரில் இடம் பெற்ற பனிப்போர் இங்கும் மேகம் கொண்டுள்ளதைப் போலவே தெரிகின்றது.

இது இன்னோர் வகையில் பனிப்போரின் தெற்காசிய விஸ்தரிப்பு எனலாம். அமெரிக்கா - மேற்குலக - இந்தியக் கூட்டின் இந்தோனேசியா - பசுபிக் மூலோபாயத் திட்டத்திற்கும் சீனாவின் ஒரே பட்டி ஒரேபாதைத் திட்டத்திற்கும் இடையிலான போர் எனவும் கூறலாம்.

பிரேரணை ஒரு தரப்பு வெற்றிபெற்றாலும் பனிப்போர் தொடர்வதற்கான வாய்ப்புக்களே அதிகளவில் உள்ளன. முன்னரே கூறியது போல தமிழ்த்தரப்பு பிரேரணை தொடர்பாக கடும் அதிருபதியடைந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அறிக்கையுடன் எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொண்ட தமிழ்த் தரப்பு தற்போது மோசமாக நொருங்கிப்போயுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துதல், நாடுகள் தங்களது நீதி




மன்றங்களில் விசாரணை செய்தல், பயணத்தடை, சொத்து முடக்கம் போன்ற ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் இருந்த விடயங்கள் தமிழ் மக்களிடம் பலத்த எதிர்பார்ப்புக்களை வளர்த்திருந்தன. இந்தத் தடவை ஜெனிவாவில் ஒரு விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கைகளும் வளர்ந்திருந்தன. ஆனால், இலங்கை அரசு ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிராகரித்தமை, பூகோள அரசியல் என்பன தமிழ்த் தரப்பிலுள்ள முன்னேறிய பிரிவினர் மத்தியில் நம்பிக்கைகளை வளர்த்த போதும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அறிக்கைகள் தான் சாதாரண மக்கள் மத்தியில் நம்பிக்கைகளை வளர்த்திருந்தது. அந்த நம்பிக்கைகள் அனைத்தும் தற்போது பொசுங்கிப் போயுள்ளன.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மனித உரிமை மீறல்களை நேரடியாக அனுபவித்தவர். அரசின் அடாவடித் தனங்களுக்கு தனது தந்தையையும், காதலனையும் பறிகொடுத்தவர், நீண்டகாலம் சிறையில் இருந்தவர். அவருக்கு இதன் வலி அனுபவ பூர்வமாகவே தெரியும். அவரது அறிக்கை காட்டமாகவே வெளிவருவதற்கு இப்பின்னணியும் ஒரு காரணம்.

தவிர மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகருக்கு மனித உரிமைகள் விவகாரம் தான் முதல் நிலைத்தெரிவு சர்வதேச அரசியல், பூகோள அரசியல் என்பன வெல்லாம் அவருக்கு இரண்டாம் நிலைதான். ஆனால் வல்லரசுக ளுக்கு சர்வதேச அரசியலும் பூகோள அரசியலும் தான் முதல் நிலைத் தெரிவா கும். மனித உரிமை விவகாரங்கள் இரண்டாம் நிலை தான். பிரேரணை நீர்த்துப் போன வடிவத்தில் வெளிவந்த மைக்கு இந்த யதார்த்த நிலை தான் காரணம்.

பிரேரணையில் தமிழ் மக்களுக்கு சாதகமான விடயங்கள் இரண்டு தான். சாட்சியங்களைத் தொகுத்தல், ஐ.நா. கண்காணிப்புப் பொறிமுறையை உருவாக்குதல் என்பவையே அவையாகும்.

இதில் முதலாவது விடயம் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழர் என்று எந்த இடத்திலும் குறிப்பிடாமை, இலங்கை முழுவதற்குமான மனித உரிமை விவகாரமாக வெளிப்படுத்தல் செய்தமை, தமிழ்த்தரப்பு எதிர்நோக்கும் அண்மைக்கால ஆக்கிரமிப்புக்கள் தொடர்பாக எதுவும் பேசாமை, அரசியல் கைதிகள் விவகாரம் பற்றி எதுவும் பேசாமை என்பனவும் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்திகளை வளர்த்துள்ளன.

தமிழ்த் தரப்பு பிரேரணைகளை எதிர்க்காமல், அதுபற்றிய விமர்சனங்களை பெரிதாக முன்வைக்காமல் தங்களது அடிப்படைக் கோரிக்கையான சர்வதேச குற்றவிய நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துதல் என்பதை தற்போது முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பான போராட்டங்கள் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரித்தானியாவில் அம்பிகை என்ற பெண்மணி சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். அவருக்கு ஆதரவாக தாயகத்தில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. புலம்பெயர் நாடுகளிலும் வெவ்வேறு வகையான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் தேர்தல் காலமாக இருப்பதால் பெரியளவிற்கு போராட்டங்கள் வளரவில்லை. இந்தப் போராட்டங்கள் இன்னமும் பெரியளவிற்கு எழுச்சியடையவில்லை.

போர்க்குற்றம், தமிழ்மக்களுக்கான மனிதஉரிமை மீறல்கள் என்பன பெரும் தேசியவாதத்தின் முடிவு. அதாவது பெரும் தேசியவாதம் மேலாதிக்கம் செலுத்தும் சிங்கள அரசின் முடிவு. அதனை பெரியளவில் கேள்விக்குட்படுத்துவது பெரும் தேசியவாதத்தைக் கோபப்படுத்தி அதன் வழி சிங்கள லிபரல்களையும் பலவீனப்படுத்தும். எனவே போர்க்குற்ற விவகாரங்களையும், தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை விவகாரங்களையும் ஒரு மட்டத்திற்கு மேல் கொண்டுசெல்வதற்கு மேற்குலகம் தயாராக இல்லை.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தைப் பொறுத்தவரை இலங்கைத் தீவிலும் அதன்வழி இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்கு இந்தோ-பசுபிக் மூலோபாயத்திட்டத்தையே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்கிற்கு முழு இலங்கைத் தீவுமே அதற்குத் தேவை அதுவும் பெரும் தேசியவாதத்துடன் மோதாத நிலையை பின்பற்றுவதற்கு பிரதான காரணம். இந்த இலக்கிற்கான சூழல் இருக்கும் வரை தமிழர் விவகாரத்தை ஒரு கட்டத்திற்கு மேலெடுக்க மாட்டாது.

சிங்கள தேசம் முழுமையாக சீனாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அமெரிக்க-மேற்குலக - இந்தியக் கூட்டத்திற்கு சிறிய இடம் கூட அங்கு இல்லை என்ற நிலை வரும் போது தான் தமிழ் மக்கள் விவகாரத்தை இவை கையிலெடுத்து முன்னிலைப்படுத்தும். அதுவரை தமிழ் மக்கள் கறிவேப்பிலை தான். எனினும் தமிழ் மக்களை முழுமையாக கைவிட அவற்றினால் முடியாது ஏனெனில் சிங்கள தேசத்தைக் கையாள்வதற்கு அவற்றிற்கு கிடைத்த ஒரேயொரு கருவி தமிழ் மக்கள் மட்டும் தான்.

மேற்குலகின் இந்தப் பலவீனத்தை தமிழ்த் தரப்பு சரியாக புரிந்து கொள்ளுமாக இருந்தால் தமிழத்தரப்பும் இந்த மைதானத்தில் கௌரவமாக விளையாட முடியும். இதற்கு சர்வதேச அரசியல், பூகோள அரசியல் பற்றிய பாரிய புரிதலும், அதனை ஒட்டிய செயற்பாடுகளும் தமிழ்த் தரப்பிற்கு தேவை.

இலங்கைத்தீவு விவகாரத்தில் இந்தியாவின் நிலை தான் மிகவும் பரிதாபகரமானது. இலங்கை தொடர்பான அதன் இராஜதந்திரம் படுதோல்வியடைந்திருக்கின்றது. ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைத்தீவு தனது பொக்கற்றுக்குள் இருக்கும் என்று இந்தியா நினைத்தது. அந்த நினைப்புக்கு மாறாக இலங்கைத்தீவு சீனாவின் பொக்கற்றுக்குள் சென்று விட்டது. தற்போது இந்தியா என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

இந்தியா தனது கடந்த காலத்தை முழுமையாக மீள் பரிசீலனை செய்து திட்டங்களை வகுப்பதன் மூலமே இப்போக்கில் மாற்றங்களைச் செய்ய முடியும். இலங்கை அரசு ஏதாவது செய்து இந்தியாவை சமாளிப்பதற்கு முயல்கின்றது. சீனாவை திருமணம் செய்து கொண்டு இந்தியாவுடன் வாழ விரும்புவதாக நடிப்புக்காட்டுகின்றது. ஒரே நேரத்தில் துறைமுக கிழக்கு முனையம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள், தீவுப்பகுதிகளில் காற்றாலைகள் என்று பல பிரச்சினைகளை இந்தியாவிற்கு எதிராக இலங்கை கிளப்பி விட்டுள்ளது. இதில் அவற்றுக்கு தீர்வுகாண முடியாமல் இந்தியா தடுமாறுகின்றது. ஜெனிவாவில் இந்தத் தடவை இந்தியா தமிழர் விவகாரத்தையும் கிளப்பியுள்ளது.

பிரேரணை வாக்கெடுப்பின்போது இந்தியா நடுநிலை வகிப்பதற்கே அதிக வாய்ப்புண்டு. தமிழ்த்தரப்பின் நிலைதான் அதிக கவலைக்குரியது. ஜெனிவா விவகாரத்தில் தங்களுக்கிடையோயான முரண்பாடுகளை தவிர்த்து சிங்களதேசம் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

தமிழ்க் கட்சிகள் மட்டும் தங்களுக்கிடையே குடுமிச்சண்டை நடத்திக் கொண்டிருக்கின்றன. போராட்டங்களை பொது அமைப்புக்கள் முன்னெடுக்கின்றனவே தவிர தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கவில்லை. ஜெனிவா தொடர்பாக தமிழ்த் தரப்பிடையே பொது அரசியல் நிலைப்பாடும் அதற்கான ஒருங்கிணைந்த வேலைத்திட்டமும் அவசியம்.

இப்போது எழும் கேள்வி தமிழ்த் தரப்பு இந்தப் பணிகளை முன்னெடுக்குமா? சந்தர்ப்பங்கள் மீளவும் வரும் எனக் கூறுவது கடினம். கிடைக்கின்ற சந்தப்பங்களை பயன்படுத்தாவிட்டால் வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.

சி.அ.யோதிலிங்கம்



# சிறுவர் அரங்கம்

## ராஜாவும் மந்திரிகளும்



ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவன் படிக்காதவன். உலக அறிவு என்பது சிறிதும் கிடையாது.

மழைக்குக் கூட பள்ளிக் கூடத்துப் பக்கம் ஒதுங்கியது இல்லை. இவன் தன்னை எல்லா புலவர்களுமே வாழ்த்திப் பாடணும் என்று நினைப்பான். பாடிய புலவர்களின் பாட்டுச் சுவடியினுடைய எடைக்கு எடை பொன் கொடுப்பான்.

பாட்டின் நயமோ, நிலையோ தெரியாத இவன் இவ்வாறு பரிசளிப்பது வேடிக்கையாகவும் விநோதமாகவும் புலவர்களுக்கு இருந்தது.

இறுதியில் ஒரு புலவன் அரசனுக்குப் புத்தி புகட்ட விரும்பினான். அரசன் தராதரம் இல்லாமல் எல்லாப் பாடல்களையும் மதிப்பது கண்டு கோபம் கொண்டான். இந்தப் புலவன் நேராக மன்னனிடம் சென்றான். "நான் தங்களைப் பற்றி ஒரு பாடல் புனைந்துள்ளேன்," என்றான்.

"எங்கே பாடு பார்க்கலாம்," என்றார் மன்னர். புலவர் இனிமையாக ஒரு பாடலைப் பாடி முடித்தான். மன்னனுக்குப் பொருள் புரியாவிட்டாலும் பாடலைக் கேட்க சுகமாக இருந்தது.

பின்னர் அரசர் மந்திரியைக் கூப்பிட்டு, "சரி இந் தப் புலவருக்கு எடைக்கு எடை பொன் கொடுத்து அனுப்பு," என்றார். அவ்வாறு பொன் கொடுக்க முன்வந்தார் அமைச்சர் "உன் பாட்டைக் கொண்டு வாப்பா," என்றார் மந்திரி.

"அதை என்னால் தூக்கி வர முடியவில்லை. தயவு செய்து இரண்டு பேரை அனுப்புங்கள்," என்றார் புலவர்.

மந்திரி வெளியே வந்து பார்த்தார். ஒரு வண்டி யில் ஒரு கரும் பாறைக் கல் ஏற்றி வரப்பட்டிருந்தது.

அக்கல்லில் அப்பாடல் வெட்டப்பட்டிருந்தது. பின்னர் வேலைக்காரர்கள் மூலம் பாறைக்கல்லைத் தூக்கி எடை போட்டு பொன் கொடுக்க முனைந்தனர் முடியவில்லை. அன்றிலிருந்து ராஜா அந்த வழக்கத்தை விட்டு விட்டார்.

அத்துடன் தான் கல்வி அறிவு அற்றவனாக இருப்பது நல்லதல்ல என உணர்ந்து ஒரு குருவை அமர்த்தி கல்வி அறிவு பெற்றான். அதன் பின் அவனது ஆட்சியில் அவன் நாட்டு மக்கள் சுபீட்சம் அடைந்தனர்.

**உலகிலேயே கல்விச் செல்வமே சிறந்த செல்வம்!**

# மகாபாரதம்




துருபதனைக் காண அவர் சென்றபோது துருபதன் அவரை அலட்சியப்படுத்தினான்.

அரசனுக்கும், ஆண்டிக்கும் நட்பா என்றான். துரோணரை அவமானப் படுத்தினான். துரோணர் அவனைப் பழிவாங்க காத்திருந்தார்.

இப்போது அதற்கான நேரம் வந்ததாக எண்ணினார். தன் மாணவர்களை நோக்கி "பாஞ்சால நாட்டு மன்னனை சிறை எடுத்துக்கொண்டு வருக. அதுவே நான் விரும்பும் குரு தட்சணை" என்றார்.

துரியோதனன் படை கொண்டு துருபதனிடம் போரிட்டு தோற்றுத் திரும்பினான். பின் அருச்சுனன் சென்று அவனை வென்று சிறைப் படுத்தி துரோணர் முன் நிறுத்தினான்.

துரோணர் துருபதனை நோக்கி "செல்வச் செருக்கால் தலை நிமிர்ந்து நின்றாயே இப்போது உன் நிலையைப் பார். செல்வம் நில்லாது என உணர். ஆணவத்தை விட்டு அடக்கத்தை கடைப் பிடி.

உன் நாட்டின் பாதியை எடுத்துக் கொண்டு மறு பாதியை உனக்குத் தருகிறேன். நம் நட்பைத் தொடரலாம்" என்று கூறி அவனை ஆரத் தழுவி நாட்டுக்கு அனுப்பினார்.

ஆனால் துருபதன் மனம் மாறவில்லை. துரோணரிடம் முன்னைவிட பல மடங்கு கோபம் கொண்டான். அவரைக் கொல்ல மாபெரும் வீரனை மகனாகப் பெற வேண்டும் என உறுதி பூண்டான். பெரும் வேள்வி செய்தான்.

அந்த வேள்வியிலிருந்து அவனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் தோன்றினர்.

எதிர்காலத்தில் துரோணரை அழிக்கப் பிறந்த அந்த மகன் பெயர் "திருஷ்டத்யும்னன்" மகளின் பெயர் "திரௌபதி".

தன் மகளை பார்த்தனுக்கு மணம் முடிக்க சரியான காலத்தை எதிர்நோக்கி காத்திருந்தான் துருபதன்.

### துரியோதனனின் சதி

திருதராட்டிரன் பார்வையற்றவனாய் இருந்த காரணத்தினால் குருகுலத்து ஆட்சியை பாண்டுவே நடத்தி வந்தான் என்பதால் பாண்டு புத்திரர்களிடம் மக்களுக்கு நாட்டம் அதிகம் இருந்தது. இச்சமயத்தில் அஸ்தினாபுரத்து அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. (தொடரும்)








அன்பு தருவது போல நடித்து ஏமாற்று பவர்கள் இன்னும் இந்த உலகத்தில் இருக்கிறார்களே வியாசரே?

வயது ஏற ஏற நிம்மதி குறைந்து கொண்டே செல்கிறது வியாசரே?

**சுதன் — குப்பிழான்**

**முள்ளிவாய்க்காலுக்கு பொறுப்பு கூறா தவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பு கூறுவார்களா?**

அட போங்கையா முள்ளிவாய்க்காலா? அது எங்கே இருக்கிறது? அதைபற்றி நாம் அறிய வில்லையே?

அங்கு என்ன நடந்தது? பொதுமக்கள் இறந் தார்களா? இல்லையே. பயங்கரவாதிகள்தானே இறந்தவர்கள் என்கிறது அரசு.

அட, பிறந்த பச்சிளம் குழந்தையை பயங் கரவாதி என்று சொல்வதை கேட்கும்போது காதைத் தடவிப் பார்த்தேன். ஏற்கனவே சிறு வயதில் குத்தியிருந்த அடையாளம் இருந்தது.

**கமல் — வல்வை**

**வயது ஏற ஏற நிம்மதி குறைந்து கொண்டே செல்கிறது வியாசரே?**

உண்மைதான். சிறுவயதில் பாடசாலைக்கு நடந்து சென்று புளுதி குடித்து வேலியோரத்து மாங்காய் பிடுங்கித் தின்று பட்டாம் பூச்சி பிடித்து விளையாடி, பாடசாலை உடையு டனேயே மாலை வரை பந்தடித்து மகிழ்ந்து விட்டு வீடு சென்று அம்மாவிடம் அடி வாங்கி அழுது கொண்டிருக்க அம்மா கோப்பையில் சோறு பிசைந்து ஊட்டிவிட்ட அந்த நினைவுகளை நினைக்கும் போது அடடா அதுவல்லவோ வாழ்க்கை என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

**இந்து — யாழ்ப்பாணம்**

**தாய், தந்தையைப் பற்றி சொல்லுங்கள் வியாசரே?**

இந்த உலகில் நிரந்தரமான உறவு எது என் றால் அது தாய் தந்தை மட்டும்தான்.

காதலியின் கதைகேட்டு தாயின் இதயத்தை கிழித்தெடுத்துக் கொண்டு ஓடிய மகன் தடுக்கி வீழ்ந்த போது வலிக்கிறதா எனக் கேட்டது தாயின் இதயம்.

சிறிய வீடு. புதிதாக திருமணம் செய்த மகனும் மருமகளும் சந்தோசமாய் இருக்க இரவு வேலை தேடிச் சென்ற தந்தை.

இப்படி தாய் – தந்தை தியாகங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

**அருஷ் — யாழ்ப்பாணம்**

**மேற்கு முனையம் இந்தியாவுக்கு வழங் குவதன் நோக்கம் என்னவாக இருக்கும்?**

கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப் படக்கூடாது என்ற எதிர்ப்பு வலுப்பெற்று அது அரசுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தவே கிழக்கு முனயத்தை தவிர்த்து மேற்கு முனை யத்தை இந்தியாவுக்கு வழங்க இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

மேற்கு முனையத்தையும் இந்தியாவுக்கு வழ ங்கஅனுமதிக்கோம் எனஇப்போதுதொழிற்சங்கங் கள் போர்க்கொடி தூக்க ஆரம்பித்து விட்டன.

ஐ.நாவில் இந்தியாவின் ஆதரவைப் பெற இல ங்கை வடக்கு-கிழக்கைத் தவிர்த்து மேற்கு ஆசையை இந்தியாவுக்குக் காட்டியிருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போமே.

**மலர் — யாழ்ப்பாணம்**

**தமிழினத்தின் துன்பத்தை ஐ.நா. தீர்க் குமா?**

ஐ.நாவின் போக்கு ஆரம்பத்தில் ஏதோ நன் றாகத்தான் போனது.

இதோ தமிழினத்திற்குத் தீர்வு கிடைக்கப் போகிறது என தமிழினம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ஏன் இலங்கை அரசு கூட ஐ.நா.வின் ஆரம் பத்தைக் கண்டு நடுங்கி விட்டது என்றே கூறவேண்டும்.

இப்போது ஐ.நாவின் வேகம் மந்த கதியில் செல்வதை அவதானிக்க முடியும்.

அட போர்க்குற்ற விடயம் என்பதே புதிய வரைபில் இல்லையாம் என்பது முடிவாகி விட்டது. போங்கப்பா கடுப்பேற்றாமல்.

**நிதர்ஷன் — வதிரி**

**இலங்கை கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியில் முன்னேற் றம் தெரிகிறதா வியாசரே?**

இப்போதைய இலங்கை அணி அவ்வளவு அனுபவம் நிறைந்த அணி அல்ல.

இங்கிலாந்துடனான போட்டியில் சொந்த நாட்டில் தொடர் தோல்வியைச் சந்தித்த பின்னர் மேற்கிந் தியத் தீவுகளுக்கு விஜயம் செய்திருக்கிறது.

இங்கிலாந்துடனான தொடர் தோல்விகளுக்கு பின்னர் இலங்கையின் தற்போதைய விளை யாட்டு கொஞ்சம் நம்பிக்கை தரவல்லதாக உள்ளது.

இலங்கை இளம் அணி அடுத்த உலகக் கிண் ணத்திற்கு தயார்படுத்தப்படுகிறது.

இந்தத் தோல்விகள் அதற்கு நல்ல பாடமாக அமையும். அது உலகக் கிண்ணத்தில் நல்ல பெறுபேற்றைத் தரும்.

**சேந்து — வடமராட்சி**

**அன்பு தருவது போல நடித்து ஏமாற்று பவர்கள் இன்னும் இந்த உலகத்தில் இருக்கிறார்களே வியாசரே?**

நம்பியவர்களை துரோகத்தால் ஏமாற்றுபவர் கள் எம்முடன் கூட இருந்தார்கள் என நினைக் கும் போது நெஞ்சம் வெடித்துப் போய்விடும்.

இந்த உலகில் எமக்குள் எந்த ஒளிவு மறைவும் இல்லை என்று நடித்து இரட்டைக் கேம் ஆடும் துரோகத் தனங்களை எண்ணும் போது வார்த் தைகளில் சொல்ல முடியாத வலி நெஞ்சை முட்டி நிற்கிறது.

இந்த துரோகத்தனங்களை இந்த ஜென்மத்தில் மறந்து விடவோ மன்னித்து விடவோ முடியாது.

**அருண் — மானிப்பாய்**

**துரோகிகள் நல்லவர் மீது அம்பு தொடுப் பது ஏன் வியாசர்?**

எம்முடன் கூட இருந்து நல்லவராய் நடித்து எமக்கே தெரியாமல் பலே விளையாட்டுக்க ளைக் காட்டி ஏதோ தம்மைப்போல உத்தமர் இல்லை என காட்டாப்புக் காட்டுவர்.

அவர்கள் புட்டுக்கேடு வெளியே தெரிந்து விட் டால் தான் புரியும் அடடா இந்தப் பூனையும் பால் குடிக்கும் என்று.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# பெண்ணே உலகு!



பாரதி கண்ட புதுமைப்பெண்!
தலைவன் வகுத்த வீரப்பெண்
உலகம் பார்த்த அதிசயப் பெண்
உயிரையே ஈந்த உன்னத பெண்

பேதைகள் என்று போற்றிய பெண்
பூவையும் பொட்டையும்
தாங்கிய பெண்
வீட்டுக்கு விளக்கை
ஏற்றும் பெண் எனும்
விதிகளை மீறி எழுந்த பெண்

தலையைத் தாழ்த்தி நடந்த பெண்
தடைகள் உடைத்து நிமிர்ந்த பெண்
தன் ஆர்வம் கொண்டு எழுந்த பெண்
தரணியெல்லாம் பேசும் பெண்

சமையலுக்காய் குடும்பத்தில்
சரிந்த பெண்
சமைந்த போது வீட்டுக்குள்
முடங்கிய பெண்
திருமணம் எனும் பெயரில்
திருடப்பட்ட பெண்
பாசவலைக்குள் சிக்குண்டு
தவிக்கும் பெண்

அன்பும் பாசமும்
பெண்ணின் சொத்து
அடிமை என்பது ஆணின்
அதிகார சித்து
பெண்கள் இன்றி உலகம் இல்லை
பெண்களைப் போற்றும்
உலகமும் இல்லை

அராலியூர் ப.தர்மகுமாரன்

## மாபெரும் நினைவு முற்றம்-2021

யாழ் ஒளிந்தன்


முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் பாரீர்
யாழ்ப்பாணத்தில் வெகுவிமரிசையாக 2021 இல்
வெசாக் விழா தேசிய விழாவாம் சிங்களத்திற்கு இங்கு
விமரிசையாகக் கொண்டாடுங்கள் அங்கியத்தில்
வன்னியில் நடந்த வன்கொடுமைகள் 2009
வெசாக் விழாவின் இரத்தப்பலியே கண்டீர்
முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் அமைப்போம்
இங்குவரும் வெசாக் விருந்தாளிகளுக்கு காண்பிப்போம்
ஒன்றுபட்டு எம்மழிவை எடுத்துரைத்தால்-இன்று
இடித்துரைப்பார் இல்லா இனமான தமிழினம்
வென்றுபட்டு எழுந்திடுமே என்றும்- எனவே
இன்று தொடங்கிடுவோம் முள்ளிவாய்க்கால்
நினைவுமுற்றம் 2021 அமைக்க
வெசாக் பந்தலுக்கு மேலாக அமைத்திடுவோம்
மதவாதம் புரிந்திடும் மதங்கொண்ட அரசிற்கு
இதமான செய்தியை நாம் தமிழர் கூறிடுவோம்

## விழிப்போடிரு

கவியரசன் கே.ஜே. பிறக்ஸ், அக்கராயன்

விழிப்போடு இரு
காலந்தன்னில் சகுனியாக வந்த கொரோனா
எமக்கு காரியம் செய்யப் போகுது
அதுவே தானே முடிந்த கதையென
மகிழ்ந்திருக்க முளைத்து வந்ததோ கொரோனா
இதனால் மீண்டும் ஊரடங்கா?
விரட்டலாம் விழிப்போடு இரு சுகமாக
வாழ ஆயிரம் வழிகளுண்டு
வாழ்வில் சுகந்தம் வீசவேண்டாமா?
சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வா
தொல்லை விலகும் தானே
விழிப்போடு இரு! பண்பாட்டுப் பழக்கமென
கட்டியணைத்தொரு முத்தமும்
கைகுலுக்கியொரு அணைப்பும் வேண்டாம் விட்டு விடு
கைகும்பிட்டு போட்டொரு வணக்கம் அதுபோதும்
விலகி இருப்பதால் வில்லங்கம் வராது
வாழ்வில் முகக்கவசம் அணிந்துகொள்
எப்போதும் கைகளைக் கழுவியே காரியங்களை தொடங்கு
எந்நேரமும் இடைவெளி ஒருமீற்றர் விலகி நில்
எப்போதும் இல்லறமும் நல்லறமாய் மாறும்

## மௌனத்தின் தேடல்- 519



## காணலாம் கடவுளை

தாயின் கருவறையே
தகுதி வணங்குதற்கும்
போற்றுதற்கும் சிசுவை
சுமந்து பெற்றெடுத்த
தாயாய் அவதரித்து தன்
மழலைச் செல்வத்தை
வலுப்பிடிக்குள் சிக்காமல்
கைப்பலத்தில் காணலாம் கடவுளை

த.சிவகாமி
நல்லூர்

## அன்னையெனும் பெண் தெய்வமே

பாரினிலே தலைவிரித்தாடும்
சிக்கல்கள் பலவற்றின்
கோரப்பிடிதனில் சிக்கிடாது
சிறுவர் தனைக் காப்பாற்றி
நல்வழி காட்டிடும் வல்லமை
அன்னையெனும் பெண் தெய்வத்தினால்
மட்டுமே முடியுமென உணர்ந்திடுவீர்

த.காயினி
நாவலர் வீதி

## ஒற்றைப் பெற்றோர்

கண்ணீரை மழைத்துளியாக்கி
குழந்தைக்கு ஆனந்தமளித்திடுவாள்
தந்தையாக வேடம் தரித்து
தைரியமாக சூழலை மாற்றிடுவாள்
குரைக்கும் நாய்களுக்கு ஓழியமாட்டாள்
தன் தூக்கம் தொலைத்தே
காவலாளியாகிறாள்
மீசை வைத்திடாதவள்
குழந்தைக்கு "சப்ளினாகவும்"
ஊருக்கு "ஹிட்லராகவும்"
பயணிக்கிறாள்

ஆ.நிருஷினி
யாழ்ப்பாணம்

## யாகம்

இது!
பெற்றவன் ஒருவன்
தன் பிள்ளையின்
உயிருக்காக
யாசகம் கேட்கவில்லை...!
வேகமாய் பரவும்
போதை என்னும்
கொடிய அரக்கனின்
கரங்களுக்குள் சிக்காமலும்
உடல் மோகத்திற்கு
தீனி போட எண்ணும்
கரங்களிலிருந்து மீள்வதற்கும்
எச்சரிக்கையுடன் செய்யும் யாகமே...!

சன்.தியானேஸ்
நுணாவில் மத்தி

## மௌனத்தின் தேடல்- 520



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சுமைதாங்கி

தங்கத் தாரகையாய் தரணி தன்னிலே
ஒளி வீசிடச் செய்யும் ஒரே ஒரு ஜீவன் அப்பா
அப்பா என்னும் மூன்றெழுத்துக்கு இலக்கணமாய்
ஆயிரம் அர்த்தங்களை தன்னுள்ளே பொதித்து
இன்பத்தைக் கொடுக்கும் அற்புத பிறப்பு நீயல்லவா
தன்னலம் மறந்து தவமாய்க் கிடந்து
ஊர்போற்ற வாழவைக்கும் உயர்ந்த மனிதன் நீயல்லவா?
மார் தட்டி என்பிள்ளை என தலையிலே தூக்கி
வைத்துக் கொண்டாடும் தன்னிகரில்லா
தலைவன் தந்தையல்லவா?
ஏழேழு ஜென்மத்துக்கும் எனக்குத் தந்தையாய்
வந்துதிக்க வரம் வேண்டுமப்பா?

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

# நல்லிணக்கத்திற்கான தீர்வு 13 ஆவது திருத்தமே



## இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

- ஜெனிவா விடயத்தை கூர்மையாக அவதானிக்கின்றோம்
- அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இலங்கையை பலப்படுத்தும்
- மீனவர்களின் உயிர்கள் கடலில் பலியாவதை அனுமதிக்க இயலாது

**கேள்வி – தற்போதைய நிலைமையில் இலங்கை – இந்தியா உறவை எவ்வாறு காண்கிறீர்கள்?**

பதில் – இந்திய-இலங்கை உறவு என்பது நாகரிகத்தின் இரட்டையர்களாகவே கருத முடிகிறது. மதங்கள், மொழிகள் மற்றும் கலாசாரங்களின் பன்முகத்தன்மையை இரு தரப்புமே ஒரே மாதிரி கொண்டுள்ளது. மேலும் ஜனநாயகத்தின் மீதான பார்வை, பொருளாதார சூழல் மற்றும் புவிசார் மூலோபாயம் போன்றவற்றிலும் நாம் ஒத்திசைத்து செயற்படுகின்றோம். இரு தேசங்களினது மக்களின் உறவுகளும் வலுவாகவுள்ளது. இந்த பொதுவான பன்முக தன்மைகள் இலங்கை - இந்திய உறவின் உறுதியான அடித்தளத்தை வெளிப்படுத்துவதாகவே கருதுகிறேன்.

இந்தியாவின் "அண்டை நாடு முதலிடம்" கொள்கையில் இலங்கை தனிச்சிறப்பிடத்தில் உள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள அரசியல் ரீதியான சிறந்த உறவில் இன்னும் அதீத பொருளாதார உள்ளடக்கத்தையும் கைக்கொள்ள வேண்டியது தேவையாகிறது. இது நிச்சயமாக இரு நாட்டு மக்களுக்கும் நன்மையளிக்கும். கொவிட்-19 தொற்று நோயின் போது நம் நெருக்கமான ஒத்துழைப்பின் நன்மைகள் நிரூபமானது. எனவே நம் கூட்டு எதிர்காலம் மிக நம்பிக்கைக்குறியதாகவே உள்ளது. அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த முயற்சிகளால் இரு தரப்பின் உறவில் வானமே எல்லையாக கொள்ளலாம்.

**கேள்வி – கிழக்குக் கொள்கலன் முனைய ஒப்பந்தத்தை ரத்து செய்தமை தொடர்பில் இலங்கை விளக்கியுள்ளதா? இதனால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அல்லது முன்மொழியப்பட்ட பிற இந்திய திட்டங்களின் எதிர்காலம் எவ்வாறாக அமையும்?**

பதில் – இலங்கை , இந்தியா மற்றும் ஜப்பான் அரசாங்கங்களின் ஒத்துழைப்பில் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தில் 2019 ஆம் ஆண்டில் கையெழுத்திட்டோம். இந்த ஒப்பந்தம் கொண்டிருக்கக் கூடிய சர்வதேச உறுதிப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டிய தன் அவசியத்தை இலங்கை அரசுக்கு மிக உயர்ந்த மட்டத்தில் தெரியப்படுத்தியுள்ளோம். இலங்கை தலைமை தரப்பிலிருந்து இந்தியா இலங்கையின் நெருங்கிய நண்பன் என்ற வகையில், இரு நாடுகளுக்கும் இடையிலான எந்தவொரு பிரச்சினையும் கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்கப்பட முடியும் என்பதை உறுதியாக நம்புவதாக வந்த அறிக்கையை வரவேற்கிறோம்.

மேலும் துறைமுகம் மற்றும் எரிசக்தி போன்ற துறைகளில் பரஸ்பர நன்மை பயக்கும் திட்டங்களை இலங்கையில் செயற்படுத்த இந்தியா ஈடுபாட்டுடனே உள்ளது. கொழும்பிலிருந்து மீளேற்றுமதி செய்வதில் பெரும் பகுதி இந்தியாவுடன் நடைபெறுகிறது என்பதும் உண்மையாகும்.

**கேள்வி – திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியா இலங்கைக்கு மீள வழங்குமா?**

பதில் – இலங்கை எரிசக்தி அமைச்சரின் அண்மித்த செய்தியாளர் சந்திப்பு குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அதாவது பரஸ்பர புரிந்துணர்வுக்கு இணங்க ஒரு கூட்டு முயற்சியாக திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வதாக விரிவான விளக்கத்தை அளித்துள்ளார். எனவே இந்த கூட்டு முயற்சி ஊடாக இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பு வலுப்பெறும்.

**கேள்வி – இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா கொண்டுள்ள திட்டம் என்ன ?**

பதில் – பாக்கு நீரிணை இரு நாட்டிற்கும் பொதுவான கடல் மற்றும் கலாசார வளமாகும். பல தசாப்த காலமாக இரு நாட்டு மீனவர்களும் இங்கு மீன்பிடித்து பயனடைந்துள்ளனர்.

எனவே இங்குள்ள மீனவப் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாக இரு அரசாங்கங்களுக்கிடையில் புரிதல்கள் உள்ளன. எனவே அதன்ஊடாக பிரச்சினைகளை தவிர்ப்பதை கவனத்தில் கொண்டுள்ளோம். மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன்கையாள வேண்டியதன் அவசியத்தை இந்தியா எப்போதும் வலியுறுத்தியுள்ளது.

கடலில் மதிப்புமிக்க மீனவர்களின் உயிர்களுக்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ள அதிக முயற்சி எடுக்க வேண்டும். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் கடலில் இறந்த விசாரணை முடிவுகளை எதிர்பார்த்துள்ளோம். மறுபுறம் மீன்பிடி சமூகங்களின் நலனுக்காக மீன்வள உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றவும் இந்தியா தயாராக உள்ளது.

**கேள்வி – காங்கேசன்துறை மற்றும் காரைக்கல் இடையே படகு சேவை எப்போது ஆரம்பிக்கப்படும்? அதேபோன்று பலாலிக்கான விமான சேவைகளை ஆரம்பித்தல் புதிய இணைப்புத் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?**

பதில் – இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இணைப்பினை மேம்படுத்துவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். பல நூற்றாண்டுகள் பழைமையான படகு சேவைகளை மீண்டும் ஆரம்பித்து சுற்றுலா மற்றும் சிறிய அளவிலான வர்த்தகத்தை இரு வழிகளிலும் எளிதாக்குவதற்கும் இரு நாட்டு மக்கள் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு உறுதியான வழியாகவே இந்தத் திட்ங்கள் அமைந்துள்ளன. மேலும் இது சட்டவிரோத வர்த்தகத்தை தடுக்கவும் உதவும்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியாவின் புதுச்சேரிக்கு அருகிலுள்ள காரைக்கலுடன் இணைக்கும் படகு சேவையை ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் இறுதி செய்யப்பட்டது. இதேபோல், கொழும்பு - தூத்துக்குடி இணைப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை 45. 27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்திய உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது. அத்துடன் இந்தியாவுடனான திட்டமிடப்பட்ட விமானங்களுக்காக இலங்கை தனது வான்வெளியை மீண்டும் திறக்கும்போது, பலாலிக்கானவிமானசேவையை இந்தியா மீண்டும் ஆரம்பிக்கும்.

**கேள்வி – 13 ஆவது திருத்த அமுலாக்கம் இலங்கைக்கு எவ்வாறு பயனளிக்கும் என இந்தியா கருதுகிறது?**

பதில் – தெற்காசிய பிராந்திய அமைதி மற்றும் நல்வாழ்வை இந்தியா என்றும் குறித்து நிற்கும். இலங்கை எங்கள் நெருங்கிய நண்பர் மட்டுமல்ல அண்டை நாடும் கூட. அந்த வகையில் இலங்கையின் ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்தியா எப்போதும் உறுதியாக இருக்கும். இன நல்லிணக்கத்தை ஊக்குவித்தலை உள்ளடக்கிய அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் நல்லிணக்க செயல்முறையை நாங்கள் ஆதரிப்போம்.

தமிழர்கள் உட்பட இலங்கையில் அனைத்து சமூக பிரிவினரும் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவத்திற்கான அபிலாஷைகளை அடைவது இலங்கைக்கு பலம் அளிக்கும். எனவே, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை செயற்படுத்துவது இலங்கையில் நல்லிணக்கம், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உதவுவதோடு நாட்டை பலப்படுத்தவும் உதவும் என்றே இந்தியா நம்புகிறது.

**கேள்வி – பிரதமர் மோடி அண்மையில் சென்னைக்குச் சென்றபோது இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து பேசினார். தமிழர் பிரச்சினையில் இந்தியா இனி பெரிய பங்கு வகிக்குமா?**

பதில் – இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் இந்தியாவின் நிலையான நிலைப்பாடு நன்கு அறியப்பட்டதாகும். அதில் எந்த மாற்றமும் இல்லை. 2020 செப்டெம்பர் 26 ஆம் திகதி மெய்நிகர் இரு தரப்பு உச்சி மாநாட்டிலும் உச்சிமாநாட்டிற்குப் பிறகு இரு தரப்பினரும் வெளியிட்ட கூட்டு அறிக்கையிலும் பிரதமர் மோடி இலங்கை தமிழ் பிரச்சினைகள் குறித்து பேசியிருந்தார். இலங்கையுடனான் பல்வேறு மட்டங்களில் இருதரப்பு தொடர்புகளும் இந்த விடயத்தில் உள்ளன. நல்லிணக்கத்தை அடைவதன் மூலமும் அரசியலமைப்பு விதிகளை அமுல்படுத்துவதன் மூலமும் தமிழர்கள் உட்பட அனைத்து இனத்தவர்களின் எதிர்பார்ப்புகளையும் உணர்ந்து கொள்ளும் வகையில் நடக்கும் என இலங்கை மீண்டும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

**கேள்வி – இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்த ஜெனிவா அறிக்கையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?**

பதில் – ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் தொடர்பான விடயங்களிலும் அதன் முன்னேற்றங்கள் குறித்தும் இந்தியா அக்கறையுடன் அவதானத்தில் கொண்டுள்ளது. ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்த விவாதங்கள் இடம்பெறுகின்றன. இந்திய தூதுக்குழு நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருகிறது. இலங்கை தரப்பும் தங்களது மதிப்பீட்டை எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். எனவே சரியான முறையில் இந்தியா செயற்படும் என்பதையே கூற விரும்புகின்றேன்.

**கேள்வி – பிரதமர் மோடி கடந்த ஆண்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் மூன்று அல்லது நான்கு முறை உரையாடியிருந்தார். அதேபோன்று பிரதமர் மோடியின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான தொடர்பு என்ன, குறிப்பாக 2019 ஆம் ஆண்டு டில்லி பயணத்திற்கு பின்?**

பதில் - 2019 இல் பதவியேற்ற பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரும் இந்தியாவுக்கு முதல் பயணங்களை மேற்கொண்டனர். கொவிட் - 19 சவால்கள் இருந்த போதிலும் இரு நாட்டு தலைவர்ளும் இந்த காலகட்டத்தில் தொடர்ந்தும் சிறந்த வகையில் தொடர்பிலிருந்தனர். இந்த உறவின் சிறப்பம்சமாக 2020 செப்டெம்பரில் பிரதமர் மோடியும் பிரதமர் ராஜபக்ஷவும் மெய்நிகர் இருதரப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மேலும் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தொலைபேசி உரையாடல்களையும் நடத்தியிருந்தனர். கடிதங்கள் பரிமாற்றமும் காணப்பட்டது. கொவிட் காலங்களில் கூட, இந்தியா - இலங்கை உறவுகள் மற்றும் ஒத்துழைப்பின் விரைவான வளர்ச்சிக்கு தலைவர்களிடையே அடிக்கடி தொடர்புகொள்வது விலைமதிப்பற்ற வழிகாட்டுதலுக்கு ஒரு ஆதாரமாக இருந்து வருகிறது.

# கொல்லுமா இசை

'மைல் வோல்கா கெரெகெஸ்' (**Mile Olga Kerekes**), ஹங்கேரியின் புதாபெஸ்ட் நகரில் வசிக்கும் ஒரு பாடகி. பிரபலமான நாடக நடிகையும் கூட. ஒருநாள், நிறைந்திருந்த அரங்கத்தில் பாடிக் கொண்டிருந்தார். பார்வையாளர்கள் அந்தப் பாடலில் ஒன்றிப்போயிருந்தார்கள். சோகம் வழியும் இசையும், பாடலின் வரிகளும் அனைவரையும் துக்கத்தின் உச்சத்தில் உட்கார வைத்திருந்தன. உணர்ச்சிவசப்பட்டுப் பாடிக்கொண்டிருந்த வோல்காவின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. அப்படியானதொரு ஏக்கக் குரலை யாரும் கேட்டிருக்க முடியாது. பாடலின் இறுதியை முடிக்காமல், கதறிய படி நகர்ந்தார் வோல்கா.



துக்கம் தாங்காமல் மேடைக்குப் பின்னிருந்த அறையை நோக்கி ஓடினார். கதவைச் சாத்திக் கொண்டார். பார்வையாளர்களும் சோகத்தில் இருந்ததால், வோல்காவைப் புரிந்துகொண்டார்கள். சமாதானமடைந்து வெளியே வரும்வரை காத்திருந்தார்கள். நிமிடங்கள் நகர்ந்தன.

நேரம் அதிகமாகவே ஆகிற்று. வோல்கா வரவில்லை. மனேஜர் அறைக் கதவைத் தட்டினார். கதவுகள் திறக்கப்படவில்லை. நிலைமை விபரீதமென்பதைப் புரிந்துகொண்டார். கதவை உடைக்க உத்தரவிட்டார். கதவைத் திறந்தபோது, இறந்த நிலையில் விழுந்து கிடந்தார் வோல்கா. கையில் விஷக்குப்பியொன்று இருந்தது.

## மாயமில்லை மந்திரமில்லை

### இன்னொரு சம்பவம்

பதினைந்தே வயதான அழகி 'எலிசபெத் குயுலை' (**Elizabeth Guyulai**). ஒருநாள் இரவு வேளை வீட்டிலிருந்து சைக்கிளில் வெளியே சென்றபோது, பொலிஸாரால் மறிக்கப்பட்டாள். "எங்கே போகிறாய்?" எனக் கேட்டபோது, "அம்மாவுக்கு மருந்து வாங்க பார்மசி செல்கிறேன்" என்றிருக்கிறாள். பொலிஸாரிடம் விடை பெற்றவள், நீர் பாயும் பாலமொன்றின் அருகே சைக்கிளை நிறுத்திவிட்டு, நிதானமாகச் சென்று நீரில் குதித்தாள். அடுத்த நாள் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டாள். தாயாருக்கு அவள் எழுதி வைத்த காகிதத்தில், "உன்னைப் பார்த்து எவராவது 'குளூமி சண்டே' பாடலைப் பாடினால், என்னைப் புரிந்துகொள்வாய்" என்னும் இரண்டே வரிகள் மட்டும் இருந்தன.

### மேலுமொரு சம்பவம்

புதாபெஸ்டில், 'கிரீன் ஃப்ரொக்' பிரபலமான உணவகம். மாலை வேளைகளில் அட்டகாசமாக இயங்குவது. ஒருநாள், 'ஜீன் போரொஸ்' (**Jean Boros**) அங்கு நுழைந்தார். அங்கிருப்பவர்களுடன் இணைந்து கொண்டார். உணவகத்துக்கென இசைக்குழுவும் இருந்தது. அவர்கள் பாடல்களைப் பாடினார்கள். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடைபெற்றது. இசைக்குழுவின் பாடகி, பாடலொன்றைப் பாட ஆரம்பித்தார். உற்சாகத்தில் துடித்த உணவகம் சட்டென்று அமைதியானது. அந்தச் சோகப் பாடலைக் கேட்டு, அனைவரும் உணர்ச்சிவசப்பட்டார்கள். பாடல் முடிந்தபோது, எவரும் கைதட்டவில்லை. சிலையாகியிருந்தார்கள். ஆனால், கைதட்டலுக்கு பதில், துப்பாக்கி வெடியோசை கேட்டது. அங்கிருந்தவர்கள் மிரண்டு போனார்கள். தலையில் சுட்டுத் தற்கொலை செய்த நிலையில் வீழ்ந்து கிடந்தார் ஜீன் போரொஸ். உணவக முதலாளி அலறினார், "அந்தப் பாடலை ஏன் பாடினீர்கள்..?"

புதாபெஸ்ட்டில் இன்னொரு சம்பவமும் நடந்தது. காலணிக் கடையின் சொந்தக்காரரான 'ஜோசப் கெல்லர்' தற்கொலை செய்து கொண்டார். அவர் இறந்த இடத்தில், பாடலொன்றின் வரிகளும், ஒரு வேண்டுகோளும் இருந்தது. "பாடலில் சொல்லப்பட்டது போல ரோஜாக்களை என் சவப்பெட்டியினுள் நிறைத்து அடக்கம் செய்யுங்கள்."

இவை மட்டுமல்ல, அடுத்தடுத்து பதினெட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்தன. ஹங்கேரி முழுவதும் கிட்டத்தட்ட நூறு தற்கொலைகள் ஒரேயொரு காரணத்துக்காகவே நடந்தன. அனைத்துத் தற்கொலைகளுக்கும் காரணமாயிருந்தது ஒரு பாடல். 'இருண்ட ஞாயிறு' (**Gloomy Sunday**) எனும் பாடல்தான் அது. 1933 ஆம் ஆண்டு ஹங்கேரியில், பாடலொன்றால் தற்கொலை செய்த சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்திருக்கின்றன. இறந்த ஒவ்வொருவருக்கும் அருகில், அந்தப் பாடல் எழுதிய காகிதமோ, பாடலின் இசைத்தட்டோ இருந்தது. என்ன, ஏதுவென்று புரிந்துகொள்வதற்கு முன்னரே பலர் இறந்து போனார்கள். பாடகியான வோல்காவின் தற்கொலைக்குப் பின்னர்தான் பொலிஸ்துறை விழித்துக்கொண்டது.

'குளூமி சண்டே பாடலை நாடு முழுவதும் தடை செய்கிறோம்' என அறிவித்தார்கள். தற்கொலை காரணத்தால் ஒரு பாடல் தடை செய்யப்பட்டது அதுவே முதன்முறை. அப்படி என்னதான் இருக்கிறது அந்தப் பாடலில்... அதை உருவாக்கியது யார்? 'ஹங்கேரியன் தற்கொலைப் பாடல்' எனும் பெயருடன் உலகமெங்கும் அறியப்பட்ட 'குளூமி சண்டே' உருவானவிதம் மிகச் சாதாரணமானது.

'ரெஸ்சோ செரெஸ்' (**Rezso Seress**) என்பவர் ஹங்கேரியில் வாழ்ந்த பியானோக் கலைஞர். ஓர் உணவு விடுதியில் பியானோ வாசிப்பவராகப் பணிபுரிந்தார். 1933 ஆம் ஆண்டு அவருக்கு 34 வயது பூர்த்தியாகியிருந்தது. காதலித்தவளும் ஏதோவொரு காரணத்தால் அவரைப் பிரிந்து விட்டாள். சோகம் அவரை வாட்டும்போதெல்லாம், பியானோ இசையால் அதை வெளிப்படுத்தினார்.

அந்த உணவு விடுதிக்கு 'லாஸ்லோ யாவொர்' (**Laszlo Javor**) என்னும் பாடலாசிரியர் வந்திருந்தார். தான் எழுதிய ஒரு பாடலுக்கு மெட்டமைத்துக் கொடுக்கும் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். பியானோவில் சோக கீதங்களைப் பொழிந்துகொண்டிருக்கும் ரெஸ்சோவே தனது பாடலுக்கு மெட்டமைக்க உகந்தவர் என்பதைப் புரிந்து கொண்டார். தன் கோரிக்கையை ரெஸ்சோவுக்குச் சொன்னார். அப்போதுதான் அற்புதமான 'குளூமிசண்டே' பாடல் உருவானது.

தான் பணிபுரியும் உணவு விடுதியில் 'குளூமி சண்டே'யை இசைக்கச் செய்தார். மெல்ல அது மக்களுக்குப் பிடிக்க ஆரம்பித்தது. பின்னர் இசைத்தட்டாகவும் வெளியிடப்பட்டது. அதுவே தற்கொலைகளுக்கும் காரணமானது. பாடல் பிரபலமாகும்போது, ரெஸ்சோவும் பிரபலமானார். கூடவே தற்கொலைகளும் சேர்ந்து கொண்டன. பாடலின் பிரபலத்துக்கு அதுவும் காரணமானது. அந்த அடையாளத்தை ரெஸ்சோ விரும்பவில்லை. அவர் பிரபலமானதும், அவரைப் பிரிந்த காதலியுடன் மீண்டும் இணைவதற்கான சந்தர்ப்பம் உருவானது. இசைத்தட்டை வெளியிட்டவரே இருவருக்குமான சமாதானத்தை உருவாக்கினார். குறித்த ஒருநாளில் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சந்திப்பதற்கு முதல் நாள் ரெஸ்சோவின் காதலி, தனிமையிலிருந்தபடி 'குளூமி சண்டே'யைக் கேட்டார். மறுநாள் அவரது அறையைப் பார்த்தபோது, அங்கே தற்கொலை செய்து இறந்து கிடந்தார். பாடலின் சோகமா, ரெஸ்சோவை இவ்வளவு நாளும் தவிக்க வைத்த குற்றவுணர்ச்சியா? தெரியவில்லை. அவருகேயிருந்த காகிதத்தில் இரண்டே சொற்கள் மட்டும் எழுதப்பட்டிருந்தன. '**Gloomy Sunday.**' எல்லாமே முடிந்துபோனது. யாருக்காக அந்தச்சோகதீதம் உருவாக்கப்பட்டதோ, அவரும் தற்கொலை செய்து கொண்டார்.

இப்படியானதொரு முடிவை ரெஸ்சோ எதிர்பார்க்கவில்லை. யாருக்கெல்லாமோ நடந்ததாகக் கேள்விப்பட்ட தற்கொலைகள், தன்னையே நெஞ்சில் குத்துமென்று அவர் நினைக்கவில்லை. பல வருடங்கள் கழித்து, அடுக்குமாடிக் கட்டடத்திலிருந்த தன் வீட்டின் ஜன்னல் வழியாகக் குதித்து, தற்கொலை செய்துகொண்டார். இத்துடன் அனைத்தும் முடிந்திருக்க வேண்டும். ஆனால், முடியவில்லை. எதிலும் பணம் பார்க்கும் வியாபாரிகள் உலகமாயிற்றே! அமெரிக்காவில் அப்படிப்பட்ட வியாபாரிகள் அதிகமே! 'ஹங்கேரியன் தற்கொலைப் பாடல்' என்று விளம்பரப்படுத்தி, ஆங்கிலத்திலும் 'குளூமி சண்டே' வெளியிடப்பட்டது. அமெரிக்காவிலும் தற்கொலைகள் விரட்ட ஆரம்பித்தன.

இப்போது, நம் முன்னால் இருக்கும் கேள்வி, 'என்ன ஒளிந்திருக்கிறது அந்தப் பாடலில்?'

இசையால் அல்லது பாடலால் தற்கொலைகள் நடைபெற முடியுமா? ஒரு நாளும் முடியாது. இசை அற்புதமானது. மனிதனை ஆற்றுப்படுத்தும் அபூர்வக் கலைவடிவம். இசை யாரையும் கொல்லாது. இசை மனதுக்கானது என்பது உண்மைதான். ஆனால், ஒருவரைத் தற்கொலை நோக்கிக் கொண்டு செல்ல இசை மட்டுமே காரணமாகாது. உலகில் எத்தனையோ சோக இசைகள் இருக்கின்றன. தமிழிலும் இருக்கின்றன. அவை எவரையும் தற்கொலைக்குத் தள்ளியதில்லை. 'அப்படியென்றால், குளூமி சண்டே பாடலால் தற்கொலைகள் நடந்தன என்பது பொய்தானா?' இல்லை, அவையும் நிஜமானவைதான். ஏதோவொன்றைத் தொலைத்த நிலையில், மன உளைச்சலுக்கு உள்ளாகும் மனிதர்களுக்குச் சோக இசைகள் துணையாக இருக்கின்றன.

'நான் தனியானவன், எனக்கென்று யாருமில்லை' என்னும் நினைப்புத் தோன்றியதுமே, அவர்கள் பெரும்பாலும் சோகப் பாடல்களை நாடுகிறார்கள். 'அவை தன் நிலையைச் சரியாகப் பிரதிபலிக்கின்றன' எனும் முடிவுடன் திருப்தியடைகிறார்கள். மெல்ல மெல்ல அதிலிருந்து வெளியேயும் வந்துவிடுகிறார்கள். ஏதோவொரு தற்செயல் கணத்தில் வெகு சிலர் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

தற்கொலை முடிவுக்கு ஏற்கனவே தள்ளப்பட்டவர்கள், இறுதிக் கணத்தில் கேட்க விரும்புவதும் சோகப் பாடலாக இருக்கலாம். அப்படியான சூழ்நிலைகளிலேயே 'குளூமி சண்டே' பாடலைக் கேட்டு தற்கொலைகள் நடந்திருக்கலாம். இசை ஒருவனைக் கொல்லவே கொல்லாது. தற்கொலைகளுக்கான ஆரம்பப்புள்ளி, அவர்கள் எதை இழந்தார்கள் என்பதில் தொடங்குகிறது. எனவே, தற்கொலைகளுக்கு 'குளூமி சண்டே'யைக் காரணம் சொல்வது சரியானதல்ல.

# எது பொய் ஒழுக்கம்!



ஒரு பணக்கார நண்பருக்கு எப்போதும் ஒரு சந்தேகம்; தீராத சந்தேகம். "நான் இன்று காரில் வந்த போது சிக்னலில் வண்டியை நிறுத்தினான் டிரைவர். உடனே ஒரு யாசகன் கார் ஜன்னல் அருகில் வந்து கையை உள்ளே நுழைத்து, 'ஐயா, தர்மம்!' என்று குரல் கொடுத்தான்.

எனக்கு அவன்மீது பரிதாபம் ஏற்பட்டது. கடவுளின் பாரபட்சத்தை நினைத்து வருந்தினேன். 'நான் வசதியாகக் காரில் செல்கிறேன். இவனோ சாப்பாட்டுக்காக யாசகம் செய்கிறான். கடவுள் ஏன் சிலரைப் பணக்காரராகவும், சிலரை ஏழையாகவும் படைத்துவிட்டான்? இந்தக் கேள்விக்கு யாராவது விடை சொன்னால் எனக்கு ஆறுதலாக இருக்கும்."

இதே கேள்வியை அந்தப் பணக்காரர் அடிக்கடி எழுப்புவார். ஆளாளுக்குத் தங்களுக்குத் தெரிந்த பதிலைச் சொல்வார்கள். ஆனாலும் அவருக்குத் திருப்தி வராது.

ஒரு தினம், சத்சங்கத்துக்கு ஒருவர் தனது பேரனை அழைத்து வந்திருந்தார். அன்றும் பணக்காரர் தனது மாமூலான கேள்வியை நண்பர்கள் முன்வைத்தார். தவிர, தனக்கு அன்று நடந்த சம்பவம் ஒன்றையும் கூறினார்.

அன்று காலையில், அவரது வீட்டுக்கு ஒரு தம்பதியர் மகா ஆசாரமாகப் பளபளவென்று விபூதிப் பட்டையும் மஞ்சளும் குங்குமமுமாக பளிச்சென்று வந்தார்களாம்.

'ஆந்திராவிலிருந்து வருகிறோம். எங்களுக்கு மத்தியான பிக்ஷயை உங்கள் கைங்கரியமாகச் செய்தால் புண்ணியமாயிருக்கும். இரண்டு பேரும் சாப்பிட ஒரு 100 ரூபாயாவது எதிர்பார்க்கிறோம்' என்றார்களாம்.

"அவர்களைப் பார்த்தால் வறுமையானவர்களாகத் தெரியவில்லை. இது மாதிரி விபூதி, குங்குமம் அணிந்து கௌரவப் பிச்சை கேட்பது இவர்கள் தொழில் போலும்! இப்படியான ஏமாற்றுப் பேர்வழிகளை ஆதரிக்கக் கூடாது என்று விரட்டிவிட்டேன்.

கடவுள் ஏன் தான் இப்படி ஒரு சிலருக்கு ஏமாற்றுகிற புத்தியைக் கொடுத்து விடுகிறாரோ?" என்று சபையினரிடம் கேட்டார்.

யாரும் எதுவும் பேசவில்லை. அவரது கேள்வி எல்லோரையும் சிந்திக்கச் செய்து, மௌனமாக்கி விட்டது. அப்போது ஒரு சின்னக் குரல் மௌனத்தைக் கலைத்து, ஒலித்தது.

"என்ன மாமா நீங்க! அந்தப் யாசகனுக்கும் பைசா போடலே இவங்களுக்கும் எதுவும் கொடுக்கலே. 'யாராவது கஷ்டம்னு வந்தா, நம்மளால முடிஞ்ச உதவியை நாம செய்யணும். ஏன் எதுக்கு, நல்லவனா கெட்டவனான்னெல்லாம் ஆராய்ச்சி பண்ணிட்டு, ஒண்ணும் கொடுக்காம இருந்திடக் கூடாது. பாவமோ, புண்ணியமோ அவனோட சேர்த்தி' அப்படின்னு எங்க பாட்டி சொல்லுவா!" என்றான் அந்தக் குட்டிப் பையன் வெடுக்கென்று.

அவனது பதிலைக் கேட்ட அனைவரும் பிரமித்துவிட்டனர்.

வாயில் வறட்டு வேதாந்தம் பேசிக் கொண்டு, நடைமுறையில் குணக்கேடனாக இருப்பவனை 'மித்தியா சாரன்' (பொய் ஒழுக்கம் உடையவன்) என்று விபரிக்கிறது பகவத்கீதை.

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்
இந்த்ரியார்த்தான்விமூடாத்மா
மித்யாசார: ஸ உச்யதே

நல்ல காரியங்களைச் செய்யாமலிருப்பதோடு, அப்படிச் செய்யாமலிருப்பதற்கு நல்லது போன்ற ஒரு காரணம் கற்பித்துக் கொள்வதும் பொய் ஒழுக்கம்தான். அடிமனத்தில் சுயநலத்தை அனுபவித்துக் கொண்டு, மேலுக்கு நல்லவன்போல் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவன் பொய் ஒழுக்கமுடையவன் என்று அழுத்தமாகக் கூறுகிறது கீதை.

# மூன்றாவது அணி...முந்துவது யார்?


***ஒற்றை பிம்பம்... வலுவில்லாத கிராமப்புறக் கட்டமைப்பு... சறுக்கலில் கமல்!***



பெயரளவில்கூட தங்களை மூன்றாவது அணிஎன்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதில் உஷாராக இருக்கிறார் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன். சமத்துவ மக்கள் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து தான் கட்டமைத்திருக்கும் கூட்டணிக்கு 'முதல் கூட்டணி' என்று பெயரிட்டிருக்கிறார் அவர். தி.மு.கவுடன் பிணக்கு ஏற்பட்டபோது காங்கிரஸ் கட்சியும் அ.ம.மு.கவுடன் சீட் பங்கீட்டில் பிரச்சினை ஏற்பட்டபோது எஸ்.டி.பி.ஐ.கட்சியும் கூட்டணிக்காக கமலை நாடியதே, அவர் மீதான ஈர்ப்பை அதிகப்படுத்தியிருக்கின்றன. இந்தத் தேர்தலில், கட்சிகள் விரும்பும் மாற்று கூட்டணியாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டது கமலின் முதல் வெற்றி என்றே சொல்லலாம். "நகர்ப்புறங்களில் கமல் பிரிக்கும் வாக்குகள் பெரும்பாலும் தி.மு.கவுக்குப் பாதகமாகும். நாடாளுமன்றத் தேர்தலில் 3.8 சதவிகிதம் பெற்ற ம.நீ.ம., இம்முறை பா.ஜ.க.எதிர்ப்பு அரசியல், திராவிடக் கட்சிகளை விரும்பாதவர்களின் வாக்குகள் மூலமாகத் தன் வாக்குகளை கணிசமாக அதிகப்படுத்திக்கொள்ளும். ஆனால், கட்சியின் கட்டமைப்பை கிராமப்புறங்களில் வலுப்பெறச் செய்யவில்லை என்பது கட்சிக்குச் சறுக்கல். குறைந்தபட்சம் உள்ளாட்சித் தேர்தலில் பங்கேற்றிருந்தாலும் கூட, அதற்கான வாய்ப்பு உருவாகியிருக்கும். அதையும் நழுவவிட்டுவிட்டது ம.நீ.ம" என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள். இதே சறுக்கலைத்தான் ம.நீ.ம.நிர்வாகிகளும் கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

நம்மிடம் பேசிய ம.நீ.ம. மூத்த நிர்வாகிகள் சிலர், "கமல் என்கிற ஒற்றை மனிதரின் பிம்பத்துக்காக வாக்குகள் திரளுமே தவிர, ஒரு கட்டமைப்பாக வாக்குச் சேகரிப்பில் ஈடுபடுவதற்கு நிர்வாகிகளோ, தலைவர்களோ கட்சியில் இல்லாதது பின்னடைவுதான். ஒவ்வோர் ஊரிலும் கொடிக்கம்பமும் கிளைக் கழகங்களும் கட்சிகளுக்கு முக்கியம். ம.நீ.ம.வில் இப்படி ஒரு கட்டமைப்பு இன்னும் வலுவாகவில்லை. பரமக்குடி மைந்தனான கமல்ஹாசனே, இந்தத் தேர்தலில் ஆலந்தூரைக் குறிவைத்திருப்பது கட்சியின் கிராமப்புறக் கட்டமைப்பு வலுவில்லாததால்தான். சமூகச் செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்களுக்கு சீட் ஒதுக்கியிருப்பது வரவேற்பைப் பெற்றிருந்தாலும் கட்சிக்குள் விமர்சனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. சங்கைய்யா சொல்யூஷன்ஸ் என்கிற அமைப்புதான் கமலுக்குத் தேர்தல் ஆலோசனைகளை வழங்குகிறது. இந்த அமைப்பைச் சேர்ந்த விஜய் ரி.வி. மகேந்திரன், சுரேஷ் ஐயர் ஆகியோரின் டீம் சொல்படிதான் கமல் நடந்துகொள்கிறார். வேட்பாளர் தேர்வில்கூட இவர்கள் அளித்த 'ஆலோசனைப்படிதான் சீட்டுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இது கட்சிக்குள் புகைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. சரத்குமார், பாரிவேந்தருக்கு தலா 40 சீட் அளித்திருப்பதைத் தவிர்த்திருந்தால், 'சொந்தமாக வேட்பாளர்களைக்கூட திரட்ட முடியவில்லையா?' என்கிற விமர்சனத்தை கமல் உடைத்திருக்கலாம்" என்கிறார்கள்.

***'அண்ணன்தான்... தலைவனில்லை' - சீமானின் பிரச்சினை***



தமிழ்த் தேசியம், கூட்டுப் பண்ணை விவசாயம் என்பதையும் தாண்டி இளைஞர்களோடு, அரசியல் அதிகாரமில்லாத சமூகங்களை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறது சீமானின் அரசியல். தன்னுடைய பிரசாரத்தின் வாசகத்தையே, 'எளிய மக்களின் பெருங்கோபமும் பேராற்றலும்' என்று வைத்திருக்கிறார் சீமான். சீட் விவகாரத்தில் பெண்களுக்குச் சரிசமப் பகிர்வை அளித்திருக்கும் சீமான்,

நாம் தமிழர் கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர், "தி.மு.க. - அ.தி.மு.க.கட்சிகளால் கைவிடப்பட்ட சமூகங்களைக் கையிலெடுப்பதே சீமானின் வியூகமாக இருக்கிறது. ஒன்றரைக் கோடி இளைஞர்கள், கடைநிலை, இடைநிலை சமுதாயத்தினர், பெண்கள் ஆகியோரின் வாக்குகளை நாம் தமிழர் கட்சியின் அடித்தள வாக்குகளாகத் திரளச் செய்வதுதான் வியூகத்தின் பின்னணி" என்றார். கிராமப்புறங்களில் நாம் தமிழர் கட்சி வளர்ந்து வந்தாலும் தி.மு.க. - அ.தி.மு.கவுக்கு மாற்றாக ஒரு பெரிய கட்டமைப்பை உருவாக்காதது அக்கட்சிக்கு இந்தத் தேர்தலில் சறுக்கல் தான். அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்கி, பல்வேறு சமூகங்களைத் தனக்கு ஆதரவான நிலைக்கு நகர்த்தி வாக்குகளாகத் திரட்ட சீமான் முயல்கிறார். ஆனால், கடந்த காலங்களில் மொழிவாரி சிறுபான்மையினர் மீது அவர் தொடுத்த தாக்குதல்கள், சொந்தக் கட்சியினர் மீதே அவர் சீறிய விவகாரங்கள் சீமானுக்குச் சறுக்கலாக அமைந்திருக்கின்றன.

***மாற்றுச் சமூகத்தினருக்கு இடமில்லை... திட்டமில்லாத தினகரன்!***



சட்டப்படி சாத்தியமில்லாத, 'அ.தி.மு.கவை மீட்டெடுப்பது' என்கிற ஒற்றை இலக்குதான் அ.ம.மு.க.பொதுச்செயலாளர் தினகரனின் கைவசமிருக்கிறது. ஒரு கட்சியை மீட்டெடுப்பது என்கிற இலக்கை மட்டுமே கையில் வைத்துக்கொண்டு தேர்தலில் களமிறங்குவதெல்லாம் அசாத்திய துணிச்சல்தான். எஸ்.டி.பி.ஐ., ஒவைசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம்., மருது சேனை, கோகுல மக்கள் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி சமைத்து, தனக்கென ஓர் அணியை உருவாக்கியிருக்கிறார் தினகரன். "தென் தமிழகத்திலும் டெல்டாவிலும் அ.ம.மு.கவுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் 10,000 என்ற எண்ணிக்கைக்குக் குறைவில்லாத வாக்குகள் இருக்கின்றன. பாராளுமன்றத் தேர்தலில், 5.1 வாக்கு சதவிகிதத்தை எட்டினோம். 21 தொகுதிகளில் எங்கள் வேட்பாளர்கள் மூன்றாமிடம் பெற்றனர். சட்டமன்றத் தேர்தலில் 10 சதவிகிதத்தைத் தாண்டுவது தான்எங்கள் இலக்கு. அ.தி.மு.க. தோல்வியடைவது எங்களால் தான் இருக்க வேண்டும் என்பதில் திண்ணமாகப் பணியாற்றுகிறோம். அப்படி நடந்தால் மட்டுமே எங்களது பலம் என்னவென்பது அ.தி.மு.க.தலைவர்களுக்குப் புரியும்" என்றார் அ.ம.மு.க. மூத்த தலைவர்களுள் ஒருவர்.

வழக்கமாகத் தேர்தல், 'வெற்றிபெற்று ஆட்சியமைக்கப் போவது யார்?' என்கிற கேள்விக்கான பதிலை மையமிட்டதாகவே இருக்கும். ஆனால், இம்முறை, 'பிரதானமான இரண்டு கட்சிகளுக்கு மாற்றாக, வலுவாக உருவாகும் மூன்றாவது இடம் யாருக்கு?' என்கிற கேள்விக்கான பதிலையும் எதிர்நோக்கியதாக இருக்கிறது. மூன்று அணிகளில் முந் துவது யார் என்பதை வாக்காளர்கள் தான் தீர்மானிக்கப்போகிறார்கள். விடை, மே 2 ஆம் திகதி தெரிந்துவிடும்!

**ஜூனியர் விகடன்**

# அன்டார்டிகாவில் உடையும் பனிப்பாறையும் ஆபத்தும்!



பனிப்பாறைகள் என்றாலே "டைட்டானிக்" திரைப்படம்தான் நம்மில் பலருக்கும் ஞாபகத்துக்கு வரும். ஒரு பெரிய கப்பலையே துண்டு துண்டாக உடைத்து புரட்டிப் போடக்கூடிய வல்லமை பனிப்பாறைகளுக்கு உண்டு என்பதை நாம் ஜாக் - ரோஸ் காதல் வழியாகத்தான் தெரிந்துகொண்டோம்.

அதன்பிறகு பல காதல் கதைகள் வந்துவிட்டதால் பனிப்பாறைகள் பற்றி நாம் மறந்தே போனோம். ஆனால், சமீப காலமாக சூழலியல் ஆர்வலர்கள் அடிக்கடி முணுமுணுக்கும் பெயராக பனிப்பாறைகள் மாறி வருகின்றன.

பனிப்பாறைகள் குறித்த ஆராய்ச்சிகள் அதிகரிக்கும் வேளையில் அதன் வெடிப்பும் தொடர்கதையாகி வருகின்றன. இவையெல்லாம் நமக்கு சொல்லும் செய்தி என்ன தெரியுமா?! கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்!

## பனிப்பாறைகள்!



புவி வெப்பமடைதல் காரணமாக துருவப்பகுதிகளில் பனிப்பாறைகள் உருகி வருவதாகவும், அதன் விளைவாக பூமி பேரழிவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை மணி ஏற்கனவே அடிக்கப்பட்டு விட்டது.

**British Antarctic Survey** என்ற அமைப்பு கடந்த பத்தாண்டுகளாகவே பனிப்பாறைகள் பெரிய அளவில் பிளவுப்படும் என்று தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வந்தது. இந்நிலையில்தான் கடந்த வெள்ளிக்கிழமை அன்டார்டிகாவின் ப்ரன்ட் **(Brunt)** ஐஸ் பனித்தட்டில், கிட்டத்தட்ட 490 சதுர மைல் (1,270 சதுர கிலோமீற்றர்) அளவு நீளமும், சுமார் 492 அடி தடிமனும் கொண்ட ஒரு பெரிய பனிப்பாறை உடைந்துள்ளது. இது அளவில் நியூயோர்க் நகரத்தை விடப் பெரியது.

ஒரு பனித்தட்டில் இருந்து பனிப்பாறை பிரிந்து போவது கால்விங் **(calving)** என அழைக்கப்படுகின்றது. அன்டார்டிகாவில் முதன் முதலில் கடந்த நவம்பர் 2020இல் இந்தப் பனித்தட்டுகளுக்கு இடையே ஒரு புதிய வெடிப்பு உருவாகி சிறுவிரிசல்களை நோக்கி நகர்ந்தது. அதன்பின் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இந்தப் புதிய பிளவு ஒருநாளுக்கு ஒரு கிலோ மீற்றர் வரை அதி வேகமாக நீண்டு சென்றது.

இந்த **Brunt** பனியடுக்குதான் **British Antarctic Survey** ஆராய்ச்சி நிலையத்தின் தாயகம். 2016ஆம் ஆண்டில், இது போன்ற ஒரு **calving** நிகழ்வின் போது, பேரழிவு நிகழலாம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நிலையம் கொஞ்சம் உள்நோக்கி நிலப்பரப்பிற்குள் நகர்த்தப்பட்டது.

அன்டார்டிக்கின் குளிர்காலத்தின் போது ஒரு நாளின் 24 மணி நேரமும் இருள் சூழ்ந்திருப்பதோடு வெப்பநிலை -60 டிகிரி செல்சியஸ் வரை எதிர்மறையில் செல்லும். எனவே இவ்வாறான ஒரு அசம்பாவிதம் நிகழும் பட்சத்தில் அங்கிருந்து உடனே ஆராய்ச்சியாளர்களை வெளியேற்றுவது கடினம் என்ற காரணத்தினால் பனிக்காலங்களில் அவை மூடப்பட்டன.

அங்கு பணிபுரியும் 12 ஊழியர்களும் 2017முதல் அன்டார்டிகாவின் கோடை மாதங்களான நவம்பர் முதல் மார்ச் வரையிலான காலப்பகுதிகளில் மட்டுமே அங்கு இருப்பார்கள்.

சிறு சிறு பிளவுகளாக இருந்து வந்த ப்ரண்ட் **(Brunt)** ஐஸ் பனித்தட்டின் விரிசல்கள் கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி காலை ஒரு சில மணிநேரங்களிலேயே பல நூறு மீற்றருக்கு பிளவுபட்டு மிகப்பெரிய பனிப்பாறையாக பிரிந்து சென்றுள்ளது. அறிக்கையின்படி கடைசியாக இந்தப் பகுதியில் இவ்வாறான ஒரு நிகழ்வு 1970களின் முற்பகுதியில்தான் நிகழ்ந்துள்ளது.

**BAS** நிலையத்தை சுற்றியுள்ள உயர் துல்லியமான ஜிபிஎஸ் கருவிகளின் தானியங்கி நெட்வேர்க்கைப் பயன்படுத்தி தினசரி இந்தப் பனித்தட்டை **BAS** கண்காணித்து, இது எவ்வாறு சிதைந்து நகர்கிறது என்பதை அளவிடுகிறது. ஐரோப்பிய் விண்வெளி நிறுவனம் **(ESA)**, நாசா மற்றும் ஜேர்மன் செயற்கைக்கோள் டெர்ரா சார்-எக்ஸ் **(German satellite TerraSAR-X)** ஆகியவற்றின் செயற்கைக்கோள் படங்களும் இவற்றைக் கண்டறியப் பயன்படுத்தப்படுகின்றன.

## சரி, பனித்தட்டுக்கள் என்றால் என்ன? எதற்காக சூழலியலாளர்கள் இதை கண்காணிக்கிறார்கள்?

பனித்தட்டுகள் **(Ice Shelf)** என்றால், ஒரு நிலப்பரப்புடன் நிரந்தரமாக இணைந்திருக்கும் மிதக்கும் பனித்தகடுகள் **(Ice Sheets)** அல்லது பனிக்கட்டிப் படலம் என்று அர்த்தம். உலகின் பெரும்பாலான பனித்தட்டுகள் அன்டார்டிகா கடற்கரையையே காதலுடன் கட்டிப்பிடித்திருக்கின்றன. இதுதவிர கிரீன்லாந்து, ரஷ்யாவின் ஆர்க்டிக் வட்டம் மற்றும் கனடா போன்ற இடங்களிலும் இவை காணப்படுகின்றன.

நாம் **Ice Age** எனும் கார்ட்டூன் திரைப்படத்தை பார்த்திருப்போம். **Ice Age** காலப் பகுதியில் வாழ்ந்த விலங்குகளையும் அதன் வாழ்க்கை முறையையும் சொல்லும் அந்தத் திரைப்படத்தின் பல பாகங்கள் தொடர்ந்து வெளிவந்தன.

எதிர்காலத்தில் வரப்போகும் அதன் இறுதிப்பாகத்தில் நாமெல்லாம் ஒரு கார்ட்டூன் கதாபாத்திரமாகவே வாழப் போகிறோம். ஏனெனில் இந்தப் பூமியின் கடைசி **Ice Age** காலத்தில்தான் (அதன் பின்னர் அழிவுதானே!) நாம் தற்போது வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

கிளேசியர் எனப்படும் பனி ஆறுகள் பல மில்லியன் ஆண்டுகளாக நமது பூமியை சமநிலையாக வைத்து அழகுபடுத்தி வந்துள்ளது. கிளேசியர்கள் உருகி, பரவி, பூமியின் மேற்பரப்பை ஒரு கைதேர்ந்த சிற்பியைப் போல செதுக்கி, இன்று நாம் காணும் பல இயற்கைக் காட்சிகளை உருவாக்குகின்றன.

ப்ளீஸ்டோசீன் பனி யுகத்தின் போது **(Pleistocene Ice Age)**, பூமியின் மூன்றில் ஒரு பங்கு நிலம் பனிப்பாறைகளால் மூடப்பட்டிருந்தது. ஆனால் இன்று பூமியின் பத்தில் ஒரு பங்கு நிலம் மட்டுமே பனிப்பாறைகளால் மூடப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் இந்த பனி ஆறுகள் தற்போது கரைந்து மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

சரி, எங்கோ உலகத்தின் ஒரு மூலையில் உள்ள இந்த பனிப்பாறைகள் உருகுவதால் நமக்கென்ன என்று பலருக்கும் தோன்றலாம். **Butterfly effect** என சொல்லப்படும் பட்டாம்பூச்சி விளைவு பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு பட்டாம்பூச்சி அதன் இறக்கைகளை மடக்கி விரிப்பதன் மூலம் ஒரு சூறாவளியை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுவது போல, சிறிய விடயங்கள் ஒரு சிக்கலான அமைப்பில் நேரியல் அல்லாத தாக்கங்களை ஏற்படுத்தும். நமக்கு எட்டமுடியா தூரத்தில் எங்கோ இருக்கும் துருவங்களில் பனிப்பாறை உருகுவதும் நம் வாழ்வில் நேரடியாக இல்லாத பல விளைவுகளை ஏற்படுத்தும்.

அதிகரிக்கும் தட்பவெப்பம் இந்தப் பனிப்பாறைகளை உருக வைத்து நன்னீரை கடலின் உப்பு நீருடன் கலக்க வைக்கிறது. இதனால் பூமியில் வாழும் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் தேவையான நன்னீர் அளவு குறைகிறது. அதிகளவிலான நன்னீர் கலப்பு கடலின் ஈக்கோ சிஸ்டத்தின் அமைப்பை குலைப்பது மட்டுமல்லாது கடல் மின்னோட்டத்தையும் பாதிக்கின்றது.

அதிகரித்துச் செல்லும் கடல் மட்டம் இப்படியே தொடருமாயின் கரையோர நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி, உலக மக்கள்தொகையில் 40 சதவிகிதம் பேர் வரை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவார்கள்.

## உண்மையில் இந்தப் பனித்தட்டுகளுக்குத் தற்போது என்னதான் நடக்கிறது?

கடந்த முப்பது ஆண்டுகளில், அன்டார்டிக் பகுதியில் தொடர்ச்சியாகவே அசாதாரண பனித்தட்டுகள் இடிந்து விழுவதை விஞ்ஞானிகள் கவனித்துள்ளனர். எனவே பனித்தட்டுகள் விரிசலடைந்து பெரிய பனிப்பாறைகளை விடுவிப்பது ஒன்றும் **(calving)** வழக்கத்திற்கு மாறானதல்ல என்றாலும், **ice shelves** களில் முதலில் விரிசல்கள் மெதுவாக உருவாகும்போது, அந்த செயல்முறை பொதுவாக பல மாதங்கள் முதல் ஆண்டுகள் வரை எடுக்கும். ஒரு பனிப்பாறை பிரிந்து உடைந்தால் **Ice Shelves** மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப பத்தாண்டுகள் பல ஆகும்.

ஆனால், சமீபத்திய ஆண்டுகளில், அன்டார்டிக் துருவப் பகுதிகளிலும் கனடாவின் வடக்கு கடற்கரையிலும் உள்ள பனித்தட்டுகள் விரைவாக சிதைவடைந்து வருகின்றன. மார்ச் 2008இல், அன்டார்டிகாவில் உள்ள வில்கின்ஸ் ஐஸ் ஷெல்ஃப் **(Wilkins Ice Shelf)** 400 சதுர கிலோமீற்றருக்கும் (160 சதுர மைல்) மேல் பிரிந்து சென்றது. அதைத் தொடர்ந்து அந்தக் கோடைப் பருவத்தின் பிற்பகுதியில், வடக்கு கனடாவின் எல்லெஸ்மியர் தீவில் பல பனித்தட்டுகள் சில நாட்களில் தொடர்ச்சியாக உடைந்தன.

தற்போது பல மைல் தூரத்துக்கு உடைந்து பிரிந்துள்ள ப்ரன்ட் **(Brunt)** ஐஸ் பனித்தட்டு சூழலியலாளர்களுக்கு மட்டுமல்ல நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களுக்குமான ஓர் எச்சரிக்கை மணிதான்.

பாறைகள் நம் கண் முன்னே உடைந்து நொறுங்கிக்கொண்டிருக்கின்றன. நாம் எப்போதும்போல வேடிக்கைதான் பார்க்கவேண்டியிருக்கிறது.

# கடல் புறா

## அமைதியும், அபாயமும்

காலத்தின் பதிவு 61



சாண்டில்யன்

அத்தனை இயற்கைப் பாதுகாப்பை மீறி அறையின் சாளரத்தில் ஏறிக்குதித்து உள்ளே நுழைந்த அந்தத் திருடன் யாரென்பதைச் சந்தேகத்துடன் பார்ப்பது போல் அந்தி வேளையிலே விகசித்துவிட்ட கொடியின் மலர்கள் சில தங்கள் பூங்கண்களை அகல விரித்து உள்ளே எட்டிப் பார்த்தன.

சாதாரணமாக இயற்கையின் கவர்ச்சி எழிலில் இதயத்தைப் பறிகொடுக்கும் இயல்பு வாய்ந்த காஞ்சனாதேவி மட்டும் அந்த இரவு நேரத்தில் தூங்காவிட்டாலும் அஞ்சன விழிகளைகச் சிறிதும் திறக்காமலும் இயற்கை அழகுகளை அள்ளிப் பருகாமலும் செயலற்ற வண்ணமே பஞ்சணையில் படுத்துக் கிடந்தாள். உடல் செயலற்றுக் கிடந்ததேயொழிய உள்ளம் செயலற்றிருக்காமல் பலப்பல எண்ண அலைகளில் புரண்டு கொண்டிருந்ததால் புறக்கண் விழிக்காவிட்டாலும் அகக்கண் பெரிதும் விரிந்து மனம் எடுத்துக்காட்டிய காட்சிகளையெல்லாம் கண்டு கொண்டிருந்தன.

அந்தக் காட்சிகளில் இன்பமும் துன்பமும் காதலும் கலையும் வீரமும் கோரமும் கோபமும் சுபமும் எல்லாமே கலந்து கிடந்ததால் பாவத்தாலும் புண்ணியத்தாலும் சம வலிமையுடன் இழுக்கப்படும் ஆத்மாவின் நிலையற்ற தன்மையிலிருந்து அவள் மனம் கடாரத்தின் பெரிய ஆசார வாசல்களும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் அகண்டமும் அவள் மனக்கண் முன்பு எழுந்ததால் அவள் இதயத்தில் பெருமிதம் சில விநாடிகள் தாண்டவமாடியது. பின்பு தாயாதியான ஜெயவர்மனின் அநீதிகளையும், சாம்ராஜ்ய பீடத்தில் அமர வேண்டிய தன் தந்தையும் தானும் ஒரு சிறு வணிகனின் தயவுக்கு ஏங்கி நிற்கும் நிலைக்கு வந்துவிட்டதையும் எண்ணி ஏக்கத்துக்குச் சில விநாடிகள் இலக்காகியது அவள் இதயம்.

அப்படி ஏங்கி நிற்பது தாங்கள் மட்டுமல்லவென்ற நினைப்பும் எந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் உதவியை நாடி வந்தோமே அந்த சோழ சாம்ராஜ்ய பீடத்தில் ஒருநாள் அமரக்கூடிய இளவலும் அவன் படைத்தலைவரும் கூடத் தங்கள் நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதால் ஏற்பட்ட எண்ணமும் அவள் உள்ளத்திலே எள்ளத்தனை சாந்தியையும் ஏற்படுத்தியது.

அந்த எள்ளத்தனை சாந்தியில் கலந்துகிடந்த படைத் தலைவன் முகம் அவள் மனக்கண் முன் எழவே அவள் இதயத்தில் இன்பம் வெள்ளமெனப் புரண்டது. அவள் நரம்புகள் ஒவ்வொன்றிலும் காதல் சுவையோடி முகத்திலும் படர்ந்து, முகத்தில் ஒரு தெளிவையும் சந்துஷ்டியையும் நிலவ வைத்ததால் அவள் மிதமிஞ்சிய சாந்தியாலும் ஆனந்தத்தாலும் பெருமூச்சு விட்டாள். அதுவரை செயலற்றுக் கிடந்த அவள் கையும் பஞ்சணையில் எதையோ தேடுவதுபோல் தேடி, தேடிய பொருள் அகப்பட்டதால் அதைப் பலமாகப் பிடித்துக்கொண்டது. அப்படிப் பிடித்துக்கொண்டதன் விளைவாக அவள் உணர்ச்சிகள் திடீரெனக் கொந்தளித்து எழவே அவள் துடித்துப் பஞ்சணையில் எழுந்து உட்கார முற்பட்டாள்.

ஆனால் அவள் இருளில் தேடிப் பற்றிய ஆடவனின் கரம் அவளை எழுந்திருக்கவொட்டாமல் தடுத்ததன்றி, "அஞ்ச வேண்டாம், நான் தான்" என்ற சொற்களும் அவள் காதில் ஒலித்தன.

உள்ளத்தின் எழுச்சியாலும் உணர்ச்சிகளின் தூண்டுதலாலும் அவள் கனவில் தேடிய கை நனவில் கிடைத்ததானாலும் அப்படிக் கையைப் பற்றிப் பஞ்சணையில் தன் அருகில் உட்கார்ந்திருந்தவன் தன் உள்ளத்தையெல்லாம், கொள்ளை கொண்ட இளைய பல்லவனேயென்றாலும் அஞ்ச வேண்டாம் என்ற சொற்கள் உண்மையில் அவள் அச்சத்தை அறவே வெட்டிவிடுவதே நியாயமென்றாலும், அந்த நியாயத்திற்குப் புறம்பாகவே நடந்துகொண்ட அவள் மனம் உண்மையில் அவள் சிந்தையில் அச்சத்தையே விளைவித்ததால் சில விநாடிகள் என்ன செய்வதென்று அறியாமல் அவள் பஞ்சணையில் படுத்தே கிடந்தாள்.

நள்ளிரவில் ஓர் ஆடவன் கள்ளத்தனமாய்த் தன் கட்டிலின் முகப்பில் உட்கார்ந்திருப்பது எத்தனை முறை கேடு, எத்தனை விபரீதம் என்பதை நினைத்ததால் அவள் மனத்தின் சஞ்சலம் எத்தனையோ மடங்கு அதிகமாகவே, சஞ்சலத்தைக் குறிக்கும் பெருமூச்சு ஒன்றையும் விட்டாள் அவள். அந்தச் சஞ்சலத்தோடும் அச்சத்தோடும் சில விநாடிகள் மௌனமாகப் படுத்துக் கிடந்த அந்த அஞ்சன விழியாள் தன் நெஞ்சத்தில் அத்தனை சஞ்சலத்தையும் அச்சத்தையும் மீறி இன்பமான ஒரு கள்ளத்தனமும் ஊடுருவி நிற்பதை உணர்ந்து, கூடிய வரையில் நெறியைத் தகர்த்தெறிய உணர்ச்சிகள் எத்தனை துணை செய்கின்றன என்பதை எண்ணி இயற்கையின் சக்தியைக் குறித்துப் பெரிதும் வியந்தாள்.

அவளுக்குச் சஞ்சலம் இருந்தது கடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி. கள்ளத்தனம் இருந்தது உள்ளத்திலோடிய எண்ணங்களின் விளைவாக வியப்பு இருந்தது. எண்ணங்களைத் தடுக்க முடியவில்லையே என்ற காரணத்தால், ஆனால் இத்தனையையும் மீறிய வெட்கமொன்று அவளை அழுத்திக் கொண்டதே, அது எதனால்? இந்தக் கேள்வியை அவள் தன்னைத்தானே இரண்டு மூன்று முறை கேட்டுக் கொண்டாள்.

உடனே விளங்கவில்லை அவளுக்கு. விளக்கியபோது தைரியமும் அடைந்தாள். பெண்களின் வெட்கம் தான் பெண்களின் நெறியைப் பாதுகாக்கும் பலத்த இரும்புக் கவசம் என்பதைப் புரிந்து கொண்டாள் காஞ்சனாதேவி. "வெட்கம் பயத்தை அளிக்கிறது. பயம் நெறியைக் காக்கிறது. இவை இரண்டும் இல்லாததால் தான் ஆடவர் சீக்கிரம் நெறி குலைந்து விடுகிறார்கள்.

இவை இரண்டும் இருப்பதால் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே காஞ்சனாதேவி இளையபல்லவன் கையிலிருந்து தன் கையை மெள்ள விடுவித்துக்கொண்டு பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் கையைத் தன் கையிலிருந்து திருகி விடுவித்துக் கொண்டதையும் சரேலெனப் படுக்கையில் எழுந்து முழந்தாள்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்துவிட்டதையும் கண்ட இளையபல்லவன் அவளைச் சில விநாடிகள் உற்று நோக்கினான்.

எட்ட இருந்த சாளரத்தைத் தொட்டு நின்ற வெண்மதிக் கரங்கள் உள்ளே முழுவதும் பாயவில்லையென்றாலும் அரைகுறை வெளிச்சத்தை அந்த அறைக்குள் வீசியதால் மங்கலமான மங்கல ஒளி அறையில் பரவி நின்றது.

அப்படிப் பரவி நின்ற ஒளியில் காஞ்சனாதேவியின் மதிவதனம் தெளிவாகப் புரியாவிட்டாலும் அந்தத் தெளிவற்ற தன்மையிலும் அது தனி அழகு வாய்ந்திருந்ததையும் தெளிவாகப் பார்க்க முடியாத தன்மையிலேயே அதில் பெரும் மர்மமும் கலந்திருந்ததையும் அந்த மர்மமே தன் உள்ளத்தை ஆட்டி அலைக்கழிப்பதையும் உணர்ந்தான் இளையபல்லவன்.

மங்கலமான வெளிச்சத்தில் லேசாகத் தெரிந்த காஞ்சனாதேவி அவன் கண்களுக்கு மெல்லிய ஒளித் திரைக்குப் பின் வீற்றிருந்த தெய்வீக மங்கை போலவே காட்சியளித்தாள். "தெய்வீகமான எதுவும் முழுதும் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

அப்படிப் புலப்படாத காரணத்தாலேயே அதில் மர்மம் கலக்கிறது. அப்படித் துளிர்விடும் மர்மமே அதனிடம் ஆசையைத் தூண்டுகிறது. இது இயற்கையின் விசித்திரம்" என்று எண்ணினான் இளையபல்லவன்.

இத்தகைய எண்ணங்களால் நீண்ட நேரம் மௌனமே சாதித்த இளைய பல்லவனிடம் மனம் பாகாய் உருகிய காரணத்தால் மெல்லக் காஞ்சனாதேவியே உரையாடலைத் தொடங்கி, "இரவு மிகவும் ஏறிவிட்டது" என்றாள்.

"ஆம்" ஏதோ பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகப் பதில் சொல்லுவது போலிருந்தது இளையபல்லவன் குரல் ஒலி.

"இந்த வீட்டில் நிசப்தம் நிலவிக் கிடக்கிறது" என்று தொடர்ந்தாள் காஞ்சனாதேவி, அவனுக்குக் கேட்கும் படியாக மிக மெல்லிய குரலில் மனம் சஞ்சலப்பட்டிருந்ததால் வேறு யாரும் அந்த அறையில் இல்லையென்ற உணர்ச்சிகூட இல்லை அவளுக்கு.

"ஆம்" இளையபல்லவன் பழைய பதிலையே சொன்னான்.

(தொடரும்)

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தீர்க்க சுமங்கலி
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : வாணி ஜெயராம்



மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ
மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ
எந்நேரமும் உன் ஆசை போல்
பெண் பாவை நான் பூ சூடிக்கொள்ளவோ

மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ

வான் மேகங்கள் வெள்ளி ஊஞ்சல் போல்
வான் மேகங்கள் வெள்ளி ஊஞ்சல் போல்
திங்கள் மேனியை தொட்டு தாலாட்டுது
குளிர் காற்றிலே தளிர் பூங்கொடி
கொஞ்சி பேசியே அன்பை பாராட்டுது

என் கண்ணன் துஞ்சத்தான்
என் நெஞ்சம் மஞ்சம் தான்
கையோடு நான் அல்லவோ
என் தேவனே உன் தேவி நான்
இவ் வேளையில் உன் தேவை என்னவோ

மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ

பொன் மாங்கல்யம் வண்ண பூ சரம்
பொன் மாங்கல்யம் வண்ண பூ சரம்
மஞ்சள் குங்குமம் என்றும் நீ தந்தது
ஓராயிரம் இன்ப காவியம்
உந்தன் கண்களில் அள்ளி நான் தந்தது

நம் இல்லம் சொர்க்கம் தான்
நம் உள்ளம் வெல்லம் தான்
ஒன்றோடு ஒன்றானது
என் சொந்தமும் இந்த பந்தமும்
உன்னோடுதான் நான் தேடிக் கொண்டது

மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ
என் நேரமும் உன் ஆசை போல்
பெண் பாவை நான் புசூடிக்கொள்ளவோ

மல்லிகை என் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்லவோ

# நிறவெறி தலைவிரித்தாடும் பிரித்தானிய அரண்மனை

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் இளைய மகனான ஹரி, அமெரிக்காவைச் சேர்ந்த நடிகையும் பெண்ணியவாதியுமான மேகன் மார்கெல்லை 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். தொடர்ந்து, அரண்மனை வாழ்க்கையின் ராயல் இமேஜையும் படாடோபத்தையும் தவிர்த்து படு சிம்பிளாக இந்த ஜோடி பொது வெளியில் இயங்க ஆரம்பித்தது பலரையும் ஆச்சரியம் கொள்ளச் செய்தது.

இது ஒருபுறமிருக்க தனக்கு ஏற்பட்ட கருச்சிதைவு உட்பட தன் சொந்த வாழ்க்கை அனுபவங்களை மேகன் மார்கெல் மக்களிடம் வெளிப்படையாகப் பகிர ஆரம்பித்தார்.



இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல, "நானும் என் மனைவியும் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் என்கிற பொறுப்பிலிருந்து விலகுகிறோம்" என்று ஹரி அறிவிப்பை வெளியிட்ட கையோடு, மனைவி, குழந்தையுடன் அமெரிக்காவில் தற்சார்பு வாழ்க்கையை ஆரம்பித்தார். அரண்மனைக்கும் இந்தத் தம்பதிக்கும் இடையிலான பிரச்சினை அப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்தது.

இந்நிலையில்தான், ஹரி தன் மனைவி மேகன் மார்கெல்லுடன் இணைந்து சிபிஎஸ் (CBS) என்கிற அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அண்மையில் பேட்டி கொடுத்திருக்கிறார்.

அமெரிக்கத் தொலைக்காட்சி பிரபலமான ஒப்ரா வின்ஃப்ரே நடத்திய இரண்டு மணிநேர நேர்காணல், கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இந்த நேர்காணலின் பல பகுதிகள் ஆச்சரியங்களும் அதிர்ச்சிகளும் நிறைந்ததாக இருப்பதால் உலகமே உற்று நோக்கியது.

அரண்மனையின் பிரமாண்டத்தையும் அங்கு வாழும் மனிதர்களின் ராஜ வாழ்க்கையையும் பார்த்துவிட்டு, "வாழ்ந்தா இப்படி வாழணும்" என்று நாம் நினைப்போம் தானே?! ஆனால், இந்த வாழ்க்கையில் தனக்கு மூச்சுத் திணறியதாக இப்பேட்டியில் மேகன் கூறியிருக்கிறார்.

"ராஜ வாழ்க்கையில் நான் மிகவும் தனிமையை உணர்ந்தேன். தனித்து விடப்பட்டது போல எண்ணினேன். தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம்கூட எனக்கு ஏற்பட்டது" என்று அதில் சொல்லியிருக்கும் மேகன், இந்த எண்ணத்திலிருந்து வெளிவருவதற்காக அரண்மனையை நாடியபோது அவர்கள் எந்த உதவியையும் செய்யவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்.

"நான் கருவுற்றிருந்த நேரம் அது. எங்களுக்குப் பிறக்கும் குழந்தை கறுப்பு நிறத்துடன் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அரண்மனையில் உள்ளவர்கள் அப்போது அடிக்கடி பேசிக்கொண்டதாகக் கேள்விப்பட்டவுடன் நான் அதிர்ந்து போனேன்" என்று ஒப்ராவிடம் மேகன் வேதனை மேலிடத் தெரிவிக்க, "ஆமாம் அப்படித்தான் நடந்தது" என்று தன் மனைவி சொன்னதை ஆமோதித்திருக்கும் ஹரி, யார் யாரெல்லாம் அப்படிப் பேசினார்கள் என்பது குறித்த விபரங்களைப் பகிர மறுத்திருக்கிறார்.

தங்களது திருமணத்தன்று இளவரசர் வில்லியமின் மனைவியான கேத் மிடில்டனை தான் அழ வைத்ததாக வரும் செய்திகளில் இம்மியளவும் உண்மையில்லை என்று சொல்லும் மேகன், அவர்தான் தன்னை அழ வைத்ததாகவும் பின்னர் நடந்த சம்பவத்துக்கு அவர் வருத்தம் தெரிவித்ததால் அப்பிரச்சினை அப்போதே தீர்க்கப்பட்டு விட்டது என்றும் சொல்லியிருக்கிறார்.

அரச குடும்பத்தின் பொறுப்புகளிலிருந்து விலகி இருக்க முடிவு செய்த அந்தக் கணத்திலிருந்து தன் குடும்பத்தினருக்கும் தங்களுக்கும் இடையில் இடைவெளி விழ ஆரம்பித்ததாகவும் ஹரி மனம் திறந்திருக்கிறார்.

அந்த நேரத்தில் தன் தந்தை சார்ள்ஸ் தனது தொலைபேசி அழைப்புகளைக் கூட எடுக்கவில்லை என்று பேசியிருக்கும் ஹரி, "நான் என் தந்தையை மிகவும் நேசிக்கிறேன்.

அதனால் எனக்கும் என் தந்தைக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் இந்த இடைவெளியைச் சரி செய்வதே என் முக்கியமான இலக்கு" என்றும் நெகிழ்ந்திருக்கிறார்.

அரண்மனை என்னும் அமைப்புக்குள் தான் இத்தனை காலம் கண்காணிப்பு வளையத்துக்குள் இருந்ததாகவும் மேகனைச் சந்தித்து அவரை திருமணம் செய்து கொண்ட பிறகே தான் இதை உணர்ந்ததாகவும் கூறியிருக்கும் ஹரி, பேட்டியின்போதே இதற்காகத் தன் மனைவிக்கு நன்றி தெரிவிக்கிறார்.

"அரச குடும்பத்தின் பொறுப்புகளிலிருந்து விலகி நீங்கள் என்னையும், நம் எல்லோரையும் காப்பாற்றி விட்டீர்கள். உங்களுக்கு என் நன்றி" என்று மேகன் மார்கெல்லும் பதில் நன்றி சொல்லியிருக்கிறார்.


அதுமட்டுமல்லாமல் சில பிரிட்டிஷ் ஊடகங்கள், தன்னைப் பற்றியும் தன் மனைவியைப் பற்றியும் வெளியிட்டு வரும் அவதூறுச் செய்திகளால் தன் மனைவியும் தானும் மனம் நொந்து போயிருப்பதாகவும் பேட்டியில் ஹரி சொல்கிறார்.

மறைந்த தன் அம்மா குறித்து நேர்காணலில் நெகிழ்ச்சியுடன் பேசவும் இவர் தவறவில்லை. "பிரச்சினைகள் எங்களைத் துரத்துகின்றனதான். ஆனால், நான் என் மனைவியின் கையைப் பிடித்தபடி நிம்மதியுடன் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். இதே அன்பும் நம்பிக்கையும் என்னிடமிருந்து என் மனைவிக்குக் கிடைக்கிறது.

ஆனால், அம்மா ஒற்றை மனுஷியாக அனைத்தையும் எதிர்கொண்டார். அம்மா விட்டுச் சென்றதை நான் தொடர்கிறேன். எங்களது இப்பயணம் முழுவதும் அம்மா எங்களுடன் இருப்பதாக நான் உறுதியுடன் நம்புகிறேன்" என்று மனம் கலங்கிப் பேசியிருக்கிறார் ஹரி.

தங்கக் கூண்டிலிருந்து விடுதலை பெற்ற ஜோடிப் பறவைகளின் சிறகுகள் உயர மிதக்கின்றன காற்றில்!

# ஆதிக்கு ஜோடியாகும் நிக்கி கல்ராணி



உடன் ஜோடியாக நடித்தவர்களுடன் நடிகர், நடிகையர் காதலில் விழுவது திரைத்துறையில் ஒன்றும் புதிதில்லை. ஆனால் ஒரு சிலர் வெளிப்படையாகக் காதலை ஒப்புக்கொள்வார்கள். ஒரு சிலர் வதந்திகளுக்கு கருத்து தெரிவிக்காமல் திருமணத்தின் போது தான் வாயைத் திறப்பார்கள். மேலும் சிலரோ இதுபோன்ற வதந்திகளுக்கு பதிலளித்து காலத்தை வீணாக்க விரும்பமாட்டார்கள். ஆனாலும் ஒவ்வொரு சீசனிலும் ஏதாவது ஒரு ஜோடியின் பெயர் காதல் கிசுகிசுக்களில் சிக்கி விடும்.அந்தவகையில் தமிழ் சினிமாவில் சமீபகாலமாக காதல் கிசுகிசுக்களில் சிக்கி வருகிறது ஆதி - நிக்கி கல்ராணி ஜோடி. தமிழில் மிருகம் படத்தில் நாயகனாக அறிமுகமான ஆதி, தொடர்ந்து ஈரம், அய்யனார், ஆடுபுலி, அரவான், யாகாவாராயினும் நாகாக்க, மரகத நாணயம் என வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடித்து பிரபலமானவர். தற்போது தெலுங்கில் பிசியான நடிகராக வலம்வரும் இவர், பாட்னர், கிளாப், குட் லக் ஷகி போன்ற படங்களில் நடித்து வருகிறார்.இவரும் நிக்கி கல்ராணியும் சேர்ந்து யாகாவாராயினும் நாகாக்க, மரகத நாணயம் போன்ற படங்களில் நடித்தனர். கொரோனா ஊரடங்கு சமயத்தில் ஆதியின் பிறந்தநாளுக்கு நிக்கி கல்ராணி சென்றது, அடுத்தடுத்து இருவருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டது, பின் இருவரும் தனியாக சுற்றுலா செல்ல விமான நிலையம் சென்றது என இவர்களது பெயர் காதல் கிசுகிசுக்களில் சிக்கியது. ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட போதும், இருவரும் ஆம் என்றோ இல்லை என்றோ மறுக்காமல் மௌனம் காத்தது இந்த சந்தேகத்தை மேலும் வலுப்பெறச் செய்தது. இந்நிலையில் மூன்றாவது முறையாக இருவரும் சேர்ந்து நடிக்க உள்ளனர். சுசீந்திரன் இயக்கத்தில் தெலுங்கில் உருவாகும் சிவுடு படத்தில் தான் ஆதிக்கு ஜோடியாக நிக்கி கல்ராணி நடிக்க இருக்கிறார். நடிகர் ஜெய் இசையமைக்கும் இந்தப் படத்துக்கு வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்கிறார்.

# திருமணநாளை கொண்டாடிய ஏ.ஆர்.ரஹ்மான்



தற்போது பொன்னியின் செல்வன், அயலான், பத்து தல என பல படங்களுக்கு இசையமைத்து வருகிறார். இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். அதோடு இவர் கதை எழுதி தயாரித்து வரும் 99 சோங்ஸ் என்ற படம் எதிர்வரும் ஏப்ரல் 16 ஆம் திகதி தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில் இன்று தனது 25ஆவது திருமணநாளை மகிழ்ச்சியுடன் சமூகவலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார் ரஹ்மான். அதில் மனைவி சைராபானுவுடன் தான் எடுத்த ஒரு புகைப்படத்தை பகிர்ந்து 25+1 என்று பதிவிட்டுள்ளார். திரைப்பிரபலங்களும், ரசிகர்களும் ரஹ்மான் - சைரா தம்பதியருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# மாதவன் ஜோடியாக மஞ்சு வாரியர்



கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மலையாள திரையுலகில் முன்னணி நடிகையாக நடித்து வருபவர் நடிகை மஞ்சு வாரியர்.. இருந்தாலும் தமிழில் ஒரு நீண்ட தயக்கத்துக்கு பின்னர், கடந்த 2019இல் அசுரன் படம் மூலம் நுழைந்தவருக்கு அந்தப்படம் மூலம் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. இந்தநிலையில் முதன்முதலாக பொலிவுட்டிலும் அடியெடுத்து வைக்கிறார் மஞ்சு வாரியர்.மலையாளத்தில் மம்முட்டியுடன் அவர் நடித்து மார்ச் 11 வெளியாகியுள்ள "தி பிரிஸ்ட்" பட புரமோஷன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது இந்த தகவலை அவரே உறுதிப் படுத்தியும் உள்ளார். இந்தியில் அறிமுகமாகும் படத்தில் மாதவனுக்கு ஜோடியாக நடிக்க இருக்கிறார் மஞ்சு வாரியார். அறிமுக இயக்குநர் கல்பேஷ் என்பவர் இந்தப்படத்தை இயக்க உள்ளார்.

# முதல் கட்டத்தை தாண்டிய தர்ஷன் - லொஸ்லியா





பிக்போஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமான தர்ஷன் மற்றும் லொஸ்லியா இருவரும் முதல் கட்டத்தை முடித்து அடுத்த கட்டத்திற்கு செல்ல இருக்கிறார்கள்.பிக்போஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமானவர்கள் தர்ஷன் - லொஸ்லியா. இவர்கள் இருவரும் இணைந்து 'கூகுள் குட்டப்பன்' என்ற படத்தில் நடித்து வருகிறார்கள். இந்த படத்தை கே.எஸ்.ரவிகுமார் தயாரிப்பதோடு, தர்ஷனின் தந்தை கதாபாத்திரத்திலும் நடிக்கிறார். மலையாளத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு வெளியாகி சுப்பர் ஹிட்டான 'ஆன்ட்ரொய்டு குஞ்சப்பன் வெர்ஷன் 5.25' என்ற படத்தின் தமிழ் ரீமேக்காக இப்படம் உருவாகி வருகிறது. சமீபத்தில் பூஜையுடன் தொடங்கிய இப்படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு தற்போது முடிந்துள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.இப்படத்தில் நகைச்சுவை நடிகர் யோகிபாபு, யூடியூப் பிரபலம் ராகுல் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். அறிமுக இயக்குநர்கள் சரவணன், சபரி ஆகியோர் இப்படத்தை இயக்கி வருகின்றனர். ஜிப்ரான் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.



# உலக அணிகளை கதிகலங்க வைத்த இலங்கை

**“1996 உலகக்கோப்பை வின்னர், 2003 இல் அரையிறுதி, 2007, 2011... தொடர்ந்து இரண்டு உலகக்கோப்பைகளில் ரன்னர் அப் என கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் கிரிக்கெட்டின் அசைக்கமுடியாத சக்தியாக இருந்தவர்கள் இப்போது தொடர் தோல்விகளால் துவள்கிறார்கள்.”**



மார்ச் 17,1996 இன்னும் சில நாட்களில் இலங்கை கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்றதன் வெள்ளி விழா கொண்டாட்டம்.

90'களில் கிரிக்கெட் ஆடப்பட்ட முறையை மாற்றி எழுதிய அணி இலங்கை..96 உலகக்கோப்பையில் இருந்து அனைத்து அணிகளுக்கும் சிம்மசொப்பனமாக இருந்த அணி. ஜெயசூர்ய, அரவிந்த டி சில்வா, களுவிதாரன, அர்ஜூன ரணதுங்க, சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன்... என இந்தப் பெயர்களைக் கேட்டாலே ரசிகர்கள் அப்போது தூக்கம் தொலைப்பார்கள்.

1996 உலகக்கோப்பை வின்னர், 2003 இல் அரையிறுதி, 2007, 2011... தொடர்ந்து இரண்டு உலகக் கோப்பைகளில் ரன்னர் அப் என கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் கிரிக்கெட்டின் அசைக்கமுடியாத சக்தியாக இருந்தவர்கள் இப்போது தொடர் தோல்விகளால் துவள்கிறார்கள்.

இலங்கை கிரிக்கெட் இப்போது கிட்டத்தட்ட முடங்கிப்போயிருக்கிறது. மூன்று நாட்களுக்கு முன் மூன்று இருபது-20, மூன்று ஒருநாள் போட்டி, இரண்டு டெஸ்ட் என ஒரு முழுமையான தொடரில் விளையாட கரீபியன் தீவில் போய் இறங்கியிருக்கிறது இலங்கை அணி.

ஆனால், இலங்கை அணி விமானம் ஏறும் முன் பல சம்பவங்கள் இலங்கை கிரிக்கெட்டில் நடந்துவிட்டன. இலங்கை கரீபியன் தீவுகளுக்குப் பறக்க 12 மணி நேரங்களே இருந்த நிலையில் பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட முன்னாள் வீரர் சமிந்த வாஸ் பதவி விலகினார். பௌலிங் பயிற்சியாளராக அவர் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே நடந்திருக்கிறது இந்த விலகல்.

### சமிந்த வாஸுக்கும் இலங்கை கிரிக்கெட்டும் என்னதான் பிரச்சினை?

பணம்தான் இருவருக்கும் இடையிலான பிரச்சினை. வாஸுக்கு முன்பாக பௌலிங் பயிற்சியாளராக இருந்த டேவிட் சாகெருக்கு மாதம் 30 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கிக்கொண்டிருந்தது இலங்கை கிரிக்கெட் நிர்வாகம். சமிந்த வாஸ் ஹை பெர்போமென்ஸ் பயிற்சி மையத்தின் தலைவராக கிட்டத்தட்ட 9 இலட்சம் ரூபாய் சம்பளமாக வாங்கிக்கொண்டிருந்தார். இப்போது பௌலிங் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றிருப்பதால் சம்பளத்தில் 5000 அமெரிக்க டொலர் உயர்த்திகொடுக்கும்படி கேட்டார். இலங்கை கிரிக்கெட் வாஸின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை. கடைசி நேரத்தில் பதவி விலகிவிட்டார்.

ஏற்கனவே பல்வேறு சிக்கல்களை சந்தித்துக்கொண்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் வாரியம் இதைத் தவிர்த்திருக்கமுடியும். ஆனால், அவர்கள் செய்யவில்லை. இலங்கை அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் வாரியம் செய்த பல்வேறு ஒப்பந்தங்களை தூசுதட்டி விசாரித்துக்கொண்டிருக்கிறது. இதற்கிடையே முத்தையா முரளிதரனும் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்யவேண்டும் என நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்திருக்கிறார். இப்படிப் பல்வேறு சட்ட சிக்கல்களிலும் இருக்கிறது இலங்கை கிரிக்கெட் வாரியம்.

இதற்கிடையே கடந்த சில மாதங்களில் மட்டும் சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவுக்கு எதிராகத் தொடர்ந்து 2 டெஸ்ட் தோல்வி, இங்கிலாந்துக்கு எதிராக 2 டெஸ்ட் தோல்வி என நான்கு தொடர் தோல்விகளைச் சந்தித்திருக்கிறது இலங்கை அணி. இதனால் ரசிகர்கள் கடுமையாக விமர்சிக்க, இலங்கை விளையாட்டு அமைச்சகம் களத்தில் இறங்கி, இலங்கை கிரிக்கெட் வாரியத்தை வழிநடத்த முன்னாள் கப்டன்கள் அரவிந்த டி சில்வா, குமார் சங்கக்கார, ரோஷன் மஹானாம ஆகியோர் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

இவர்கள் மூவரும் பதவியேற்றதும் செய்த முதல் விடயம் இலங்கை கிரிக்கெட்டுக்கு ஒரு இயக்குநரை நியமிக்க முடிவெடுத்தது. இப்பணிக்கு இவர்களின் தேர்வு முன்னாள் பயிற்சியாளர் டாம் மூடி. இலங்கை அணியின் பயிற்சியாளராக 2005 முதல் 2007 வரை இருந்தவர்தான் டாம் மூடி. இவரின் காலத்தில்தான் இலங்கை அணி நியூசிலாந்து, பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளை அவர்கள் மண்ணிலேயே தோற்கடித்தது. இங்கிலாந்தை 5-0 என வைட்வோஷ் செய்தது. 2007 உலகக்கோப்பை இறுதிப்போட்டிக்கும் முன்னேறியது. உலகக்கோப்பை முடிந்ததும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு டாம் மூடியின் ஒப்பந்தத்தை இலங்கை கிரிக்கெட் வாரியம் நீடித்தது. ஆனால், மூடி குடும்பத்தினருடன் நேரம் செலவழிக்க வேண்டும் என்கிற காரணம் சொல்லி வெளியேறினார்.

### டாம் மூடி என்ன செய்யப்போகிறார்?

டாம் மூடி தற்போது ஐபிஎல் அணிகளில் ஒன்றான சன்ரைஸஸர்ஸ் ஐதராபாத் அணிக்கு பயிற்சியாளராக இருக்கிறார். அதனால் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் முழுநேர இயக்குநராக பணியாற்றமுடியாது எனத் தெரிவித்திருக்கிறார். இதனால் வருடத்துக்கு 180 நாட்கள் மட்டும் இலங்கையில் தங்கியிருந்து, இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகளை சீர்படுத்தக்கேட்டிருக்கிறது டி சில்வா, சங்கக்கார, மஹானாம ரீம். இதற்கு மூடியும் ஒப்புதல் தந்திருக்கிறார். உள்ளூர் போட்டிகள், அண்டர் 17, அண்டர் 19 போட்டிகள் என டாம் மூடி அனைத்தையும் கண்காணித்து சரிசெய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

1996 இல் அர்ஜூன ரணதுங்க தலைமையிலான உலகக்கோப்பை வெற்றி இலங்கையில் கிரிக்கெட்டின் எதிர்காலத்தையே மாற்றியமைத்தது. அதுவரை கொழும்பு, கண்டி, காலி என நகரங்களுக்கான விளையாட்டாக மட்டுமே இருந்த கிரிக்கெட் இலங்கையின் எல்லா மூலைமுடுக்குக்கும் பரவியது. இப்போது இலங்கையின் நம்பிக்கைத்தரக்கூடிய இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் யாழ்ப்பாணத்தில் இருந்து உருவாகியிருக்கிறார். அதேபோல் லசித் மலிங்கவை பிரதியெடுத்தது போல பந்துவீசும் செபாஸ்டியம்பிள்ளை விஜயராஜும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருக்கிறார். இவரை எல்லோரும் யாழ்.எக்ஸ்பிரஸ் எனக் கொண்டாடுகிறார்கள்.

இலங்கை கிரிக்கெட்டில் எழுந்திருக்கும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளையும் ஐ.சி.சி.விசாரித்துவருகிறது. ஏகப்பட்ட வீரர்கள், பயிற்சியாளர்கள், பிட்ச் க்யூரேட்டர்கள் ஐ.சி.சியின் ஊழல் மற்றும் கண்காணிப்பு அமைப்பால் தடை செய்யப்பட்டுள்ளார்கள். 35 கோடிக்கு விலைபோன இலங்கை கிரிக்கெட்டின் டிவி ஒளிபரப்பு உரிமம் இப்போது இதில் பாதித்தொகைக்குத்தான் விற்பனையாகிறது. காரணம் விளம்பரதாரர்கள் குறைந்துவிட்டார்கள்.


எல்லாச் சிக்கல்களில இருந்தும் இலங்கை கிரிக்கெட் நிச்சயம் மீண்டு வரும் என நம்புவோம். டி சில்வா, சங்கக்கார, மஹானாம மீட்பர்கள் எனக் காத்திருப்போம்!

# காதலின் சின்னம் மௌசோலியம் (துருக்கி) ஹாலிகார்னஸஸ்

காதலுக்காக ஆண்கள்தான் அதிகம் மருகுகிறவர்கள், உருகுகிறவர்கள் என்றும் காதலின் நினைவாக ஆண்கள்தான் அழிக்க முடியாத அற்புதச் சின்னங்களை உருவாக்குகிறார்கள் என்றும் பரவலான கருத்து உண்டு. அதற்கு உதாரணமாக தாஜ்மஹாலை அடையாளமாகக் கூறுவார்கள்.

ஆனால் உண்மையில் தாஜ்மஹாலுக்குப் பல ஆண்டுகள் முன்பாகவே தன் காதல் கணவனுக்காக உன்னதமாக கலை நுணுக்கங்களுடன் மிகப்பிரம்மாண்டமாக ஒரு பெண்ணரசியால் உருவாக்கப்பட்டது தான் மௌசோலியம்.

கி.மு.353 இற்கும் 350 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஹாலிகார்னஸஸில் (இன்றைய துருக்கியின் போட்ரம் நகரில்) கட்டப்பட்ட ஒரு கல்லறையின் பண்டைய காலப்பெயர் தான் மௌசோலியம். பெர்சியப் பேரரசின் ஆளுநராக இருந்த மௌசாலஸ் என்பவரின் மரணத்துக்குப் பின் அவருடைய நினைவாக அவரது மனைவி ஆர்ட்டமீசியாவால் இது கட்டப்பட்டது.



கிரேக்கக் கட்டடக் கலை நிபுணர்களான சட்டியோராஸ் மற்றும் பித்யூஸ் ஆகியோரால் இது வடிவமைக்கப்பட்டது.

சுமார் 4.5 மீற்றர் (148 அடி) உயரத்தில் கட்டப்பட்ட இந்தக் கல்லறையின் நான்கு புறங்களிலும் கிரேக்கச் சிற்பக்கலை வல்லுநர்களான லியோச்சரஸ், ப்ரையோச்சிஸ், ஸ்டாகாபஸ், டைமோத்தியஸ் ஆகியோரின் தலைசிறந்த சிற்பங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

மௌசாலியம் என்ற பெயர் மௌசாலியஸுக்காகக் கட்டப்பட்டதால் வந்தது என்றாலும் அதற்குப் பின் அழகுற கட்டப்பட்ட கல்லறைகளை மௌசோலியம் என்று அழைப்பது வழக்கமாயிற்று.

பெர்சிய மன்னன் ஹாக்டமனஸ் மறைவிற்குப் பிறகு அவனது மகன் மௌசோலஸ் பெர்சியப் பேரரசின் ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டான். அவனது ஆளுமையின் கீழ் ஹாலிகார்னஸும் அதைச் சுற்றியுள்ள நகரங்களும் இருந்தன.

மௌசோலஸின் மூத்த சகோதரி அடாதான் அலெக்ஸாண்டரின் வளர்ப்புத் தாய்.

மௌசோலசின் மனைவி ஆர்ட்டமீசியா நிர்வாகத் திறன் கொண்டவள். இருவரது ஆளுகை இருபத்திநான்கு ஆண்டுகள் நீடித்தது. இரண்டு பேருமே ஆடம்பரப் பிரியர்கள். எல்லாவற்றையும் அழகுபடுத்திப் பார்ப்பதற்காக நகரின் வருவாயில் பெரும்பகுதியைச் செலவிட்டனர்.

ஹாலிகார்னஸஸில் இருந்த ஒரு மலை உச்சியில் தாங்கள் இருவரும் இறந்த பிறகு தங்கள் அஸ்திகளை வைத்து பாதுகாப்பதற்காக அழகான கல்லறைகளை தங்களது காலத்திலேயே கட்ட ஆரம்பித்தனர். கி.மு.353 ஆம் ஆண்டு இறுதியில் திடீரென மௌசோலஸ் இறந்து விட்டார்.

நிர்வாகம் ஆர்ட்டமீசியா தலைமையின் கீழ் வந்தது. கணவனின் மீது மிகுந்த அன்பு கொண்ட ஆர்ட்டமீசியா அவனது நினைவாக உலகில் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படாத கல்லறையை மிகுந்த கலைநுட்பத்துடன் கட்டத் திட்டமிட்டாள்.

கிரேக்கம் முழுக்க ஆட்களை அனுப்பி மிகச் சிறந்த கட்டடக் கலை நிபுணர்களையும் சிற்பிகளையும் வரவழைத்தாள். ஆர்ட்டமீஸ் ஆலயத்தை மீண்டும் நிர்மாணிக்கும் பணியிலிருந்த ஸ்க்கோபல்சம் அவர்களில் ஒருவர். (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2253

**சுந்தர்**


Bank இற்கு சென்று பணம் கடன் வாங்கியவர்களை விட...



எழுத பேனா கடன் வாங்கியவர்களே அதிகம்...

**பார்வதி**

கோபம் இருப்பவரிடம் குணம் மட்டும் அல்ல!



நேர்மையும் இருக்கும்!

**லிங்கேஸ்**



உடைஞ்சா எல்லாம் முடிஞ்சுது என்று அர்த்தமில்லை. உடைஞ்சத இன்னும் அழகா சேர்த்து வாழலாம்.

**பிரியா**

பாட்டி:-டேய்! உங்க மிஸ் வர்றாங்க... ஓடி போய் ஒளிஞ்சிகோடா...



பேரன்:-ஐயோ பாட்டி...நீ போய் ஒளிஞ்சிகோ... நீ செத்துடேனு சொல்லி தான் ஒருவாரம் லீவ் போட்டு வீட்ல இருக்கேன்...

**லக்ஷன்**

அடிக்கிற வெயில பார்க்கும் போது...



மண்டைல முடி முளைச்சதுக்கு பதில் செடி முளைச்சிருந்தா...நிழலாவது கிடைச்சிருக்கும்.

**தனுஸா**

டாக்டர்...எனக்கு சுகரும் மனைவியும் ஒன்றுதான்! எப்படிச் சொல்றீங்க...?



ரெண்டையும் என்னால கொன்ட்ரோல் பண்ண முடியலை டாக்டர்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 245

## முயல்கள் வென்றிருக்கின்றன, ஆமைகள் வென்றிருக்கின்றன ஆனால் முயலாமை...?

எமது கற்பனையில் உதயமாகும் சிலவற்றையே எம்மால் முயற்சிக்க முடிகிறது. முயற்சிகளில் சிலவற்றையே எம்மால் வெற்றிகொள்ள முடிகிறது. ஆனால் நாம் வெற்றி கொண்ட அனைத்துமே முயற்சிகளின் முடிவுதான். நடைமுறை வாழ்க்கையில் பல ஆமைகள் வென்றிருக்கின்றன. பல முயல்கள் வென்றிருக்கின்றன. ஆனால் முயலாமை/முயற்சி இல்லாமை வென்றதாக வரலாறு இல்லை.

நாம் விழும் ஒவ்வொரு தடவையும் வெற்றிகரமாக எழுந்துவர நாமாக முயற்சி எடுப்போம். நாம் தூக்கிவிட்ட ஒருவர் எம்மையும் தூக்கிவிட வருவார் என்ற எதிர்பார்ப்பு அர்த்தமற்றது. நடைமுறைச் சாத்தியமும் அற்றது. எமக்கு கைகொடுக்க இன்னொருவர் வரக்கூடும். அவருக்கு நாம் ஒரு மாறும் செய்ய முடியாமலும் போகக் கூடும். உதவிகளும் ஊக்குவிப்புக்களும் பிரதிபலன்களை எதிர்பார்த்து செய்யப்படுபவை அல்ல. அவற்றைச் செய்ய வேண்டியது ஒரு மானிடக் கடமை.

குடும்ப சமூக அமைதிக்கான நெறிப்படுதல்களுக்கான முயற்சிகளும் ஒரு நுட்பமான தொடர் போராட்டமே. எமது கைதவறி பொருட்கள் விழுந்து உடைந்து விடும் பொழுது மனவேதனை கொள்கிறோம். ஆனால் எமது "நாதவறி" வார்த்தைகள் தவறி உறவுகள், குடும்பங்கள் உடைந்து விடும் பொழுது அதன் தாக்கத்தை உணர மறந்து விடுகிறோம். "நா" காக்க முயற்சிப்பதும் ஒரு பெரு முயற்சியே. சில உண்மைகள் உணரப்பட, உணர்த்தப்பட காலதாமதம் ஆகலாம். உண்மை நிலை உணரப்படும் வரை, உணர்த்தப்படும் வரை அது "பொய்" போலத் தோன்றுவது ஒன்றும் புதிர் அல்ல, புதிதல்ல.

அதனை உணர்த்த எடுக்கும் முயற்சிகள் சில சமயம் இலகுவானதாக இருக்காது. இருந்தும் அதற்காக முயற்சிக்காமல் இருக்க முடியாது. எமது முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் வெற்றி பெறுவோம் என்று எம்மை நாம் நம்பாத பொழுது பிறர் எம்மை நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எமது முயற்சிகளின் பொழுது பல சவால்கள் முளைவிடும். இது சர்வ நிச்சயமானது. அந்த சவால்கள் தான் எம்மை சரியான பாதையில் நெறிப்படுத்தும் வழி வாய்க்கால்களாக அமையும். எனவே சவால்களை எதிர்கொள்ள முயலாமல் இருந்துவிட முடியாது.


பிறரின் உண்மையான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்போமாயின் எமது முயற்சிகளின் வெற்றிக்காகவும் பல கரங்கள் ஒன்றிணையும் முயற்சிகள் திருவினையாக்கும்.

நாம் முயலாக இருக்கலாம். ஏன் ஆமையாகக் கூட இருக்கலாம். ஆனால் முயலாமை என்ற பொறிக்குள் அகப்படாமல் இருந்து கொள்ள வேண்டும். ஆரோக்கிய வாழ்வு என்ற இலக்கை அடையவும் முயற்சி எடுப்போம். வெல்வோம் என்று நம்புவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## மண்ணிறச்சீனியும் வெள்ளைச்சீனி போலவே

மண்ணிறச் சீனியை ஒரு அருமருந்து போலவும் உடலுக்கு நன்மை பயக்கும் எனவும் போலியான மிகைப்படுத்தப்பட்ட விளம்பரப்படுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.



மண்ணிறச் சீனியும் வெள்ளைச் சீனி போலவே நீரிழிவு, உடல் நிறை அதிகரிப்பு, உடம்பில் கொழுப்பு அதிகரிப்பு போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வெள்ளைச் சீனி போலவே மண்ணிறச் சீனியும் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மண்ணிறச் சீனி ஒரு ஆரோக்கியமான உணவுப் பொருள் அல்ல. ஒப்பீட்டளவிலே வெள்ளைச் சீனியிலும் பார்க்க மண்ணிறச் சீனியில் சிறிதளவு ஊட்டச் சத்துக்களும் கனியுப்புக்களும் அதிகமாக இருக்கின்றன என்ற ஒரு சிறிய விடயத்தை மூலதனமாக்கி மண்ணிறச் சீனிக்காக பாரிய விளம்பரப்படுத்தல்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக பல நீரிழிவு நோயாளர்களும் பொதுமக்களும் மண்ணிறச் சீனியை அதிகளவு பயன்படுத்தத் தொடங்கியிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்